YARL OSAI
யாழ் ஓசை
பெப் 11-17
வார இதழ்
ஓசை : 01 | நாதம் : 15 | வெள்ளிக்கிழமை 11.02.2011 | வார இதழ் | விலை : ரூபா 15.00

# கிளிநொச்சியில் நிவாரணம் நிறுத்தம் மீள்குடியேறிய மக்கள் கவலை!

**புதுக்குடியிருப்பில் திருடர்களின் கைவரிசையால்**
**வெள்ளத்துக்கு மத்தியிலும் வீடுகளில் தங்கவேண்டிய நிலை**

கிளிநொச்சி,

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியேறியோருக்கு உலக உணவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளமை குறித்து மீள்குடியேறிய மக்கள் தமது கவலையைத் தெரிவிக்கின்றனர். கடந்த வன்னி யுத்தத்தின்போது அதிக இழப்புக்களை சந்தித்து பல்வேறு துன்பங்களை அனுபவித்ததுடன் மீளக்குடியேறி தொழில் (6 ஆம் பக்கம் பார்க்க)



அரச வங்கி ஊழியர்களுக்கு வழங்க இணங்கியுள்ள ஓய்வூதியத்தை உடன் வழங்குமாறு கோரி யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் நேற்று ஒரு மணிநேர அடையாள பணிப் பகிஷ்கரிப்பில் அரச வங்கி ஊழியர்கள் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.

## ஆஸி. நோக்கி இருபடகுகளில் புறப்பட்ட 101 பேர் கைது

இலங்கைத் தமிழர்கள் உள்ளடங்கலாக சட்டவிரோதப் பயணிகள் 101 பேருடன் ஆஸி. நோக்கி புறப்பட்டு வந்து கொண்டிருந்த இரு படகுகள் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் வைத்து அவுஸ்திரேலிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு பிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆஸி. கடற்படைக்கு சொந்தமான (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆர்ப்பாட்டத்தில் குதிக்கிறார் விஜய்!



**தமிழக மீனவர்களின் படுகொலைக்கு எதிராக நாகையில் 22 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்**

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படுவதைக் கண்டித்து நடிகர் விஜய் எதிர்வரும் 22 ஆம் திகதி நாகபட்டினத்தில் கண்டன ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளதாக நாகை, திருச்சி மாவட்ட விஜய் ரசிகர்கள் தெரிவிக்கின்றனர். தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி-கொழும்பு படகு போக்குவரத்து இன்று ஆரம்பம்

தூத்துக்குடி,

இரண்டு ஆண்டுகளுக்குப் பின், தூத்துக்குடி - கொழும்பு இடையேயான படகு மூலம் சரக்கு போக்குவரத்து, இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படுகிறது. கடந்த பல ஆண்டுகளாக தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்கு படகில் உணவுப்பொருட்கள், கட்டுமானப் பொருட்கள் கொண்டுசெல்லப்பட்டன. பின்னர் இலங்கையில் உள்நாட்டு (6 ஆம் பக்கம் பார்க்க)

SMS ஊடான நாளாந்த நாணயப் பரிமாற்ற வீதங்கள்
CUR <இடைவெளி> <Currency Code>
என டைப் செய்து 777 க்கு
SMS செய்யுங்கள்
Dialog

பாரம்பரிய பட்டாடைகளின் சாம்ராஜ்யம்





JEYECHANDRANS
No.433,Galle Road,Colombo-06 Tel:011-4528438/0114528435
www.jeyechandrans.com

noolaham.org | aavanaham.org

# தோற்றுப்போன அனுசரணையாளர் எரிக் சொல்ஹெய்ம்

## - பிரதமர் கூறுகிறார்



"விடுதலைப் புலிகளுடனான அமைதிப் பேச்சுக்களில் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வே அமைச்சர் எரிச் சொல்ஹெய்ம் தனது சொந்த நலன்களுக்காகவே அனுசரணைப் பணிக்கு முயல்கிறார். இனியொரு போதும் அதற்கு அனுமதிக்க மாட்டோம்" என்றார் பிரதமர் டி.எம். ஜயரத்ன.

"சொல்ஹெய்ம் ஒரு தோற்றுப்போன அனுசரணையாளர். புலம்பெயர் தமிழருக்கும் அரசுக்கும் இடையிலான தொடர்பாடல் நபராக அவரை ஒருபோதும் பயன்படுத்தப் போவதில்லை. அவருடைய சேவை எமக்குத் தேவையே இல்லை" என்று பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார். புலம்பெயர் தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 'கலந்துரையாடல் பங்காளி'யாகத் தான் செயற்படலாம் என்று அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு சொல்ஹெய்ம் தெரிவித்த கருத்துக்கே பிரதமர் பதிலளித்துள்ளார்.

சொந்த நலனுக்காகவே அனுசரணைப் பணிக்கு சொல்ஹெய்ம் முயல்கிறார். இனியொரு போதும் அதற்கு அனுமதிக்க மாட்டோம் என்றார் பிரதமர்.

சொல்ஹெய்ம் விவகாரம் குறித்து பிரதமர் தெரிவித்ததாவது:-

சொல்ஹெய்மின் உதவி அரசுக்குத் தேவையில்லை. எதிர்காலத்தில் அவரை அனுசரணையாளராகப் பயன்படுத்தும் நோக்கம் எதுவும் எம்மிடம் இல்லை.

போர் முடிவுக்கு வந்த பின்னர் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் சாதகமான பேச்சுக்களை இலங்கை அரசு நடத்தி வருகிறது. அதில் மூன்றாம் தரப்பு ஒன்றின் தலையீடு ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது.

புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் சமாதானப் பேச்சு நடந்தபோது வெற்றிகரமான அனுசரணையாளராகச் செயற்படுவதற்குத் தவறி இருந்தார். இனி ஒருபோதும் அவரைப் பயன்படுத்தும் எண்ணம் எமக்கு இல்லை. விடுதலைப் புலிகளுக்கு நிதி உட்பட புலம்பெயர் தமிழர்கள் வழங்கிவரும் உதவிகளை வெளிப்படுத்த இதுவரை சொல்ஹெய்ம் தவறி இருக்கிறார். தன்னுடைய சொந்த நலன்களுக்காகவே அவர் அனுசரணையாளராக முயற்சிக்கிறார். அதனை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றார் பிரதமர்.



எனினும் அமைதிப் பேச்சுக்களின் போது தான் பக்கச்சார்பாக நடந்துகொள்ளவில்லை என்பதை அண்மையில் வெளியான விக்கிலீக்ஸ் செய்திகள் நிரூபித்திருக்கின்றன என்று சொல்ஹெய்ம் தான் வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்தார்.

## புதுக்குடியிருப்பில் சேதமுற்ற வீடுகளைத் திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,

போர்க்காலச் சூழ்நிலையால் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சேதமடைந்த 184 வீடுகள் இந்திய அரசாங்கத்தின் வீட்டுத் திட்டத்தின் கீழ் திருத்தி அமைக்கப்பட இருக்கின்றன.

இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ள புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் என். கோணேஸ்வரன் சேதமடைந்த வீடுகளின் விபரங்களை முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபருக்கும் பாதுகாப்புப் படை உயர் அதிகாரிக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

பாதுகாப்புப் படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இறுதியாக நடைபெற்ற உக்கிரமான சண்டையின் போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பெரும்பாலான வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதத்திற்குள்ளாயின.

# போரில் தப்பி 7 வருடங்களின் பின்னர் லண்டன் வந்த தாயார் தீயில் கருகி மரணம்

## மகள் சாட்சியம்



இலங்கையில் போரில் தப்பிய என் தாயார் 7 வருடங்களின் பின்னர் எம்மைப் பார்ப்பதற்காக லண்டன் வந்து தீயில் கருகும் நிலை ஏற்பட்டுவிட்டது என முல்லைத்தீவைச் சேர்ந்த பெண்ணொருவர் லண்டன் ஊடகங்களுக்கு கவலையுடன் தெரிவித்திருக்கின்றார்.

கடந்த வெள்ளிக்கிழமை லண்டன் லூசியம் கிறீனிச் அருகிலுள்ள டெட்போர்ட் பகுதியிலுள்ள 'மரீன் ரவர்' என்ற 16 அடுக்குமாடியில் ஏற்பட்ட தீவிபத்தில் 59 வயதான சந்திராபதி தர்மலிங்கம், 42 வயதான குணாளினி அழகரட்ணம் ஆகியோர் உயிரிழந்திருந்தனர்.

இவர்களில் ஐந்து பிள்ளைகளின் தாயாரான திருமதி சத்திராபதி 2004ஆம் ஆண்டு லண்டன் வந்து சென்ற பின்னர் மீண்டும் தனது பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளைப் பார்வையிட 7 வருடங்களின் பின்னர் வந்திருந்தார். இவர் தனது மைத்துனியான இரண்டு பிள்ளைகளின் தாயாரான குணாளினியைப் பார்வையிடச் சென்றபோதே அங்கு தீ விபத்து ஏற்பட்டிருந்தது.

இவர்களைக் காப்பாற்ற 50 பேர் வரையிலான தீயணைப்புப் படையினர் போராடிய போதிலும் அவர்களைக் காப்பாற்ற முடியாமல் போயிருந்தது.

இச்சம்பவம் தொடர்பில் இணையத்தளம் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இந்த இழப்பு பற்றி செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்துரைத்த சந்திராபதியின் மகளான 38 வயதுடைய நந்தினி தனது தாயாரை 7 வருடங்களின் பின்னர் அதுவும் கொடிய போரில் இருந்து தப்பிவந்த அவரைப் பார்ப்பதில் மகிழ்ச்சி அடைந்திருந்த போதிலும் அந்த மகிழ்ச்சி முழுவதும் அழிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அம்மாவின் இழப்பில் தானும் தனது குடும்பத்தினரும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். தமது தந்தை 2003 ஆம் ஆண்டு இறந்துவிட்ட நிலையில் ஊரில் வாழ்ந்த தாயார் 2004 ஆம் ஆண்டு லண்டனிற்கும் பாரிஸுக்கும் வந்து தம்மைப் பார்த்துவிட்டுச் சென்றதாகவும் மீண்டும் வந்திருந்த நிலையில் இந்த விபத்து நிகழ்ந்திருப்பதாகவும் நந்தினி மேலும் கூறினார்.

நந்தினியின் சகோதரரான 33 வயதுடைய சந்திரலிங்கம் கூறும் போது தனது தாயாரைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவரது சிரித்த முகமே ஞாபகத்திற்கு வருவதாகக் கவலையுடன் தெரிவித்தார்.

தீயில் பலியான மற்றையவரான 42 வயதுடைய குணாளினி அழகரெட்ணத்திற்கு 17 வயதுடைய கோகிலவரதன் 5 வயதான கிஷான் ஆகிய இரண்டு பிள்ளைகள் இருப்பதுடன் தாயகத்திலிருந்து கடந்த 6 வருடங்களின் முன்னரே அவர் லண்டனிலுள்ள தனது கணவர் பொன்னம்பலம் அழகரட்ணத்துடன் வந்து இணைந்திருந்தார்.

இதேவேளை, இவர்கள் இருவரும் தீ விபத்தில் உயிரிழக்கவில்லை எனவும் தீ வைத்துக் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ள பிரித்தானிய காவல்துறையினர் குணாளியின் மாடித் தொடரின் பக்கத்து வீட்டில் வசித்து வந்த 49 வயதான சான்றா கிளார்க் என்பவரைக் கைதுசெய்து கம்பர் வெல் கிறீன் நீதிமன்றில் வாயிலாக சாட்சியம் அளிக்க வைத்துள்ளனர். இவரை மீண்டும் எதிர்வரும் 14 ஆம் நாள் வூளிச் கிறவுன் நீதிமன்றில் முன்னிறுத்துமாறு நீதியாளர் உத்தரவிட்டுள்ளார்.

# வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட 1,21,035 பேர் 523 முகாம்களில்

நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் வடிந்துவருகின்ற நிலையில் தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட மக்கள் முகாம்களில் தங்கியுள்ளனர். இடர்முகாமைத்துவ நிலையத்தின் அறிக்கையின்படி 523 தற்காலிக முகாம்களில் 33 ஆயிரத்து 460 குடும்பங்களை சேர்ந்த ஒரு இலட்சத்து 21 ஆயிரத்து 35 பேர் முகாம்களில் தங்கியுள்ளனர்.

அத்துடன், நாடளாவிய ரீதியில் மூன்று இலட்சத்து 33 ஆயிரத்து 383 குடும்பங்களை சேர்ந்த 12 இலட்சத்து 46 ஆயிரத்து 545 பேர் மொத்தமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்து நிலையம் குறிப்பிட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 3,576 வீடுகள் முழுமையாகவும் 23,156 வீடுகள் பகுதியளவிலும் வெள்ளம் காரணமாக சேதமடைந்துள்ளன.

மாவட்ட ரீதியில் பலர் இன்னும் முகாம்களிலேயே தங்கியுள்ளனர். வெள்ளப் பாதிப்பு காரணமாக இதுவரை 17 பேர் உயிரிழந்துள்ளதுடன், 11 பேர் காயமடைந்துள்ளனர். இருவர் காணாமல் போயுள்ளனர். அம்பாறை மாவட்டத்திலேயே மேற்குறித்த இருவரும் காணாமல் போயுள்ளனர் என்றும் இடர்முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.

திருகோணமலை, அம்பாறை, அநுராதபுரம் மாவட்டங்களிலேயே அதிளவிலான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை மாவட்டத்தில் 3,33,266 பேரும் அநுராதபுரம் மாவட்டத்தில் 3,01,896 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் 2,96,231 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் மக்களும் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் தங்குமிட வசதியில்லாமல் சிரமப்படும் பிறமாவட்ட ஆசிரியர்கள்

நெடுங்கேணி

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் கடமைபுரியும் வெளிமாவட்ட ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படாததையிட்டு ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

2010 ஜனவரி மாதம் வவுனியா வடக்கு, கிளிநொச்சி, துணுக்காய் வலயங்களில் பாடசாலை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடம் பூர்த்தியாகியும் பல பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான விடுதிகள் அமைக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்கள் தினமும் யாழ்ப்பாணம், வவுனியா போன்ற பிரதேசங்களுக்குச் சென்றே தங்கி வருகின்றனர்.

அத்துடன், இங்கு செல்லும் போது வீண் பணச்செலவுகள் அதிகரிப்படுவதுடன் உடல்களைப்பும் ஏற்படுவதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் கற்பித்தல் செயற்பாடுகளை முழுமையாக மேற்கொள்ள முடியவில்லை என தமது கவலையை வெளிப்படுத்துகின்றனர்.

இதனைவிட அதிபர்களும் வலயக் கல்வி அலுவலர்களும் ஆசிரியர்கள் உரிய நேரத்திற்கு சமூகம் தரவேண்டும் என்றும் கற்பித்தல் உபகரணங்களின்றி வகுப்பறைக்குச் செல்லவேண்டாம் எனவும் கட்டளை இடுகின்றனர்.

ஆசிரியர்கள் கற்பித்தல் உபகரணங்களை தயாரித்து யாழிலிருந்தோ வவுனியாவிலிருந்தோ எடுத்துவரும்போது அது சேதமடைகின்றன.

வன்னி மக்கள் தற்போது இடம்பெயர்ந்து தற்காலிகமாகக் கொட்டகைகள் அமைத்தே இருக்கின்றனர். இதனால் அவர்கள் வீடுகளிலும் தங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, வன்னி மாணவர்களின் கல்வியின் வளர்ச்சியில் அக்கறையுடன் செயலாற்றும் ஆசிரியர்களின் நன்மை கருதி சம்பந்தப்பட்ட அமைச்சு இதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



வாதரவத்தை-விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் 'சிசுஉதான' சிறுவர் கணக்கு அலகு திறப்புவிழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட மக்கள் வங்கியின் புலனாய்வுப்பிரிவுப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் அருகில் வங்கியின் மாவட்ட முகாமையாளர் எஸ்.பத்மநாதன், அச்சுவேலி மக்கள் வங்கியின் முகாமையாளர் இ.யோகராசா, வித்தியாலய அதிபர் ஆகியோரை படத்தில் காணலாம். (படம்:- அச்சுவேலி நிருபர்)

# தெல்லிப்பழை பிரதேச கிரிக்கெட் மல்லாகம் ஆர்.டி.எஸ். கழகம் சம்பியன்

ஏழாலை,

வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டியில் ஆண்கள் பிரிவில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் ஆர்.டி. எஸ். விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் இறுதியாட்டத்தில் மோதின. இப்போட்டியில் மல்லாகம் ஆர்.டி.எஸ். விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இரண்டாமிடத்தினை காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் பெற்றது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் தெல்லிப்பழை 'கலை ஒளி' விளையாட்டுக் கழகத்தை தெல்லிப்பழை 'பூமா' விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

மேற்படி போட்டிகள் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# வீடுகளுக்குச் சென்று மக்களை சந்திக்கும் உள்ளூராட்சி சபை வேட்பாளர்கள்

யாழ்ப்பாணம்,

குடாநாட்டில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிட்டு இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களுக்கு ஆதரவு தேடுவதில் தற்பொழுது ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்கள் வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து வருகின்றனர். அத்துடன், தங்களுக்கு வாக்களிக்குமாறும் கோரி வருகின்றனர்.

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள வலி. தென்மேற்கு, வலி. தெற்கு ஆகிய இரு பிரதேச சபைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள், தொகுதி அமைப்பாளர்களுடன் இணைந்து வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைச் சந்தித்து ஆதரவு தேடி வருகின்றார்கள்.

இதேபோல் வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள வலிகாமம் மேற்கு, காரைநகர் ஆகிய இரு பிரதேச சபைகளுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்களுக்கு ஆதரவு தேடுவதற்காக வாக்காளர்களைச் சந்தித்து வருகிறார்கள்.

இதேவேளை, வேட்புமனு நிராகரிக்கப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னத்தில் போட்டியிடும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் முழுவீச்சில் ஆதரவு தேடுவதில் ஈடுபட்டுள்ளார்கள்.

பல குழுக்களாக வீடுகளுக்குச் செல்லும் இவர்கள் தங்களுக்கும் வாக்களிக்குமாறு மக்களிடம் கோரிவருகிறார்கள்.

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

ஏழாலை

புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி பாடசாலை மைதானத்தில் இன்று 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி ச.சிவசக்தியும் சிறப்பு விருந்தினர்களாக புன்னாக்கட்டுவன் வடக்கு கிராம அலுவலர் கோ.பத்மநாதன், புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா சனசமூக நிலையச் செயலாளர் இ.கெங்காதரன், மானிப்பாய் சுன்னாகம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.மெய்யழகன், ஓய்வு பெற்ற அதிபர் க.ஆனந்தராசா ஆகியோரும் கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதனும் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

புகைப்படக் கலைஞர்களே
இலங்கையில் முதல் முறையாக தமிழில் புகைப்பட பயிற்சி முகாம்
அரிய சந்தர்ப்பம்
நழுவவிடாதீர்கள்
mission de vision
Art Club of Photographers & Videographers
Social Welfare Foundation
mdv
Regd No. C/D/S 00109

நவீன டிஜிட்டல், போட்டோகிராபி (Digital Photography) பற்றிய புகைப்பட பயிற்சிமுகாம் (Workshop) தமிழகத்திலிருந்து வருகை தரும் வல்லுனர் திரு. பாரதி அவர்களால் நடாத்தப்படவிருக்கிறது.

| நாள் | | இடம் |
|---|---|---|
| கொழும்பு | : 15/02/2011 | புதிய நகர மண்டபம், கொழும்பு-7 |
| யாழ்ப்பாணம் | : 17/02/2011 | சொர்ணாம்பிகை மண்டபம், 527, நாவலர் வீதி, நல்லூர். |
| வவுனியா | : 19/02/2011 | ஸ்ரீ மதுரா மண்டபம், 190, ஸ்டேசன் வீதி, |

நேரம் : காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை

ஊடக அனுசரணை
VIRAKESARI வீரகேசரி THE PREMIER TAMIL DAILY IN SRI LANKA
YARLOSAI யாழ் ஓசை

குறிப்பிட்ட அளவே இட வசதியுள்ளதால் ஏமாற்றத்தை தவிர்க்க பதிவிற்கு முந்தவும்
மேலதிக விபரங்களுக்கும், பதிவிற்கும்.
R. Sampath 0777-300898 | R. N. Kumar | M. Moorthi | G. Mano | N. Guna

SKILL MIGRATION FOR
CANADA & AUSTRALIA
WITH YOUR FAMILY
Degree, Diploma & Trade Certificate உடன்
2 வருடத்திற்கு மேல் Working Experince உள்ளவர்கள்
குடும்பத்துடன் Canada, Australia வுக்கு குடிபுகலாம்.
14-20 திகதி வரை Selections நடைபெறுகின்றன.
And also we are handling all kind of visas
( Sponsor, Dependant, Parents, Spouse, Reject and Refusal )
• Visit Visa ▶ எல்லா நாடுகளுக்கும் Visa கிடைக்கும் முறையில் Visit Visa File செய்து தரப்படும் Malaysia, India, Australia & Canada etc........
• Student Visa ▶ எல்லா நாடுகளுக்கும் Student Visa, Sponsor, Part time job,Accomandation ஒழுங்குகள் செய்து தரப்படும். (UK - March & May Intake Admission are going on)
Hotline : 0773 049 775
GIEEITH INTERNATIONAL
No. 31 A 32nd Lane, Wellawatta, Colombo - 06.
0759049775 / E-mail - nzrenold@gmail.com
யாழ் தொடர்புகளுக்கு : 0774710287
MMW

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yarl Osai

# யாழ் ஓசை

*2011 பெப்ரவரி 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை*

**இல.117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

Tel: 021-2222730, Fax: 0212222730

E-mail-jaffna@virakesari.lk

# ஆசிரிய உதவியாளர்களின் சம்பள உயர்வு பிரச்சினை கவனத்திற்கொள்ளப்படுமா?

ஒரு சமூகத்தின் கல்வி எழுச்சியில் ஆசிரியர்களின் வகிபங்கு மகத்தானது. அதனால்தான் அவர்கள் சமூகத்தில் மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் வைத்து மதிக்கப்படுகின்றனர்.

துரதிஷ்டவசமாக இலங்கையைப் பொறுத்தவரையில் இன்று ஆசிரியர்கள் போதிய ஊதியம் கிடைக்கப்பெறா சேவகர்களாகவே பணியாற்றி வருகின்றமை கவலைக்குரியதாகும்.

பொருட்களின் விலைவாசி உயர்வு நாளுக்கு நாள் மக்களின் அன்றாட வாழ்வைப் பாதித்துக் கொண்டிருக்கின்ற நிலையில் சகல தரப்பினருமே தமது சம்பள உயர்வு பற்றிக் கவலைப்படுவதும் போராட்டம் நடத்துவதும் சர்வசாதாரணமானது.

அந்தவகையில்தான் இன்று இலங்கையிலுள்ள ஆசிரிய சமூகத்தினரும் தமது சம்பளத்தை உயர்த்துமாறும் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை வழங்குமாறும் தொடர்ச்சியாக பல்வேறு போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இன்று சமூகத்தில் அதிக கவனிப்பாரற்று போதிய ஊதியம் இன்றி பணிபுரிபவர்கள்தான் ஆசிரிய உதவியாளர்களாவர். ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் பாடசாலைகளில் க.பொ.த உயர் தரம் சித்தியடைந்தவர்களை தகுதிகாண் அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களாகச் சேர்த்துக் கொள்வது வழக்கமாகும். அதனடிப்படையில் இலங்கையில் ஆயிரக் கணக்கானோர் ஆசிரிய உதவியாளர்களாகப் பணியாற்றி வருகின்றனர்.

2007 ஆம் ஆண்டில் கூட சுமார் 4700 தொண்டராசிரியர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும் அவர்களுக்கு மாதாந்தம் வெறும் மூவாயிரம் ரூபா மாத்திரமே ஊதியமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் ஆசிரிய உதவியாளர்கள் பணியாற்றி வருகின்ற போதிலும் அவர்களுக்கு வழங்கப்படுவதாக உறுதியளிக்கப்பட்ட சம்பள உயர்வு கூட இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை என சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ள அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கம், சகல ஆசிரிய உதவியாளர்களுக்கும் சம்பள உயர்வும் வாழ்க்கைச் செலவுப் படியும் வழங்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

மாகாண முதலமைச்சர்களின் 27 ஆவது மாநாட்டின்போது ஆசிரிய உதவியாளர்களின் சம்பளம் மூவாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும் என கல்வியமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்திருந்தார்.

ஆனால் அந்த வாக்குறுதி அளிக்கப்பட்டு பல மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் இதுவரை சம்பள அதிகரிப்புக்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் குறித்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் இணக்கங்காணப்பட்ட மூவாயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்குவதற்கும் மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படியை வழங்குவதற்கும் ஆவன செய்யுமாறு இம் மகஜரில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் கல்வி அமைச்சர், நிதியமைச்சர், மாகாண ஆளுனர்கள் மற்றும் முதலமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொருட்களின் விலைகள் ரொக்கட் வேகத்தில் அதிகரித்துச் செல்கின்ற நிலையில் வெறும் மூவாயிரம் ரூபா மாத சம்பளத்துடன் ஒரு மனிதனால் எப்படி வாழ்க்கையைச் சமாளிக்க முடியும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

ஆசிரியர்கள் என்போர் ஏணிக்கு ஒப்பானவர்கள். அவர்கள்தான் ஒவ்வொரு மனிதனையும் வாழ்க்கையில் உயர்த்திவிடுகின்றனர். ஆசிரியர்களின் அர்ப்பணிப்புடனான உழைப்பினால்தான் இன்று எல்லோரும் உயர்ந்த பதவிகளில் அதிக சம்பளத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்க முடிகிறது. ஆனால் அவர்கள் அனைவரையும் உயர்த்திவிட்ட ஆசிரியர்கள் மாத்திரம் குறைந்த சம்பளத்துடன் பொருளாதார ரீதியான பலத்த கஷ்டங்களுடன் தமது வாழ்க்கையை கடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

எனவே ஆசிரிய சமூகத்தினதும் குறிப்பாக வெறும் மூவாயிரம் ரூபா சம்பளத்துடன் அறிவுப் பணி புரியும் ஆசிரிய உதவியாளர்களினதும் சம்பள உயர்வு பிரச்சினை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் கூடுதல் கரிசனை காட்டுவது காலத்தின் தேவையாகும்.

# வல்லரசுகளின் நலன் பேணும் ஆயுதமாக மனித உரிமை மீறல்கள்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

சீனக் கப்பல்கள் வளைகுடாவிலிருந்து அரபிக்கடலூடாக இலங்கையின் தென் பகுதியை கடந்து வங்கக்கடலை அடைந்து, மலாக்கா நீரிணை ஊடாக சிங்கப்பூரை அடைந்து, பசுபிக் சமுத்தரத்தின் மேற்கு கரையூடாக தென் சீன கடலை அடைந்து, தமது துறைமுகங்களை அடைவத்ற்கு பதிலாக மியன்மாருக்கு குறுக்காக சீனா அமைத்துவரும் பாரிய எண்ணெய் எரிவாயு குழாய்கள் தென்சீன நகரான குன்மிங் பகுதியை வங்கக் கடலிலிருந்து இலகுவாக இணைக்க கூடியதாக இருக்கின்றது.

எரிவாயு குழாய் மியன்மரில் சுமார் 135 இனப்பிரிவுகள் வாழ்கின்றன. இவற்றில் 17 இனப்பிரிவுகள் இராணுவ ஆட்சிக்கெதிராக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

இவற்றில் சில பலம்வாய்ந்த ஆயுதக் குழுக்களாகவும் உள்ளன. இந்த ஆயுதக் குழுக்களில் ஒன்றான 'கேரன்' என்ற ஆயுதக்குழு மேலைநாட்டு உதவிகளையும் ஆலோசனைகளையும் பெற்று வருகிறது.

அதேவேளை, 'சான்' என்ற இன்னுமோர் ஆயுதக்குழு தனது பிரதேசத்தை தனது கட்டுக்குள் வைத்திருந்தாலும் இக் குழுவுக்கு மியன்மர் இராணுவத்தின் செல்வாக்கு இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

அத்துடன், மியான்மாரில் போதை செடிகளின் பயிர்ச்செய்கையும் தாராளமாக இடம்பெறுவதாகவும் இதற்கு மியான்மார் இராணுவத்தின் பாதுகாப்பும் இருப்பதாகவும் தாய்லாந்து ஊடாக இந்த போதை பொருட்கள் சந்தைபடுத்தப்படுவதாகவும் தாய்லாந்திலிருந்து வெளிவரும் இடம்பெயர்ந்த மியன்மர் மக்களின் இணைய அறிக்கைகள் கூறுகின்றன.

இதற்கும் அப்பால் மியன்மர் இராணுவத்தின் மனித உரிமை மீறல்கள் மிகக் கொடுமையானது என நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமை பிரசாரகர்கள், அமைப்புக்கள் அவ்வப்போது அறிக்கைகளும் கண்டனங்களும் வெளியிட்டுள்ளன.

மக்களை வருத்தி கடூழியம் புரியவைப்பதும், வரலாற்று வாழ்விடங்களை விட்டு துரத்திஅடிப்பதும், பாலியல் வன்முறையை இன அழிப்பின் ஒரு திட்டமாக கொண்டு செயற்படுவதாகவும் மனித உரிமை அமைப்புகள் கூறிவருவது மட்டுமல்ல மியன்மடர் போர்னூ;குற்ற விசாரணைகளுக்கான ஆணையம் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையில் உருவாக்கவும் போராடி வருகின்றன.

இதேவேளை, அண்மைய 'விக்கிலீக்ஸ்' இணையத்தின் அறிக்கைகளின் படி மியான்மர் அரசாங்கம் வடகொரியாவிலிருந்து பெற்றுகொள்ளப்பட்ட தொழில்நுட்ப உதவிகளுடன் அணு ஆய்வுகளில் ஈடுபடுவதற்குரிய திட்டங்களும் வெளிவந்துள்ளன.

மியன்மாருக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு அண்மைக்காலமாக வலுவடைந்துவருவதாக செய்திகள்வெளிவந்தன. அச்செய்திகளில் இலங்கை அரசு விடுதலைப்புலிகளை வெற்றிகொண்ட தந்திரங்களை பரிமாறிகொள்வது குறித்த பேச்சுகள் முதன்மையானதாக அமைந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

சுதந்திரமடைந்த காலத்திலிருந்து மியான்மார் இனக்குழுக்களின் ஆயுதப் போராட்டத்தினால் பெரும் தொல்லைகளுக்குள் ஆளாகிவருகிறது. இலங்கை அண்மையில் வெற்றிகண்டது போல பலகால பிரச்சினையை அனைத்துலக, பூகோள நிலைமைகளை சாதகமாக பயன்படுத்தி தனது நாட்டின் பிரச்சினைக்கு இராணுவ தீர்வு காண்பதில் மியன்மர் அதீத நாட்டம் காட்டி வருகிறது.

ஆனால், இலங்கை போல் அல்லாது மியன்மாரின் முக்கியத்துவம் அதனுடைய எண்ணெய் வளத்தினூடா கவே பார்க்கப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல சீன முதலீடுகளும் இந்திய முதலீடுகளும் கூட மியன்மாரில் அதிகரித்துக் காணப்படுகிறன. குறிப்பாக, சீனத்தலையீட்டின் அதி கரிப்பால் மனித உரிமைக்கும் மக்களாட்சிக்கும் மியன்மார் இராணுவ ஆட்சித்தலைவர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை என்ற கருத்து மேலைநாட்டு ஆய்வாளர் கள் மத்தியில் நிலவினாலும் உலகிலிருந்து தனிமைப்படுத்தும் போது வட கொரிய நிலைக்கு மியன்மார் சென்று விட கூடாது என்பதில் கவனம் செலுத்து கின்றனர்.

மியன்மார் என்ற புதிய பெயரையே ஏற்றுக்கொள்ளா விட்டாலும் கூட, மியன்மர் உடன் இணைந்து பயணித்து மக்களாட்சி விழுமியங்களையும் மனித உரிமைகளையும் ஊக்குவிக்கும் கொள்கையையே அமெரிக்கா கூட கடைப்பிடிக்க வேண்டும் என இவ்வாய்வாளர்கள் பரிந்துரை செய்துவருகின்றனர். கோடிக்கணக்கான பணத்தை இராணுவத் தலைவர்களுக்கு அள்ளி கொடுக்கும் அதேவேளை ஒரு வேளை ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் என்ற வகையில் சீனாகூட தனது கேந்திர நிலையை தக்க வைத்துக் கொள்வதற்கு ஏற்றவகையில் மியான்மரில் மக்களாட்சி தேர்தல்களை ஆதரிக்கவேண்டும் என அறிக்கை வெளியிட்டுள்ளது என்பதும் கவனத்திற்குரியது.

**லோகன் பரமசாமி**

இவ்விடத்தில் தமிழராகிய நாம் தெரிந்து கொள்ளக்கூடிய ஒன்றுள்ளது. அது என்னவெனில், நேரடி இராணுவத் தலையீட்டாலோ, பொருளாதார முடக்கத்தாலே தாம் விரும்பியபடி மியான்மர் இராணுவ தலைவர்களை பணியவைக்க முடியாத நிலையில் மேலைநாட்டு சக்திகள் மனித உரிமை என்ற ஆயுதத்தை கையிலெடுத்துள்ளன. மனித உரிமைக்கு மதிப்பளிக்கும்படி அழுத்தம் கொடுப்பதிலும் பார்க்க, ஏற்கனவே மனித உரிமை மீறல்கள் புரிந்த இதர நாட்டு தலைவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுக் கொடுப்பதன் மூலமும் மேலைநாடுகள் மியான்மார் தலைவர்களை தம் கட்டுக்குள் கொண்டுவரக் கூடிய வாய்ப்புக்களும் உள்ளன.

****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்பெக்ட்ரம் ஊழல் விவகாரம் குறித்து பிரதமர் வாய் திறக்காமல் இருப்பது ஏன் என்று எனக்குப் புரியவேயில்லை: ஜெயலலிதா



சென்னை

ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து பொருளாதார வல்லுநரான இந்தியப் பிரதமர் வாய் திறக்காமல் இருப்பது ஏன் என்று எனக்கு புரியவில்லை என அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

மதிப்புமிக்க, அரிதான 70 மெகாஹெர்ட்ஸ் எஸ். பாண்ட் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு மூலம் இந்திய நாட்டிற்கு இரண்டு இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று ஊடகங்களில் வந்துள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது.

மொபைல் பிராட் பேண்ட் சேவையை 20 ஆண்டுகளுக்கு எந்த விதக் கட்டுப்பாடும் இல்லாமல் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், 70 மெகாஹெர்ட்ஸ் எஸ். பாண்ட் அலைக்கற்றை பெங்களூரைச் சேர்ந்த தேவாஸ் மல்டிமீடியா என்ற தனியார் நிறுவனத்திற்கு அடிமாட்டு விலையான வெறும் 1000 கோடி ரூபாய்க்கு அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அந்தச் செய்தி தெரிவி[illegible]றது.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் வணிகப் பிரிவான ஆன்ட்ரிக்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என்கிற நிறுவனம் இந்த அலைக்கற்றையை தனியார் நிறுவனத்திற்கு விற்றுள்ளது.

இருப்பினும், ஜிசாட் 6, ஜிசாட் 6ஏ ஆகிய இரண்டு செயற்கைகோள்கள் இன்னும் விண்ணில் செலுத்தப்படாததன் காரணமாக, தேவாஸ் மல்டிமீடியா நிறுவனம் இன்னமும் தனது செயற்பாட்டை ஆரம்பித்து, சுரண்ட ஆரம்பிக்கவில்லை.

போட்டியை உருவாக்கும் வகையில் ஏல முறையையும் பின்பற்றாமல், இந்த ஒதுக்கீடுக்கென்று வகுக்கப்பட்ட வழிகாட்டு முறைகளையும் மீறி, எஸ். பாண்ட் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு மேற்படி தனியார் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டு இருக்கிறது.

சென்ற ஆண்டு, இதே போன்ற 15 மெகாஹெர்ட்ஸ் அலைக்கற்றையை ஏலத்தின் அடிப்படையில் 67,719 கோடி ரூபாய்க்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்து இருக்கிறது. இது தான் இஸ்ரோ ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு ஒப்பந்தத்தில் 2 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்று மதிப்பிடப்பட்டதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது.

விண்வெளி ஆராய்ச்சித் துறையின் செயற்பாடுகள் குறித்து இந்திய கணக்கு மற்றும் தணிக்கைத் துறை தனது முதனிலை தணிக்கையை ஆரம்பித்த போது தான், பாரதப் பிரதமரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் வருகின்ற முக்கியமான துறையான விண்வெளித் துறையைச் சேர்ந்த இந்த இஸ்ரோ இமாலய ஊழல் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

மேற்படி தனியார் நிறுவனத்துடனான ஒப்பந்தத்திற்கு தனது கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்து, இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்று கடந்த ஆண்டு ஜூலை மாதம் விண்வெளி குழு பரிந்துரை செய்தும், அந்த பரிந்துரை ஏற்கப்படவில்லை.

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் ஆன்ட்ரிக்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்திற்கும், தேவாஸ் மல்டிமீடியா நிறுவனத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் உடனடியாக ரத்து செய்யப்படுவதோடு, தனியார் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு திரும்பப் பெறப்பட வேண்டும்.

மேலும், இந்திய நாட்டின் அரிதான வளங்கள் பொறுப்பற்ற முறையில் சொற்ப விலைக்கு எப்படி கொடுக்கப்பட்டது என்பதையும், இதன் மூலம் பயனடைந்தவர்கள் யார் என்பதையும் கண்டறிய முழு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய கூடாரத்திலிருந்து, பல இலட்சக் கணக்கான கோடி ரூபாய் ஊழல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வெளிச்சத்திற்கு வந்து கொண்டிருப்பது நமது நாட்டிற்கு ஏற்பட்டுள்ள பெருத்த அவமானம்.

இது போன்ற மிகப் பெரிய ஊழல் குறித்து பொருளாதார வல்லுநரான இந்தியப் பிரதமர் வாய் திறக்காமல் ஊழலுக்கு உடந்தையாக எப்படி இருக்கிறார் என்று எனக்கு புரியவில்லை. தன்னுடைய மௌனத்தை கலைத்து உண்மையை தெரிவிக்க டாக்டர் மன்மோகன் சிங் முன்வர வேண்டும். இல்லையெனில், மத்திய அரசின் மீது மக்கள் நம்பிக்கையை இழந்து விடுவார்கள். உலக நாடுகள் முன்பு பரிகாசத்திற்கும், தலைக்குனிவிற்கும் இந்திய நாடு ஆளாகிவிடும் என்று தெரிவித்துள்ளார்.

## 'எல்லாம் விதி' என தத்துவம் பேசும் இயக்குநர் பிரபுதேவா



'என் வாழ்க்கையில் எல்லாமே விதிப்படிதான் நடந்துள்ளது என நம்புகிறேன். இனியும் அப்படித்தான் நடக்கும், என் திருமணம் உட்பட' என்கிறார் நடிகரும் இயக்குநருமான பிரபு தேவா.

மனைவி ரம்லத்தை விவா[illegible]து செய்து கொண்டதைத் தொடர்ந்து நடிகை நயன்தாராவை திருமணம் செய்யவுள்ளார் பிரபுதேவா.

இதுகுறித்து சமீபத்தில் அவர் அளித்துள்ள பேட்டியில்,

'என் சொந்த வாழ்க்கையில் நடந்தவை எல்லாமே விதிப்படிதான் நடந்துள்ளன என்று நான் நம்புகிறேன். பள்ளியில் படித்த போது எனக்கு நன்றாக படிப்பு வரவில்லை. அதனால் நடன ஆசிரியரானேன். பிறகு நடிகரானேன். இப்போது இயக்குநராகி இருக்கிறேன்.

என் சொந்த வாழ்க்கையில் நடந்த அனைத்தையும் தீர்மானித்திருப்பது விதிதான். எனவே விதிப்படி எனக்கு இதுதான் நடக்கும் என்று எழுதி இருந்தால் அது நடந்தே தீரும்.

இப்போது நான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். வாழ்க்கை நன்றாக போகிறது. என்னை சுற்றி உள்ள மக்களை மகிழ்ச்சிப்படுத்துவதே என் விருப்பம். வாழ்க்கையில் எல்லாவற்றையும் சாதாரணமாக எடுத்துக் கொள்கிறேன்.

நயன்தாரா விஷயத்தில், தற்போதைய சூழலில் நான் எந்த பரபரப்பு செய்தியையும் உருவாக்க விரும்பவில்லை. வாழ்க்கையில் எல்லாவற்றுக்குமே நேரம், இடம் என்று உள்ளது. சரியான நேரம் வரும் போது எல்லாம் நடக்கும் என்றார்.

# மீனவர் பாதுகாப்பிற்காக தமிழக கடல் எல்லையில் கடற்படையினர் 24 மணி நேரமும் படகில் ரோந்து

### கடலோர காவல் படை கிழக்கு பிராந்திய தலைவர் தகவல்



புதுக்கோட்டை,

'தமிழக மீனவர்களின் பாதுகாப்பிற்காக தமிழக கடல் எல்லையில் இந்திய கடற்படையினர் படகில் 24 மணி நேரமும் ரோந்து பணியில் ஈடுபட ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது'' என்று கடலோர காவல்படையின் கிழக்கு பிராந்திய தலைவர் கூறினார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாபட்டினத்தில் உள்ள கப்பல் படை அலுவலகத்திற்கு இந்திய கப்பல் படையின் கிழக்கு கடலோர பிராந்திய தலைவர் கேப்டன் பெனிவால் வருகை தந்தார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு மீன்பிடிக்க சென்ற போது இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட பாண்டியன் சென்ற படகை பார்வையிட்ட பெனிவால், கடலோர காவல் படைக்கு சொந்தமான படகில் கடலுக்கு சென்று பாண்டியன் சுடப்பட்ட கடல் பகுதியையும் பார்வையிட்டார். பின்னர் அவர் பெனிவால் கூறியதாவது:-

தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவதை தடுக்க புதிய ஏற்பாடு செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது. அதாவது இலங்கைக்கும், தமிழகத்திற்கும் அனுமதிக்கப்பட்ட கடல் எல்லையில் இந்திய கடற்படையினர் 24 மணி நேரமும் படகில் ரோந்து பணியில் ஈடுபடவுள்ளனர்.

அவர்கள் இருக்கும் எல்லையை தாண்டி தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க செல்லக்கூடாது. இலங்கை கடற்படையினர் அவர்களது எல்லையை தாண்டி இங்கு வரமாட்டார்கள். இனிமேல் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களுக்கு எந்தவித தொல்லையும் ஏற்படாது என்றார்.

## 'லிம்கா சாதனை'

இந்தூர்:

மத்திய பிரதேச மாநிலம், இந்தூரை சேர்ந்த வைத்தியர் மற்றும் அவரது இரண்டு உதவியாளர்கள், 1,200 நாட்கள் விடுமுறை எடுக்காமல் 2,700 சடலங்களை பிரேத பரிசோதனை செய்து சாதனை படைத்துள்ளனர்.

கடந்த 2006ஆம் ஆண்டு முதல் 1,200 நாட்கள் தொடர்ந்து விடுமுறை எடுக்காமல் வேலைபார்த்த இவர்கள், அந்த கால கட்டத்தில் 2,700 சடலங்களுக்கு பிரேத பரிசோதனை நடத்தி படைத்த சாதனை 'லிம்கா' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

YARL OSAI
யாழ் ஓசை
சிறு விளம்பரங்கள்

மணமகன் தேவை

யாழ் சைவவேளாளர் அரசாங்க உத்தியோகம், அழகான மகளுக்கு தகுந்த மணமகன் **38 - 44** வயதிற்குள் தேவை. குறிப்பு, விபரத்துடன் விண்ணப்பிக்கவும். **S.P.**இராசநாயகம், வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. **021 3734440**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் யாழ்ப்பாண உயர் மட்ட அதிகாரிகளை சந்திப்பு

(எம்.எல். லாபிர்)

யாழ். - கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனம் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் ஆகியோரை சந்தித்து யாழ். முஸ்லிம் மக்களின் பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

சம்மேளனத்தின் தலைவர் எம்.யூ.எம். தாஹிர், செயலாளர் ஐ.அஸ்மின், இணைப்பாளர் எம்.ஏ.ஸி. முபீன், மாநகர சபை உறுப்பினர் சட்டத்தரணி எம்.ஆர். ரமீஸ், எம். அஸ்கர், பள்ளிவாசல்கள் சார்பில் எம்.எல். லாபிர், எம். அஜ்வாத் மற்றும் சமூக சேவை அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இதில் யாழ்ப்பாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் பற்றியும் மீள்குடியேறியுள்ளவர்கள் மீள்குடியேறவுள்ள மக்களின் தேவைகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டன. யாழ். பஜாரிலுள்ள ஜும்மா மொஸ்க் வீதியில் உள்ள நீண்டகால பிரச்சினை பற்றி யாழ். மாநகர சபை முதல்வரிடம் எடுத்துரைக்கப்பட்டது. அதன்படி வடிகால் அமைப்பும், வீதித் திருத்தமும் கழிவுகள் சேகரிப்பு நிலையம் போன்ற சுகாதார குறைபாடுகளும் உடனடியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமென முதல்வர் தெரிவித்தார்.

ஆளுநருடனான சந்திப்பில், மீள்குடியேறியுள்ள முஸ்லிம் குடும்பங்கள் 2 ஆயிரத்து 460 ஆகும். இதில் 396 குடும்பங்களுக்கு மட்டும்தான் காணிகள் உள்ளன. ஏனையோருக்கு காணிகள் இல்லை. இதனால் இவர்கள் மீள்குடியேற்றப் பதிவை மேற்கொண்டுவிட்டு புத்தளம் திரும்பியுள்ளார்கள்.

இவர்கள் புத்தளத்தில் பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அங்குள்ள கிராம அதிகாரிகள் யாழ். முஸ்லிம்களின் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுமதித்தல், வேலை வாய்ப்புக்கான நற்சான்றிதழ், மற்றும்நோயாளிகளுக்கான ஜனாதிபதி நிதியுதவிக்கான கடிதங்கள் போன்றவற்றை கொடுக்க மறுக்கின்றனர். இவர்களை யாழ்ப்பாணத்தில் பெற்றுக்கொள்ளுமாறு கட்டாயப்படுத்துகின்றனர். இதனால் யாழ். முஸ்லிம்கள் இக்கட்டான சூழ்நிலையில் அகப்பட்டுள்ளார்கள். இதனை ஆளுநருக்கு எடுத்துக் கூறியபோது ஆளுநர் உடனடியாக புத்தளம் அரச அதிகாரிகளுடன்தொடர்பு கொண்டு புத்தளம் வாழ் யாழ். முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாகவும் கூறியுள்ளார்.

யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடனான சந்திப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் யாழ். முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

# வெள்ளம் காரணமாக அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தவேண்டிய அவசியமில்லை

## இடர் முகாமைத்துவ அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ள நிலைமையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் பொருட்டு அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை.

காரணம் நிவாரணங்களை வழங்கவும் பாதிக்கப்பட்ட மக்களை கட்டியெழுப்பவும் ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 650 மில்லியன் ரூபா பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வெள்ளப்பெருக்கின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் செயற்பாடுகளை மேற்கொள்ள நாட்டில் அவசரகால நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை விடுத்துள்ளமை குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அமைச்சர் இந்த விடயத்தை கூறினார்.

இவ்விடயம் குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவும் மேலும் அவர்களுக்கு தேவையான ஏனைய உதவிகளை வழங்கவும் அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

முக்கியமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நோக்கில் 1000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் இதுவரை 650 மில்லியன் ரூபா மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீண்டும் கட்டியெழுப்ப அப்பிரதேசங்களில் உள்ள பாதிக்கப்பட்டுள்ள தொழிலாளர்களை பயன்படுத்தவுள்ளோம். அவ்வாறு மீள்கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு தினம் ஒன்றுக்கு 500 ரூபா வீதம் கொடுப்பனவு வழங்கப்படும்.

மேலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் [illegible]ாருட்டு அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. காரணம் நிவாரணங்களை வழங்கவும் பாதிக்கப்பட்ட மக்களை கட்டியெழுப்பவும் ஜனாதிபதி செயலணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய கட்சி கூறுவதைப் போன்று நாட்டில் அவசரகால நிலையை பிரகடனப்படுத்தினால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். இன்று சுற்றுலாத்துறை என்பது முக்கியம் வாய்ந்த துறையாக வுள்ளது. எனவே அந்தத் துறை பாதிக்கப்படும் வகையில் செயற்பட முடியாது.

### தூத்துக்குடி... (தொடர்ச்சி)

போர் தீவிரம் அடைந்ததால், படகு போக்குவரத்து கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் நிறுத்தப்பட்டது.

தற்போது இலங்கையில் போர் முடிந்து அமைதி திரும்பியதால், தூத்துக்குடி - கொழும்பு சரக்கு போக்குவரத்தை இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டது. அதற்காக, தூத்துக்குடி பழைய துறைமுகத்தில் நேற்று முன்தினம் தனியாருக்குச் சொந்தமான ஒரு படகில் மஞ்சள், மக்காச்சோளம், வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட பொருட்கள் ஏற்றப்பட்டன. 300 தொன் சரக்குடன் இந்த படகு, நேற்று காலை தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டதைத் தொடர்ந்து இன்று கொழும்பை வந்தடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### ஆஸி... (தொடர்ச்சி)

ஹிமாஸ் மைற்லண்ட் என்கிற கப்பலே இரு படகுகளையும் கண்டுபிடித்து இருக்கின்றது. பயணிகளுடன் சிப்பந்திகள் 06 பேரும் கைது செய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் உள்ள தடுப்பு முகாம் ஒன்றில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஒரு படகில் 53 பயணிகளும் இரு சிப்பந்திகளும் வந்துள்ளனர் என்றும் மற்றைய படகில் 48 பயணிகளும் நான்கு சிப்பந்திகளும் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

### ஆர்ப்பாட்ட... (தொடர்ச்சி)

விஜய் ரசிகர்கள் இலட்சக்கணக்கில் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர் ஜெயக்குமார் சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் நாகபட்டினம் சென்று கொல்லப்பட்ட ஜெயக்குமார் குடும்பத்தினரை சந்தித்து அறுதல் கூறி உதவி வருகின்றனர்.

இந்நிலையில், நடிகர் விஜய்யும் எதிர்வரும் 22 ஆம் திகதி ஜெயக்குமார் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறவுள்ளார். விஜய்யுடன் அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகரரும் நாகபட்டினம் செல்கிறார். அன்றைய தினம் இலங்கைக் [illegible]ற்படையால் தமிழக மீனவர்கள் படுகொலை செய்யப்படுவற்கு கண்டனம் தெரிவித்து கோஷம் எழுப்புவார் என்றும் அவரது குடும்ப உறுப்பினர்களும் இதில் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விஜய்யின் இந்த திடீர் முடிவு அவர் அரசியலில் குதிக்கப்போகின்றாரா என்ற கேள்வியை பரவலாக ஏற்படுத்தியுள்ளது.

### கிளிநொச்சி... (தொடர்ச்சி)

வாய்ப்புக்களும் இல்லாது மழை வெள்ளத்தாலும் அவலப்படும் தமக்கு கடந்த ஆறு மாத காலமாக வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிறுத்தப்பட்டதால் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக மீளக்குடியேறிய மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீளக்குடியேறியோருக்கும் இரு மாதங்களாக இவ் உலர் உணவு நிவாரணம் கூட்டுறவு சங்கங்களால் வழங்கப்படவில்லை எனவும் வேறு பல குடும்பங்களுக்கு ஆறு மாதம் முடிவடைவதற்கு முன்னரே நிவாரணம் நிறுத்தப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மனித நேய ஆர்வலர்களும் கவனத்தில் எடுப்பதுடன் தற்போதைய சூழ்நிலையையும் மழை வெள்ளப்பெருக்கு, விவசாய அழிவு என்பவற்றையும் கவனத்தில் கொண்டு குறிக்கப்பட்ட காலத்திற்கு இவ் இலவச உலர் உணவை வழங்க முன்வரவேண்டும் என்றும் மீள்குடியேறிய மக்கள் கோருகின்றனர்.

**முல்லைத்தீவில் வெள்ளத்தால்**
**1, 639 குடும்பங்கள் பாதிப்பு**

இதேவேளை, தொடர்ந்து பெய்து வரும் மழையினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் ஆயிரத்து 639 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கான சகல உதவிநடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ள புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் என்.கோணேஸ்வரன் மூன்று தினங்களுக்கான சமைத்த உணவை வழங்கியுள்ளார்.

சகல வசதிகளுடன் வாழ்ந்து வந்த இப்பிரதேச மக்கள் போரின் காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது மீளக்குடியேறியுள்ளார்கள். இவர்கள் வாழ்ந்து வந்த வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளதால் தகரக் கொட்டகைகளிலும் ஓலைக்குடிசைகளிலும் வசதியீனங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இப்பகுதியில் தொடர்ந்து பெய்துவந்த கன மழையினால் இவர்கள் வாழ்ந்துவந்த குடிசைகள் வெள்ளத்தினால் சேதத்திற்குள்ளாகியுள்ளன. இதனால் இவர்கள் அன்றாடக் கருமங்களை செய்யமுடியாது பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, ஆட்கள் இல்லாத வீடுகளில் திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டிவருவதால் குடிசைகளுக்குள் மழை வெள்ளம் புகுந்த நிலையிலும் வேறு இடங்களுக்குச் செல்லாமல் அங்கேயே இருக்க வேண்டிய பரிதாபகரமான நிலைக்கு இப்பிரதேச மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதாகிவிட்டதா?

## கவலை வேண்டாம்...

வயதாகிறதே... என்று கவலைப்பட்டுக்கொண்டே இருக்கக்கூடாது. வயதான காலத்தில், அதை சந்தோஷமாக வரவேற்றால், வாழ்நாள் முழுவதும் அது நீடிக்கும். 'ஆண்டவா, வயதாகி விட்டதே, என்னால், அதை செய்ய முடியவில்லையே... இதைச் செய்ய முடியவில்லையே' என்று, வேதனையில் உழன்றால், தன்நம்பிக்கை இல்லாமல் போய்விடும். உடலில் தளர்ச்சி அதிகரிக்கும் அதனால், பாதிப்புகளும் அதிகமாகும். அறிகுறி என்ன? வயதுக்கேற்ற வேலைகளை தான் செய்ய வேண்டும்.

அறுபதை எட்டும் போதே, சில வேலைகளை நாம் தவிர்ப்பது நல்லது. எலும்புகள் வலுவிழந்து காணப்படும் நிலையில், தசைகள் சுருங்கிப் போயிருக்கும் நிலையில், பெரிய அளவில் வேலையை செய்ய முடியாது. மனதை இலகுவாக்கிக் கொண்டு, தன்நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள வேண்டும். மூட்டுகள் வலுவாக இருக்கவும், மன அழுத்தத்தை போக்கவும் தினமும் உடற்பயிற்சி தேவை. எப்படி இருக்க வேண்டும்? நொறுக்குத் தீனிப்பக்கமே போகக் கூடாது. மன அழுத்தம் வர அனுமதிக்கக் கூடாது.

தினமும் உடற்பயிற்சி தேவை. தோலைப் பாதிக்கும் பொருட்களை பயன்டுத்தக்கூடாது. அதிக ஓய்வு எடுக்க வேண்டும். அதிக குடிநீர் குடிக்க வேண்டும். உப்பு கொழுப்பு 'நோ' வயதாகி விட்டால், இரண்டைக் கண்டிப்பாக தவிர்க்கவேண்டும். ஒன்று: உப்பு. இன்னொன்று: கொழுப்பு. இவை இரண்டும் உள்ள உணவு வகைகளைத் தவிர்க்க வேண்டும். பழங்கள், காய்கறிகளை அதிகம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

வயதான நிலையில், கொலஸ்ட்ரோல் அதிகமாக உடலில் சேரும் என்பதால், அது சார்ந்த உணவு வகைகளை தவிர்க்க வேண்டிய கட்டாயம் உள்ளது. கல்சியம் தேவை வயதான பெண்களுக்கு, அதிலும், மாதவிடாய் நின்று போன நிலையில் உள்ளவர்களுக்கு கல்சியம் சத்து தேவைப்படுகிறது. அதற்கு, டாக்டரை ஆலோசித்து, அவர் சொல்வதற்கேற்ப, கல்சியம் மாத்திரைகள், உணவு வகைகளைப் பின்பற்ற வேண்டும்.

அப்போதுதான் மூட்டுவலி வருவது, முதுகுவலி வருவதெல்லாம் தவிர்க்கலாம்.அதுபோல, வயதான பெண்களுக்கு கலோரிச் சத்து தேவை. சராசரியாக ஒருவருக்கு 1,500 கலோரிச் சத்து தேவை. வயதானவர்கள் அதற்கு அதிகமாகவே பெற வேண்டும். எலும்பு பலவீனம் ஆண்களை விட, பெண்களுக்கு எலும்புகள் பலவீனம் அண்டயும் வாய்ப்பு அதிகம்.

பெண்களுக்கு மாதவிடாய் நின்று விட்ட நிலையில், அவர்களுக்கு கல்சியம் சத்து குறைந்து விடும். அப்போது, அவர்களின் எலும்புகளுக்கு வலு தேவைப்படுகிறது. ஆண்களை விட, பெண்களுக்கு எலும்பு பாதிப்பு நான்கு மடங்கு அதிகம்.

அதனால் விற்றமின் 'டி' சத்து, கல்சியம் சாப்பிடுவதுடன், உடற்பயிற்சியும் தேவை.

(தொடரும்)



## கத்தரிக்காய் பொரித்த கறி



**தேவையான பொருட்கள்**

கத்தரிக்காய் - 500 கிராம், வெங்காயம் - 5, பச்சைமிளகாய் - 2, கறிவேப்பிலை - சிறிளவு, மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி, தேங்காய்ப்பால் (முதற்பால்) - 1/2 தம்ளர், பழப்புளிக் கரைசல் - 2 மேசைக்கரண்டி, உப்புத்தூள் - தேவையானளவு, கடுகு - 1/4 தேய்க்கரண்டி, பெருஞ்சீரகம்-1/4 தேக்கரண்டி, ஏலம், கறுவா - தேவையானளவு, தேங்காயெண்ணெய் அல்லது மரக்கறி எண்ணெய் - 1/4 போத்தல்.

**செய்முறை**

கத்தரிக்காயை மெல்லிய நடுத்தர நீளமான துண்டுகளாக வெட்டி சிறிது நேரம் தண்ணீரில் ஊறவிட்டு பிளிந்து எடுக்கவும்.

வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை யாவற்றையும் சுத்தஞ்செய்து நீளமாக மெல்லியதாக வெட்டிச் செல்லவும்.

எண்ணெயை நன்றாகக் கொதிக்க வைத்து கத்தரிக்காயைப் பொன்னிறமாகப் பொரித்து வடிதது எடுக்கவும்.

சிறிதளவு எண்ணெயில் வெங்காயம், பச்சைமிளகாய், கறிவேப்பிலை கடுகு, பெருஞ்சீரகம், ஏலம், கறுவா, இவற்றை இட்டுத் தாளித்துக் கொள்ளவும்.

தாளித்த பொருட்கள் பொன்னிறமானதும் தேங்காய்ப்பால், புளிக்கரைசல், உப்பு, மிளகாய்த் தூள் யாவற்றையும் கலந்து கொதிக்க வைக்கவும்.

குளம்பு வற்றும் சமயத்தில் பொரித்த கத்தரிக்காயை இட்டு நன்கு சேர்த்துக் கறி சுருளும் (கறி வரளும்) பருவத்தில் இறக்கிக் கொள்ளவும்.

## அல்புமின் நீர்



**தேவையான பொருட்கள்**

முட்டை-1, சீனி-1 தேக்கரண்டி, எலுமிச்சம்புளி- 1/2 தேக்கரண்டி

**செய்முறை**

தட்டையான சிறிய கோப்பையில் (சோசர்) முட்டையில் சிறு துவாரமிட்டு வெள்ளைக் கருவை மாத்திரம் விட்டுக் கொள்ளவும்.

முள்ளுக்கரண்டியால் வெண்கருவை அடிக்காது மேலுங் கீழுமாகப் புரட்டி கலக்கவும்.

(நுரைக்கக் கூடாது)

பின் சீனியைச் சேர்த்து அவ்வாறே கலந்து கொள்ளவும்.

சீனி நன்கு கரைந்ததும் எலுமிச்சம் புளியைச் சேர்த்துக் கலந்து பயன்படுத்தவும்.

**குறிப்பு**

இது வயிற்று நோ, வாந்தி வயிற்றுப் புரட்டல் நோயாளர்களுக்கும் நோயிலிருந்து தேறுபவர்களுக்கும் ஏற்றது.

வெண்கருவை நுரைவரக் கூடியதாக அடித்தால் காற்று சேர்ந்து கொள்கிறது. இந்நிலை வயிற்றில் சமியாக் குணத்தை ஏற்படுத்தும்.

மங்கையரே உங்களின் சமையற் கலை, அழகுக் குறிப்புக்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்
யாழ்.ஓசை வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, ஸ்ரேசன் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் கிளிநொச்சி

## அன்றும் இன்றும்

**கிளிநொச்சி டிப்போ வீதி ஏ-9 வீதியை உள்ளடக்கி பெருமளவு காடுகள் இருந்த நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரியின் ஆனுசரணையுடன் புதிய சட்ட விரோ குடியேற்ற கிராமங்கள் காடழித்து உருவாக்கப்பட்டன.**

1977-1983 இனக் கலவரங்களால் கிளிநொச்சியில் அதிக சட்ட விரோத குடியேற்றங்கள் உருவானது.

இதனால் சனத்தொகை அதிகரிப்பும் ஏற்பட்டது. கமங்களில் தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடும் நீங்கியதுடன் புதிய பாடசாலைகளும் கிராம அலுவலர் பிரிவுகளும் உருவாகியன.

வட மாகாணத்தின் பிரதான நகரமாக துரிதமாக வளர்ந்து வரும் மாவட்டமான கிளிநொச்சி மாவட்டத்தில் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சட்ட ரீதியான குடியேற்றத் திட்டங்களை ஏற்கெனவே பார்த்தோம்.

யாழோசையின் அநேக வாசகர்களின் வேண்டுதலுக்கு ஏற்ப, கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோதமாக ஏற்பட்டு பின்னர் அரச அங்கீகாரம் மிக்க கிராமங்களாக மாறியவற்றில் முக்கியமான பகுதிகளை இங்கு தருகிறேன்.

'வடக்கின் பிரதான நெற்களஞ்சியம் என குறிப்பிடப்படும் கிளிநொச்சியில் யாழ்.மாவட்டத்தின் தீவகப் பகுதியான ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த தீவுப்பகுதி மக்களும் தென்மராட்சிப் பிரதேசத்தின் சாவகச்சேரி தொகுதியை சேர்ந்த மக்களும் அதிக அளவில் குடியேற்றப்பட்டனர். வர்த்தக தொழில் நடவடிக்கைகளை வடமராட்சி, காரைநகர், தீவுப்பகுதியினர் கூடுதலாக இங்கு முன்னெடுத்தனர். அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த அமரர் பண்டிதர் கா.போ. இரத்தினம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் வி. ஆனந்தசங்கரி ஆகியோரின் துரித நடவடிக்கைகளால் அன்று கிளிநொச்சித் தொகுதி அபிவிருத்திப் பாதையில் காலடி எடுத்து வைத்தது.

அக்காலத்தில் அபிவிருத்தியின் முன்னோடியாக பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள் முதலானோரும் தத்தமது துறைகள் ஊடாக கிளிநொச்சியை பிரபல்யப்படுத்தினார்கள்.

இரண்டு மூன்று கட்டங்களாக இவர்களின் பணி தொடர்ந்தது. திரைப்படத் துறையை எடுத்துக்கொண்டால் முதலில் அமரர் கிளாக்கர் பொன்னம்பலம் முதலில் கொட்டகை திரைப்படம் பார்க்கும் வசதியை ஏற்படுத்தினார்.

இதன் பின்பு 'சண்முகா திரையரங்கு' பராசக்தி திரையரங்கு அதிக வசதிகளுடன் கூடிய ஈஸ்வரன் பட மாளிகை உருவானது.

அன்று கமத்தொழில் தான் கிளிநொச்சியின் பிரதான தொழில். இன்று கமத் தொழிலுடன் வர்த்தக தொழில் நடவடிக்கைகளும் முக்கிய இடத்தைப் பிடித்துவிட்டது.

கிளிநொச்சி யாழ். மாவட்டத்துடன் இணைந்து இருந்த அன்றைய காலகட்டத்தில் மாவட்ட சபை முறை நடைமுறைக்கு வந்து தேர்தலும் இடம்பெற்றது.

கிளிநொச்சியில் கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரியின் செயலாளர் இ. கிருஸ்ணராசாவிற்கு அப்போதைய கூட்டணி தலைமை வெற்றியீட்டியும் இடம் கொடுக்கவில்லை. இதனால் கிளிநொச்சி மக்கள் மிகவும் கவலையடைந்திருந்தும் பல போராட்டங்களை நடத்தியதும் மிகவும் குறிப்பிடத்தக்கது.

இவை தொடர்பாக மீண்டும் பார்ப்போம். சட்ட விரோதக் குடியேற்றங்கள் ஏன் உருவாகின? பின்பு சட்டரீதியாக மாறிய விதம் தொடர்பில் ஆராய்வோம்.

1977-1983 கால கட்டத்தில் மலையகம் மற்றும் தென் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரங்களால் நிர்க்கதியான மக்கள், குறிப்பாக மலையக மக்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் கிளிநொச்சியை வந்தடைந்தனர். இவர்களுக்கென முதலில் கிளிநொச்சியில் குருகுலம், புனித திரேசாள் தேவாலயம் முதலான இடங்களில் தங்குமிட வசதிகளும் உணவு, மருந்துவ வசதிகளும் வழங்கப்பட்டது.

பின்னர், கிளிநொச்சி டிப்போ வீதி 'ஏ-9' வீதியை உள்ளடக்கி பெருமளவு காடுகள் இருந்த நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரியின் ஆனுசரணையுடன் புதிய சட்ட விரோத குடியேற்ற கிராமங்கள் காடழித்து உருவாக்கப்பட்டன.

இதில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டுவந்த மலையக மக்கள் தமது கடின உழைப்பால் காடுகளை அழித்து அங்கு குடியேறினார்கள். காடுகளை அழித்து குடியிருப்பு நிலங்களாக மாறுவதற்குபோது சொல்லொனா கஷ்டங்களை அனுபவித்தனர். இவர்களுக்கு எதிராக மஞ்சள் நோட்டீஸ் ஒட்டப்பட்டு சட்ட நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

இவ்வாறு உருவான கிராமங்கள் பாரதிபுரம், கிருஷ்ணபுரம், மலையாளபுரம், தொண்டமான் நகர், உதயநகர், அம்பாள் குளம், ஆனந்தபுரம், ஆனந்த நகர், ஊற்றுப்புலம், செல்வநகர், விவேகானந்த நகர் போன்றவை முக்கிய கிராமங்களாகும்.

இக்கிராமங்கள் பின்னர் சட்ட ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு தனித்தனி கிராம அலுவலர் பிரிவுகளாக உருவாகின.

இன்று இக் கிராமங்கள் பல கிராம அலுவலர் பிரிவுகளாக மாற்றப்பட்டு கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சனசமூக நிலையம் ஆகியன உருவாக்கப்பட்டு பல துறைகளிலும் படிப்படியாக வளர்ச்சி கண்டுவருகிறது.

இதேபோல், கோணாவிலில் 'காந்தி கிராமம்' உருவாக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கதாகும். இக் குடியேற்றத் திட்டங்களில் பாரதி புரத்தில் பாரதி வித்தியாலயமும், ஊற்றுப்புலம், செலவநகர், அம்பாள் குளம் முதலான இடங்களில் புதிய பாடசாலைகள் உருவாகி இன்று கல்வித்துறையில் பரிணாம வளர்ச்சி கண்டு வருகிறது.

அன்று கல்விக்காக பல சிரமங்களை அனுபவித்த இப் பிரதேச சிறார்கள் சொந்த இடத்தில் கல்வியைத் தொடர்வதுடன் இப்பாடசாலைகள் ஏனைய பாடசாலைகளுக்கு இணையாக வளர்ச்சி கண்டு வருவதுடன் இப்பாடசாலைகளுக்கு அதிக அளவு வளங்களும் உதவிகளும் தேவைப்படுகின்றன.

அன்று கமத்தொழில் ஈடுபட்ட தொழிவாளர்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. மட்டக்களப்பில் இருந்தே கூடுதலாக தொழிலாளர் வருகை தந்தனர்.

மலையக மக்கள் வருகையை அடுத்து கமத்தொழில் மேலும் அபிவிருத்தியடைந்ததுடன், தொழிலாளர் தட்டுப்பாடும் நீங்கியது. இன்று சொந்த வர்த்தக தொழில் முயற்சிகளையும் கமத்தொழிலையும் ஏனைய அரச உத்தியோகத்தையும் இக் குடியேற்றவாசிகள் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.


கிளிநொச்சி அபிவிருத்தி பாதையில் இக் குடியேற்ற வாசிகளின் பங்கு பணி முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

● கே.வி.கே.திருலோகமூர்த்தி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் மலர்



சித்திரசேனன் நிலுஜன் தரம் 9C
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி



அவினாஸ் மாதவ் தரம் 5A
மத்துமகல றோ.க. பாடசாலை

## ஆணவத்தை விட்டொழித்தது



ஒரு தென்னை மரத்தில் காகம் ஒன்று அமர்ந்து "கா..கா...." என்று உற்சாகமாகக் கத்திக்கொண்டிருந்தது. காகத்தின் அருகே ஒரு பஞ்சவர்ணக் கிளி சென்று அமர்ந்தது.

"என்ன காக்கையாரே உமது இறக்கையைப் பார்க்கும் போது சிரிப்புத் தான் வருகிறது. இவ்வளவு அழகில்லாத அருவருப்பைத் தரக்கூடிய இறக்கையை நீர் பெற்றிருக்கிறீரே உமக்கு வெட்கமாக இல்லை?' என்று கிளி ஏளனமாகக் கேட்டது.

"நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? கறுப்பு நிறம் சிறப்பானதுதான். மற்ற நிறங்கள் எவ்வளவு உயர்ந்தவை என்பதை ஒப்புநோக்கிப் பார்ப்பதற்காகத் தான் கறுப்பு நிறத்தைக் கடவுள் உண்டாக்கியிருக்க வேண்டும். இப்போது எனது இறக்கையால் உமது இறக்கையின் அழக சிறப்ப 'பளிச்' சென்று தெரிகிறது அல்லவா?" என்று தன் இறகின் அழகைத் தானே பாராட்டிக் கொண்டது காகம்.

அந்தச் சமயத்தில், ஒரு புறா அந்தப் பக்கமாக வந்து அவர்கள் அருகே அமர்ந்திருந்தது. "என்ன... நீங்கள் இரண்டு பேரும் ஏதோ சர்ச்சையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறீர்கள் போலிருக்கு. என்ன விடயம்?" என்று அந்தப் புறா கேட்டது.

"நல்ல நேரத்தில் நீங்கள் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். எங்கள் இருவருடைய இறக்கையின் அழகைப்பாருங்கள். எங்கள் இருவரில் யாருடைய இறக்கை அழகாக இருக்கிறது? நீங்களே தீர்ப்பளியுங்கள்!" என்று புறாவைக் கேட்டுக் கொண்டருது பஞ்சவர்ணக் கிளி.

"உண்மையில் கொஞ்சம் கூட அறிவுக்குப் பொருத்தமில்லாத சர்ச்சை இது. கடவுள் உலகத்தில் உயிரினங்களுக்கான எந்த உறுப்மையும் பயன் இல்லாமல் சிருஷ்டிப்பதில்லை. ஒவ்வொருவஞருடைய உடல் உறுப்புக்களும் ஒவ்வொரு வகையில் சிறந்தனவாக, அழகானவைகளாகவே இருக்கும். பங்சவர்ணக் கிளியே! உனது இறக்கை பார்க்க அழகாக இருக்கலாம். ஆனால் காகம் போன்று அவ்வளவு விரைவாகவும் ஒரே சமயத்தில் நீண்ட தூரம் பறக்கவும் உன்னால் முடியாது.

"கோடை நாளில் உள் இறக்கைகள் உனக்கு அதிகப் பயன் தருவதாக இருக்கக்கூடும். குளிர் மழைக்காலத்திலோ காக்கையின் இறக்கைகள் தாம் மிகவும் பயனுடையதாக இருக்கும். உயிரினங்களின் உறுப்பு அழகைப் பற்றி மட்டுமே பேசக்கூடாது. அவற்றின் பயன்களையும் நோக்கிப் பார்க்க வேண்டும். பயன் இல்லாதவை என்று உலகத்தில் எதுவுமே இல்லை. அவ்வாறு பயன் உள்ள உறுப்புக்களை நமக்கு அளித்தமைக்காக நாம் கடவுளுக்கு நன்றிசொல்ல வேண்டும்!" என்று புறா கூறிற்று.

அதைக் கேட்டதும் புத்திதெளிந்து தன் ஆணவத்தை விட்டொழித்தது பஞ்சவர்ணக்கிளி.

## அம்மா



தாயே உந்தன் மடியை நானும்
சாவிலும் கூட மறப்பேனா
தாரம் வந்து சேர்ந்த பிறகும்
உன் மேல் அன்பை மறப்பேனோ
உன் மாசற்ற மாதமும் மனமும்
முலைப்பால் அருந்த மீண்டும்
கண்டு ஆகேனோ என்று நினைதனில்
என் வ்ாய்மொழிந்த
மழலையைக் கேட்டு
உன் மைவிழி சிரிக்க காணேனோ
நீ இனிதே இயம்பும் தாலாட்டுக்கே
மெல்ல கண்ணுறக்கம் செய்யேனோ.

சர்வானந்தம் கிரிசாந் (9 சி)
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

## நைல் நதி நாகரிகத்தின் முகத்துவாரம்

ஹப்பியை உங்களுக்குத் தெரியுமா? இவர்தான் நைல் நதியின் கடவுளாகக் கருதப்படுபவர். ஒவ்வொரு ஆண்டும் வெள்ளம் பெருகும் போது மக்கள் ஒன்று கூடி ஹப்பி கடவுளுக்கு தங்கள் நாட்டின் வளத்தை அதிகரித்தற்கு நன்றி கூறி மகிழ்வர்.

உலகிலேயே மிகவும் நீளமான நதி என்ற பெருமைக்குரிய நைல் நதியின் நீளம் 6670 கி.மீற்றராகும். 'நைல்' என்ற பெயர் 'நிலியோஸ்' என்ற கிரேக்க சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது. இந்த சொல்லுக்கு 'நதிப் பள்ளத்தாக்கு' என்று பொருளாகும். இந்த நைல் நதியின் பயணம் ஆபிரிக்காவின் பிரம்மாண்டமான விக்டோரியா ஏரியில் இருந்து தொடங்குகின்றது.

எதியோப்பிய மலையில் இயற்கையிலேயே பாயும் ஏராளமான ஓடைகள் உள்ளன. இந்த ஓடையின் அடிவாரத்தில் இருக்கும் விக்டோரியா ஏரி நிரம்பி அதன் வடக்கு விளிம்பில் ரிப்பன் நீர் வீழ்ச்சி என்னும் ஒரு குறுகிய அருவி வீழ்ந்து நதியாகப் பாய்கிறது. இதுவே நைல் நதி என்ற பெயருடன் தனது நெடுந்தூரப் பயணத்தை தொடங்குகிறது. எகிப்து, எதியோப்பியா, சூடான் ஆகிய நாடுகளில் பாய்ந்து இறுதியில் மத்தியதரைக் கடலில் கலக்கிறது.

நைல் நதி உருவானதுடன் ஏராளமான மீன்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவை நதியையும், நதிக்கரையையும் தங்களின் வசிப்பிடமாகக் கொண்டன.

## இலங்கையின் மலைகள்

| மலையின் பெயர் | உயரம் | மாகாணம் |
|---|---|---|
| பீதுறுதாலகாலமலை | 2525 மீற்றர் | மத்தியமாகாணம் |
| சிவனொளிபாதமலை | 2243மீற்றர் | மத்தியமாகாணம் |
| ரிட்டிகல மலை | 766மீற்றர் | வடமத்திய மாகாணம் |
| கிக்கிலிமானமலை | 2240மீற்றர் | மத்தியமாகாணம் |
| கிரிகல்பொத்தமலை | 2396மீற்றர் | மத்தியமாகாணம் |
| தொட்டு பொலமலை | 2359மீற்றர் | மத்தியமாகாணம் |
| கக்கல மலை | 2170மீற்றர் | மத்தியமாகாம் |
| நமுனுகுலமலை | 2036மீற்றர் | ஊவாமாகாணம் |

நேசராஜ்குமார் வித்யாசகர் தரம்-07
கிளி/கிளிநொச்சி ம.வி

சிறுவர்களே உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக் காரியாலயம்
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாக். இராணுவ பயிற்சிமுகாமில் குண்டுவெடிப்பு 25 பேர் பலி: 25 க்கும் மேற்பட்டோர் காயம்



பாகிஸ்தானில் நேற்று அதிகாலை நடந்த குண்டுவெடிப்பில் 25 பேர் கொல்லப்பட்டனர். 25க்கும் மேற்பட்டோர் காயமுற்றனர்.

பாகிஸ்தான் வடமேற்கு பகுதி யில் கைபர் பக்துன்பா பகுதியில் நடந்து ள்ள இந்த சம்பவத்தினால் பாக். இரா ணுவ படையினர் அதிர்ச்சியுற்றுள்ளனர்.

பஞ்சாப் மாநிலம் மர்தான் நகரப்பகுதியில் உள்ளது பாக். இராணுவ ஆட்கள் தேர்வுசெய்யும் மையம். இங்கு வழக்கம் போல் அதிகாலையில் இராணுவ வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தனர். இந்நேரத்தில் அங்கு பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது. இதில் சற்றும் எதிர்பாராத வீரர்கள் பலர் சிக்கினர். சம்பவ இடத்திலேயே இரா ணுவ வீரர்கள் 10 பேர் பலியாயினர். 20 க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் அருகில் உள்ள மருத்துவமனை க்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

தற்போது 25 பேர் இறந்துவிட்டதாக அதிகாரபூர்வ தகவல் தெரிவிக்கின்றன. குண்டுவெடிப்பை மனித வெடிகுண்டு நடத்தியிருக்கலாம் என பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

தலிபான் இயக்கத்தினர்தான் இது போன்ற செயலில் ஈடுபடுவார்கள் என்று பொலிஸார் கூறினாலும், எந்தவொரு பயங்கரவாத அமைப்பினரும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. இங்கு தாக்குதல் நடத்திய நபர் ஒருவர் பள்ளிச் சீருடையில் வந்துள்ளார். இளம் வயதான இந்த மனித குண்டு, மாணவன் போல இராணுவ முகாம் அருகே நெருங்கியுள்ளான் என பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது இந்த சம்பவத்திற்கு பாக். பிரதமர் யூசப்ரசா கிலானி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கையில்,

இதுபோன்ற கோழைத்தனமான தாக்குதல் எங்களின் பாதுகாப்பு படையினரின் மன உறுதியை தகர்க்க முடியாது. தொடர்ந்து பயங்கரவாதத்தை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளப்படும் என்றார்.

# அவசரநிலை சட்டத்திற்கு அமெரிக்கா கண்டனம்

எகிப்து ஜனாதிபதி முபாரக் பதவிவிலகும் வரை தாரிர் சதுக்கத்தில் இருந்து வெளியேறப் போவதில்லை என மக்கள் அறிவித்துள்ளனர்.

இந்நிலையில், 'ஜனநாயகத்திற்கு எகிப்து இன்னும் தயாராகவில்லை. தொடரும் போராட்டங்களை அனுமதிக்க முடியாது' என, துணை ஜனாதிபதி ஒமர் சுலைமான் எச்சரித்துள்ளார்.

இதற்கிடையில், எகிப்தில் 1981 இல் இருந்து அமுலில் இருந்துவரும் அவசரகால சட்டத்தை உடனடியாக நீக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

எகிப்து அரசு 'டிவி' மற்றும் சில ஊடகங்கள் சதுக்கத்தில் கூடியிருந்த மக்களிடம் போராட்ட ஊக்கம் குன்றிவிட்டதாக செய்திகள் வெளியிட்டன.

ஆனால், செவ்வாய்க்கிழமை நடந்த ஆர்ப்பாட்டத்தில் இரண்டரை இலட்சம் பேர் கலந்துகொண்டனர். இவர்களில் பலர் முதன் முறையாக கலந்துகொண்டவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

**சுலைமான் எச்சரிக்கை:**

இதற்கிடையில் செவ்வாய்க்கிழமை, எகிப்து அமைதியான வழியில் அதிகார மாற்றத்தை நோக்கி சென்றுகொண்டிருப்பதாக தெரிவித்த துணை ஜனாதிபதி ஒமர் சுலை மான், நேற்று முன்தினம் தன் குரலை மாற்றிக்கொண்டார்.

பல்வேறு பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் நடந்த கூட்டத்தில் அவர் கூறிய தாவது:

இப்போதைய ஆட்சி முடிவடையாது. முபாரக் இப்போதைக்கு பதவிவிலகமாட்டார். என்றாலும் இப் பிரச்சினை கூடிய விரைவில் தீர்ந்துவிடும். அதேநேரம், ஆர்ப்பாட்டங்கள் தொடர்வதை இந்த அரசு பொறுத்துகொள்ளாது. தாரிர் சதுக்கத்தில் உள்ள கூட்டமும், எகிப்தை அவமதிக்கும் சில செய்தி 'டிவி'க்களும் மக்கள் இயல்புவாழ்க்கைக்கு திரும்புவதை தடுக்கின்றன. இந்த ஆட்சி பேச்சுவார்த்தையைதான் விரும்புகிறது.

மக்கள் பொலிஸாரின் ஆயுதங்களுடன் மல்லுக்கட்டுவதை காண விரும்பவில்லை. பேச்சுவார்த்தைக்கு மாற்று இராணுவப் புரட்சிதான். அது வந்தால் [illegible]ணிப்பார் க்கமுடியாத அளவுக்கு மோசமான விளை வுகள் ஏற்படும். அப்படி ஒரு நிலைமை உருவாவதை நாங்கள் விரும்பவில்லை. இராணுவப் புரட்சி நடக்கும் என்று நான் கூறவில்லை.

ஆனால், ஜனநாயகத்திற்கு எகிப்து இன்னும் தயாராகவில்லை. சிலர், ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர். அது சமுதாயத்திற்கு மிகவும் ஆபத்தானது. அதை அனுமதிக்க முடியாது. இவ்வாறு சுலைமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**அமெரிக்கா வலியுறுத்தல்:**

இந்நிலையில் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடன் வெளியிட்ட அறிக்கையில், 'முறையான அதிகார மாற்றமே, எகிப்தின் தற்போதைய தேவை. அ[illegible] உடனடியாக செய்யவேண்டும். அவசர நிலை சட்டத்தை நீக்கவேண்டும்' என்று கூறியுள் ளார்.

வெள்ளைமாளிகை செய்தித்தொடர்பாளர் ரொபர்ட் கிப்ஸ் கூறுகையில், 'பத்திகையாளர்கள், மனித உரிமை ஆர்வலர்களை கைதுசெய்வதை எகிப்து அரசு உடனடியாக நிறுத்தவேண்டும்' என்று கூறியிருந்தார்.



எகிப்து, கெய் ரோ நகரில் உள்ள ஜனாதிபதி மாளி கையில் அந்நாட்டு ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கை (வலது), ரஷ்ய வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அலெக்ஸாண்டர் சால்ட்னோவ் (இடது) சந்தித்து பேசுவதை படத்தில் காணலாம்.


கோழி இறைச்சி
நேரடி விற்பனையாளர்கள்
தேவை

பிரீதிக் அவர்களை பெப். 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்க இப்போதே அழையுங்கள்

0777755500

நியூ அந்தோனீஸ் ஃபாம்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
இல.13, யட்டோவிற்ற, தித்தபத்தர, ஹங்வெல்ல, இலங்கை.
தொலைபேசி: +94-11-2406006, +94-11-2406337
ஃபெக்ஸ்: +94-11-2406558
விற்பனை ஹொட்லைன்: +94-11-2406559
மொபைல்: +94-777-717683
ஈ-மெயில்: hrnaf@sltnet.lk



சமையலறைக்கு சுதந்திரம்




லிட்ரோ கேஸ் 12.5 Kg சிலிண்டருக்கு
குறைக்கப்பட்ட புதிய வைப்புத்தொகை
ரூபாய் 3800/-*

இச்சலுகையை நாடளாவியரீதியில் உள்ள அனைத்து லிட்ரோ கேஸ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்

LITRO GAS
சுடர்விடும் எதிர்பார்ப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய ரீதியிலான விளையாட்டுக்களிலும் சாதனை படைக்கும் திறமை எமது மாணவர்களிடம் உண்டு

## தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர்

(வட்டுக்கோட்டை நிருபர்)

"தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகளில் சாதனை படைக்கக்கூடிய திறமை எமது பிரதேசப் பாடசாலை மாணவர்களிடமும் உண்டு. அத்தகைய மாணவர்களை இனங்கண்டு பயிற்சி வழங்குவதற்கு பெற்றோர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்".

- இவ்வாறு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய தெல்லிப் பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. கைலாசநாதன் தெரிவித்தார்.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்-

சிறந்த விளையாட்டு வீரர்களை இன்று இந்த மைதானத்தில் காணக்கூடியதாக இருந்தது. புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை உருவாக்கியது விக்ரோறியாக் கல்லூரி. இக்கல்லூரியிலிருந்து தேசிய விளையாட்டு வீரர்கள் உருவாகவேண்டும். தேசிய ரீதியில் சாதனை படைக்கக்கூடிய வீரர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தொடர்ச்சியாகச் சிறந்த பயிற்சிகளை வழங்க வேண்டும். இதற்கு ஆசிரியர்களுடன் பெற்றோரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

உ[illegible]பந்தாட்டம், கிரிக்கெட் போன்ற பெரு விளையாட்டுககளில் இந்தப் பாடசாலை மாணவர்கள் கடந்த காலங்களில் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். அத்தகைய சாதனையாளர்கள் எதிர்காலத்தில் ஏனைய விளையாட்டுக்களிலும் உருவாக வேண்டும்.

இந்தப் பாடசாலையின் வளர்ச்சியில் பழைய மாணவர்கள் நிறைவான வளங்களை வழங்கியுள்ளனர். கல்வித் திணைக்களமும் தேவையான உதவிகளைச் செய்து வருகிறது. போதிய ஆசிரியர் வளம் கிடைத்துள்ளது. இவற்றைப் பயன்படுத்தி இப் பிரதேசப் பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை வழங்க வேண்டும்.

நல்ல வளம் நிறைந்த இந்தப் பாடசாலையில் இடைநிலை, உயர் நிலைக் கல்வி கற்பதற்கு பெற்றோர் தமது பிள்ளைகளை இங்கு கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இந்தப் பாடசாலை ஊடாக பல்கலைக்கழகம் செல்வதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

விளையாட்டுத் துறையிலும் மாணவர் கோட்ட, வலய மாவ[illegible] மட்டத்தில் பங்கு பற்றி தேசிய மட்டத்தில் சாதனை படைக்க ஆசிரியர்களும் பெற்றோரும் ஒத்துழைத்து ஊக்குவிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

# புதிதாக அமையவுள்ள பயணிகள் தரிப்பிடம்

(வட்டுக்கோட்டை நிருபர்)

காரைநகரின் நுழைவாயிலாக விளங்கும்வலந்தலைச் சந்தியில் நவீன வசதிகளுடன் கூடிய பயணிகள் தரிப்பிடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

காரைநகர் அபிவிருத்திச் சபையினரால் கட்டப்படவுள்ள இப்பயணிகள் தரிப்பிட நிலையத்திற்கென அண்மையில் காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக காரைநகர் அபிவிருத்திச் சபைத்தலைவர் மகாராணி க. சோமசேகரம் தெரிவித்துள்ளார்.

# பொன். சுகந்தனின் தொடர் சொற்பொழிவு

(வட்டுக்கோட்டை நிருபர்)

வரலாற்றுப் பெருமைமிக்க மாத்தளை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் பெருந்திருவிழாவில் ஈழத்தின் பிரபல ஆன்மீக சொற்பொழிவாளர் சைவப்புலவர் பொன். சுகந்தனின் சொற்பொழிவு இடம் பெறவுள்ளது.

ஆலய அறங்காவலர் சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வு நாளை முதல் தினமும் மாலை 6 மணிக்கு'இராமாயணமும் மானிட வாழ்வும்' என்ற தலைப்பில் நடைபெறவுள்ளது.





# VACANCIES IN QATAR

## IMMEDIATE DEPARTURE

| Position | No | Monthly Salary QR | Rs |
|---|---|---|---|
| Mason | 20Nos | QAR 1000 | Rs:31000/= |
| Heavy Drivers | 03Nos | QAR 1500 | Rs.46500/= |
| Civil Engineer | 05Nos | QAR 2500 | Rs.77500/= |
| Shawell Operator | 06Nos | QAR 1500 | Rs.46500/= |
| Helper | 10 Nos | QAR 700 | Rs.21700/= |
| Representative | 02Nos | QAR 1500 | Rs.46500/= |
| Elect. Engineer | 05Nos | QAR 2500 | Rs.77500/= |
| Elect Mechanic | 10Nos | QAR 1200 | Rs.37200/= |
| Plumber | 10Nos | QAR 1000 | Rs.31000/= |
| Carpenter | 10Nos | QAR 1000 | Rs.31000/= |



TERMS AND CONDITIONS:-

APPROVED Charges 56,902.00

1. Accommodation will be provided by the employer,
2. Medical facilities will by the employer.
3. Food allowance at the rate of QR:200 Provided by employer.
4. Working hours shall be Eigt (8) hours per day, forty eight (48) hoursper week.
   Working hours shall not exceed Tweleve (12) hours per day
5. One day per week will given off day all employer,
6. The period is contract will be two (2) years with probation period of Three (3) months
7. Free tickets (Onward &return) will be provided free of charge by employer
8. Full cost of employee's resident permit shall be borne by the employer
9. All other ferms and condition of employment shall be in accoraance with the laws and reglations of the state of Qatar.

App.No:- AL/1752/Advt/4/11



NIMZA FOREIGN EMPLOYMENT AGENCY

No:501, 2nd Division, Maradana, Colombo 10, Srilanka.
Tel:- 011-2669489/4724481/4741303 Fax:011-2682243
Hotline:075-6288600/071 4149894
E.mail: infor@nimza.lk / nimzal@yahoo.com
Web:www.nimza.lk.Labour Licence # 1752


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15,500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்க கிழக்கு மாகாண சபை தீர்மானம்

செங்கலடி,

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 15,500 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்க கிழக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் எம். எஸ். சுபைர் தெரிவித்தார்.

மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் அலுவலகத்தில் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட மாநாட்டில் இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டுள்ளது. இம்மாநாட்டில் உள்ளூராட்சித் திணைக்கள மற்றும் கூட்டுறவுத் திணைக்கள உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட காத்தான்குடி, மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, மண்முனை தென் எருவில் பற்று, போரைதீவுப் பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள குடும்பங்களுக்கு ஆரையம்பதி கூட்டுறவுச் சங்கம் ஊடாக உலருணவுப் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஏறாவூர்ப்பற்று, ஏறாவூர் நகர், கோறளைப்பற்று, கோறளைப்பற்று தெற்கு, கோறளைப்பற்று மேற்கு, கோறளைப் பற்று மத்தி, கோறளைப்பற்று வடக்கு ஆகிய பிரதேச மக்களுக்கு ஏறாவூர் கூட்டுறவுச் சங்கம் மூலமாக அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் எம். எஸ். சுபைர் மேலும் கூறினார்.

# அரிசிக்கான தட்டுப்பாட்டை நீக்க அரசாங்கம் நடவடிக்கை

(பாலமுனை மேலதிக நிருபர்)

நாட்டின் பல மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தின் காரணமாக செய்கை பண்ணப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்காணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாட்டு நிலைமை ஏற்படாதிருக்கும் வகையில் அரசினால் கட்டுப்பாட்டு விலையில் கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த நெல்லை தனியார் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு விற்பனை செய்யும் பணியை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக நெற் சந்தைப்படுத்தல் சபையின் அதிகாரி தெரிவித்தார்.

சென்ற 2009- 2010 சிறு போகத்தின் போது கூடிய உற்பத்தியின் காரணமாக நெல்லுக்கான விலை கணிசமான அளவு குறைவடைந்திருந்தது. இதனால் நெற் செய்கையாளர்கள் பெரும் நஷ்டத்துக்கு முகங்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பத்தை தவிர்க்கும் பொருட்டு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையில் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து களஞ்சியப்படுத்தியிருந்தது.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையின் காரணமாக அரிசிக்கான தட்டுப்பாட்டு நிலைமை ஏற்படாவண்ணம் இருப்பிலுள்ள நெல்லை சந்தைக்கு விடும் நடவடிக்கையை நெற் சந்தைப்படுத்தல் சபையினூடாக அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

8 ஆம் திகதி இந் நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அட்டாளைச்சேனை நெற் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 46,500 கிலோ கிராம் நெல்லை விநியோகிக்கும் பணி தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

# அம்பாறை மாவட்டத்தில் 168,000 ஏக்கர் நெற் செய்கை வெள்ளத்தினால் பாதிப்பு

(பாலமுனை மேலதிக நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தின் காரணமாக பெரும்போக நெற் செய்கையில் இம்முறை 168,000 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

பல நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக குளங்கள், வாவிகள், ஆறுகளின் பெருக்கெடுப்பின் காரணாகவும் செய்கை பண்ணப்பட்டு அறுவடை செய்வதற்கு தயாராகிவரும் காலப் பகுதியில் நெற் பயிர்கள் வெள்ள நீரில் மூழ்கி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

இவற்றில் அதிகமானவை அறுவடை செய்வதில் பயனற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் பணிப்புரைக்கமைய பாதிப்புக்குள்ளான விவசாயிகளிடம் இருந்து சேத விபரங்கள் திரட்டப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் சேதங்களின் தன்மைக்கேற்ப நஷ்டஈட்டினை வழங்க விவசாய அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வெள்ள அனர்த்தத்தின் காரணமாக விவசாயக் கால்வாய்கள், குளங்கள், தாம்போதிகள், விவசாயப் பாதைகள், வடிச்சல்கள் போன்றன பலவும் சேதமடைந்துள்ளன.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் பயிர் செய்கையை மேற்கொண்டிருந்த மேட்டு நிலப் பயிர் செய்கையாளர்கள், மரக்கறி செய்கையாளர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள், பண்ணையாளர்கள் அதிகம் பாதிக்கப்பட்டு பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

# வெற்றியாளன் எப்போதுமே வெற்றிகரமான செயற்பாடுகளினால் உரிய இலக்கை அடைவான்

## அதிபர்களும் இவ்வாறே இருக்க வேண்டும் என்கிறார் கல்விப் பணிப்பாளர்

மண்டூர்,

வெற்றியாளன் எப்போதும் வெற்றிகரமான செயற்பாடுகளினூடாக உரிய இலக்கினை அடைவான். தோல்வியாளன் தோல்வியான சிந்தனைகளால் தோல்வியையே அடைவான். எனவே அதிபர்கள் எப்போதும் வெற்றியாளர்களாக இருக்க வேண்டும்.

இவ்வாறு பட்டிருப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஈ. போல் கூறினார். பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் சேவைக்கால ஆலோசகர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டம் மேற்படி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் உரையாற்றிய வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் கூறியதாவது,

பட்டிருப்பு கல்வி வலயம் கல்வியில் மேலும் ஓங்க வேண்டும். இந்த இலக்கை அடைய அனைவரும் அவரவர் பொறுப்புகளை சரிவரச் செய்ய வேண்டும்.

இறைவனால் கொடுக்கப்பட்ட கொடை இப்பதவி என உணர்ந்து நேர்மையுடன் பணிபுரிய வேண்டும்.

அதிபர்கள் பாடசாலையின் முக்கியமானவர்கள். ஆகையால் நாளாந்த கடமைக் கூறுகளுடன் பாடசாலைகள் சகல விடயங்களிலும் முதன்மை வகித்து பாடசாலையில் அனைத்து தரப்பினருடனும் நல்லுறவை கட்டி எழுப்ப வேண்டும். ஒரு பாடசாலையின் முதன்மையானவர்களான அதிபர்கள் பாடசாலையின் இலக்கினை நோக்கி அர்ப்பணிப்புடன் பணிபுரிதல் இன்றியமையாததாகும். அத்துடன் ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் சமூகத்தினருடனும் நல்லுறவை கட்டி எழுப்ப வேண்டும்.

ஒருவரிடம் வெளியே தெரிவது அறிவும் திறனும் மட்டுமேயாகும். இது பத்து வீதமானதே, ஒருவரின் மனப்பாங்கு வெளியில் தெரிவதில்லை.

மனப்பாங்கு 90 வீதமானது. எனவே மனப்பாங்கில் மாற்றம் ஏற்படும்போதே நடத்தையில் மாற்றம் ஏற்பட்டு வெளியில் தெரியவரும். ஆகவே அதிபர்கள் நல்ல மனப்பாங்கு மிக்கவர்களாக மிளிர வேண்டும். வெற்றிகளை அடைய நல்ல மனப்பாங்கு வேண்டும்.

மாணவர்களிடம் சிறந்த மனப்பாங்கை ஏற்படுத்த வேண்டும். அதற்காக அவர்களை ஊக்கப்படுத்தல் அவசியமாகும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு விடயத்தை தலைப்பாகக் கொடுத்து அந்த விடயம் பற்றி கவிதை கட்டுரை எழுதத் தூண்ட வேண்டும்.

அதன் மூலம் சிறந்த மனப்பாங்கு அவர்களிடம் வளரும். பாடசாலையில் ஒவ்வொரு நிகழ்வும் திட்டமிட்டு நடத்தப்பட வேண்டும். அதனூடாக நல்ல பண்புகள் பாடசாலையில் ஏற்படும் இவ்வாறு அவர் அதிபர்களுக்கு அறிவுரை புகட்டினார்.

# அம்பாறையில் என்றுமில்லாதவாறு மரக்கறி விலைகள் பாரிய உயர்வு

(அம்பாறை மேலதிக நிருபர்)

கடந்த சில வாரங்களாக பெய்து வரும் அடை மழையினால் அம்பாறை மாவட்டத்தில் மரக்கறிகளின் விலைகள் பாரிய எவில் அதிகரித்துள்ளதால் மக்களின் நாளாந்த வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் பச்சை மிளகாய் ஒரு கிலோ 600 ரூபாவாகவும் வெங்காயமும் இதே விலைக்கே நேற்று அம்பாறை, கல்முனை நகரில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும் கத்தரிக்காய் - 240 ரூபா, பீற்றூட் - 200 ரூபா, கோவா - 240ரூபா, கரட் - 210 ரூபா, வெண்டிக்காய் - 190 ரூபா, தக்காளி - 140 ரூபா, போஞ்சிக்காய் - 200 ரூபா வீதமும் ஒவ்வொரு கிலோ கிராம் விற்பனை செய்யப்படுவதாக அம்பாறை நகரின் மரக்கறி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பொதுவாக அம்பாறை, அக்கரைப்பற்று, ஹிங்குரானை, கல்முனை, மஹஓயா ஆகிய நகர்களிலும் இதே விலைகளே காணப்படுவதால் மரக்கறிகள் விற்பனை செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பதையும் நேற்று அம்பாறை மரக்கறி கடைகளில் காணக் கூடியதாயிருந்தது.

# முதலமைச்சர் சந்திரகாந்தனின் ஏற்பாட்டில் நிவாரணம் வழங்கல்

மண்டூர்,

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பார்சல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலாளர்களினால் அடையாளம் காட்டப்படும் இடங்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் மதிய உணவு 4000 பார்சல்களும் இரவு உணவு 4000 பார்சல்களும் வழங்கப்படுகின்றன.

கிழக்கு மாகாண சபை நிதியின் மூலம் வழங்கப்படும் இந்த மனிதாபிமான சேவைக்கு கல்லடி இராணுவத்தினரும் வவுணதீவு பிரதேச சபை தவிசாளர் எஸ். சுப்பிரமணியமும் ஒத்தாசை வழங்குகின்றனர்.

இந்தத் தகவல்களை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர் லயன் அ. செல்வேந்திரன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக்கிண்ண கிரிக்கட் போட்டியை பார்வையிட 24 ஆயிரம் பார்வையாளர்கள்

## மத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்

(கண்டி- செங்கடகல)

உலகக் கிண்ணத்துக்கான சர்வதேச கிரிக்கட் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள நிலையில் சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் இப் போட்டியைப் பார்வையிட சுமார் 24 ஆயிரம் பார்வையாளர்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பதாக மத்திய மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

கண்டிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;-

உலகக் கிண்ணத்திற்கான சர்வதேச கிரிக்கட் விளையாட்டுப் போட்டிகள் கண்டி பல்லேகலையில் மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. குறிப்பாக எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகும். இப் போட்டி அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் முடிவடையும்.

இதேபோன்று மார்ச் மாதம் 10ஆம் திகதி இலங்கைக்கும் -சிம்பாப்பேக்குமிடையில் போட்டிகள் நடைபெறும்.

தொடர்ந்து 14ஆம் திகதி சிம்பாப்பே - பாகிஸ்தானுக்குமிடையிலான போட்டிகள் நடைபெறும். இப் போட்டி நடைபெறும் தினங்களில் உலக மக்களின் நோக்கம் மத்திய மாகாணத்தைக் கொண்டதாகவே காணப்படவேண்டும்.

பெருமளவு வெளிநாட்டு, உள்நாட்டு பார்வையாளர்கள் இங்கு வரவிருப்பதால் கண்டி மாவட்டத்தில் பாதைகள் பல புனரமைப்பு செய்யப்படவுள்ளதுடன் விசேட போக்குவரத்துச் சேவைகளை மேற்கொள்ளவும் பாதுகாப்பு நடவடிக்கைகளைபலப்படுத்தவும் வீதி விளக்குகளை சீராக எரியவிடவும் நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன. மேலும் சுகாதார, குடிநீர், விசேட கழிவறைகள் உட்பட பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த சம்மந் தப்பட்ட பிரிவுகளின் உதவிகளை பெறவுள்ளோம் என்றார்.

# புதிய வெந்நீருற்றுக்கள்: நிபுணர்கள் ஆய்வு நூற்றுக்கணக்கானோர் பார்வையிட வருகை

இறத்தோட்டை,

மாத்தளையை அடுத்துள்ள நாலந்தை பகுதியில் போவதன்ன என்னும் இடத்தில் சில தினங்களுக்கு முன் தோன்றியுள்ள பத்து வெந்நீருற்றுகள் பற்றிய ஆய்வினை பேராதெனியவிலுள்ள கட்டிட நிர்மாண மற்றும் மண்சரிவு ஆய்வு நிலைய நிபுணர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

அண்மைக் காலமாகப் பெய்துவரும் தொடர்மழை காரணமாக நிலக்கீழ் வெப்பம் வெளிப்படுவதாலேயே இவ்வாறான வெந்நீருற்றுகள் தோன்றி வருவதாகக் கருதப்படுகிறது.

இவ்வூற்றுக்களிலிருந்து வெளியாகும் நீர் 20 முதல் 30 பாகை செல்சியஸ் வரை வெப்பமுடையதாகவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இது போன்று மேலும் பல ஊற்றுகள் இப்பகுதியில் ஏற்பட வாய்ப்பிருப்பதாகக் கருதப்படுகிறது.

இவ்வூற்றுக்களைப் பார்வையிடவும் அதன் வெப்பநிலையைத் தெரிந்து கொள்ளவுமென நாளாந்தம் நுற்றுக் கணக்கானோர் அடைமழையையும் பொருட்படுத்தாது இப்பகுதிக்கு வருகை தந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# பண்டாரவளை-அப்புத்தளை வீதி போக்குவரத்துக்கு முற்றாகத்தடை

தியத்தலாவை,

பண்டாரவளை-அப்புத்தளை மேல் வீதியில் 10 மைல் கஹகல்ல தோட்டம் அமைந்துள்ள வீதி தாழ்வடைந்துள்ளதால் இவ் வீதியுடனான சகல போக்குவரத்துகளும் முற்றாக தடைப்பட்டுள்ளன.

சீறற்ற காலநிலை காரணமாகவும், அதிகமழை காரணமாகவும் மேற்படி வீதி பலமுறை மண் சரிவுக்குள்ளாகி இருந்த நிலையில் மேலும் சுமார் 200 மீ. தூரம் வரை தாழ்வடைந்துள்ளது.

இதன் காரணமாக ஹப்புத்தளை கஹகல்ல தோட்டத்தில் வதியும் சுமார் 20 குடும்பங்கள் கஹகல்ல தமிழ் வித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட மேற்படி வீதி தொடர்பாகவும், பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணம் குறித்தும் அரசியல் வாதிகளும் பிரதேச செயலாளர், தோட்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பகமுவ பிரதேச சபைக்கு இ.தொ.கா.சார்பில் கூடுதலான உறுப்பினர்கள் தெரிவாக வேண்டும்

## முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஜீ.நகுலேஸ்வரன்

மஸ்கெலியா,

கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இ.தொ.கா. சார்பில் கூடுதலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதால் அம்பகமுவ பிரதேச சபையின் நிர்வாக அதிகாரம் எமக்குக் கிடைத்தது.

அதேபோல் இம் முறையும் கூடுதலான விருப்பு வாக்குகள் எடுப்பதை விட கூடுதலான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு மீண்டும் அதிகாரத்துக்கு வர வேண்டும் என்பதே அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் எதிர்ப்பார்பாகும் என்று நடைபெறவுள்ள அம்பகமுவ பிரதேச சபைத் தேர்தலுக்கான வேட்பாளரும் முன்னாள் அம்பகமுவ பிரதேச சபையின் தலைவருமான ஜீ.நகுலேஸ்வரன் தெரிவித்தார்.

அம்பகமுவ பிரதேச சபைத் தேர்தல் தொடர்பில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற தோட்டக் கமிட்டித் தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பேசும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்- இ.தொ.கா. இம் முறையும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு இணைந்து அதன் வெற்றிலைச் சின்னத்தில் வேட்பாளர் களை நிறுத்தியுள்ளது. அத்துடன் வேட்பாளர்கள் வாக்குகளைச் சேகரிப்பதற்கான எல்லையையும் வகுத்து கொடுத்துள்ளது.

எனவே, வேட்பாளர்கள் சுயநலத்தோடு செயற்படாமல் கட்சியின் எதிர்பார்ப்புக்கேற்ப செயற்பட வேண்டியது அவசியமாகும்.

ஒரு வேட்பாளர் மிகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெறவேண்டும் என்று நினைக்காமல் கூடுதலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதில் அக்கறையும் ஆர்வமும் கொள்ள வேண்டும். கூடுதலான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டால்தான் மீண்டும் நாம் பிரதேச சபை நிர்வாகத்தைக் கைப்பற்றமுடியும்.

கடந்த முறை நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூடுதலான உறுப்பினர்களோடு வெற்றி பெற்று அம்பகமுவ பிரதேச சபையின் நிர்வாகத்தைக் கைப்பற்றிய காரணத்தால் எமது மக்களுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.

மேலும் இ.தொ.கா. பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் எமது கட்சியின் தலைவரும் பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பி. இராஜதுரை உட்பட மாகாண சபை உறுப்பினர்களின் நிதியும் கிடைத்ததால் நாம் அபிவிருத்திப் பணிகளைத் தடையின்றி மேற்கொள்ள முடிந்தது. அதேபோல் இம்முறையும் எமது மக்களுக்கான சேவையைத் தொடர அதிகமான உறுப்பினர்கள் தெரிவாக வேண்டும் என்றார்.

# மண்சரிவால் 13 வீடுகள் முற்றாகவும் 31 வீடுகள் பகுதியளவிலும் சேதம்

நுவரெலியா,

நுவரெலியா மாவட்டத்தில் ஏற்பட்ட மண் சரிவால் 13 வீடுகள் முற்றாகவும் 31 வீடுகள் சாதாரணமாகவும் சேதமாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ நுவரெலியா கிளை முகாமையாளர் ஏரந்தன ஹேமவர்தன தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் மண்சரிவு ஏற்பட்டதாலும் மண்சரிவு ஏற்படும் அபாயத்திலிருந்து பாதுகாக்கும் வகையிலும் 353 குடும்பங்களைச் சேர்ந்த 1328 பேர் இடம்பெயர்ந்து அகதிகளாக முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

வலப்பனையில் 4 முகாமில் 126 குடும்பங்களைச் சேர்ந்த 401 பேரும் கொத்மலையில் 2 முகாம்களில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும் அகதிகளாக இருக்கின்றனர். இவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகள் இடர் முகாமைத்துவ அமைச்சின் நுவரெலியா கிளை மூலம் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாகவும், இடர் முகாமைத்துவ முகாமையாளர் தெரிவித்தார்.

# 'எங்களால் முடியும்' நிகழ்ச்சித்திட்டம்

மஸ்கெலியா,

பெண்களுக்கெதிரான வன்முறைகளைக் குறைக்கவும் அவர்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் 'எங்களால் முடியும்' நிகழ்ச்சித்திட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அட்டன் புனித ஜோன். பொஸ்கோ கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் இணைப்பாளர் திருமதி சந்திரமதி கலியப்பெருமாள் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் அட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் எம். ரெங்கராஜ் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். 'தமிழ் மணி' கவிஞர் தங்கம், எம். செல்வராஜ் ஆகியோர் கவிதை வாசிப்பார்கள்.

தொடர்ந்து பெண்களின் உரிமைகள் சம்பந்தமான விவாதம், சித்திரக்கண்காட்சி, குழுநடனம் போன்ற சிறப்பம்சங்கள் இடம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தில் மாறிவரும் சமூகச் சூழலும் AIDS ஐ எதிர்கொள்வதற்கான சவால்களும்

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

'வாழ்க்கை ஒரு கலை' என்பார்கள் (Life is An Art). 'வருமுன் காப்போம்' எனும் தங்கமான கருத்துச் சொற்றொடரினை நாம் வாழ்வினில் இலட்சியமாய் கொள்ளவேண்டும். மேல்மாடியாயினும் சாதராண சிறு மனைகளாயினும் வாழ்கின்ற மக்கள் ஒழுக்கக் கோட்பாடுடைய நெறியினை கடைப்பிடிப்பதன் மூலமே 'எயிட்ஸ்' என்ற நோயிலிருந்து எம்மையும் சமூகத்தினையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.


**வெளிநாட்டுப் பயணங்கள் அந்நாடு தழுவிய வரவேற்பு சம்பிரதாயங்களை பார்க்கும் போது முத்தம் கொடுப்பதும் உதடுகளைச் சேர்த்து முத்தமிடும் பண்பாட்டு வடிவங்கள் அந்நாடுகளுக்கு மட்டும் பொருந்தும். ஆனால், எம்புல மக்களுக்கு அவ்வகையிலான பண்பாடுகள் என்பன மிகவும் வேறுபாடு கொண்டவைகளாகும்.**

ஒருவனுக்கு ஒருத்தி ஒருத்திக்கு ஒருவன் எனும் கொள்கையை நாம் உளம் கொள்ள வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்பவர்கள் அப்புலம் தழுவிய கலாசாரம், அவ்வகை கலாசாரத்தோடு ஒன்றித்துப் போன சிலர் எம்புலத்தினில் கால் பதித்தவர்களாய் தம் உறவுகளுடன் பேசி மகிழ்ந்துகொள்கின்ற அவரவர்க்குரிய உடலின்ப வாழ்வியல் வாய்ப்புக்களை 'எயிட்ஸ்' நோயின் காவிகளாய் அவர்கள் சமூகத்தில் பார்க்கப்படுகின்றனர். பொருளீட்டுதலிற்கான நோக்கமும் அத்தேடுதலோடும் ஐரோப்பிய நாடுதழுவிய பயணமாக அமைவதும் அவ் வகையில் அமைத்துக் கொள்வதிலும் தவறேதும் இருப்பதாக கருதமுடியாது. ஆனால் அயல்நாடுகளுக்குத் தேவை கருதி செல்பவர்கள் தவறான பாதைகளில் கால்பதித்துக்கொள்ளாமல் தாயக மண்ணின் பெருமை மண்சார் பண்பாடு, ஒழுக்கம் என்பவைகளை மறந்துபோகலாது எனலாம்.

எம்புல பண்பாடு, இலக்கிய செழுமை எனும் வரையறையின்பால் காலத்தின் கண்ணாடியாக விரிந்துகிடக்கின்றன. பொருளீட்டல் எனும் மகிழ்வினைக் கொடுக்கவல்ல வெளிநாட்டுப்பயணங்கள் அந்நாடு தழுவிய வரவேற்பு சம்பிரதாயங்களைப் பார்க்கும் போது முத்தம் கொடுப்பதும் உதடுகள் இணைந்ததான முத்தமிடும் பண்பாட்டு வடிவங்கள் அந்நாடுகளுக்கு மட்டும் பொருந்தும். ஆனால், எம்புல மக்களுக்கு அவ்வகையிலான பண்பாடுகள் என்பன மிகவும் வேறுபாடு கொண்டவைகளாகுவம். ஆண் + பெண் இருபாலாருடைய உடையலங்காரங்கள் கூடவே இடமறிந்து அணிந்துகொள்வதும் பண்பாடு மட்டுமல்ல ஒழுங்கமைவானதாகவும் கருதமுடியும்.

புலம் பெயர்வின் மூலம் பெறப்படுகின்ற பொருளீட்டலினால் கிராம மட்ட கல்வி நிலையும் மனைச்சிறப்பும் வாழ்வியலும் மேலோங்கி காணப்படுவது நிதர்சனமே. அந்த வகையில் எமக்குரிய பண்பாடுகள் அயல்தேசம் சார்ந்த மாற்றுப் பண்பாட்டினால் அமையும் சிற்றின்பத்தால் ஒருவனுக்கு ஒருத்தி எனும் மகுடவாக்கியம் அங்கே பேணப்படாது. எயிட்ஸ் நோயானது எம்புலவுதினிலும் பரப்புவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் என்றே கூறலாம்.

எயிட்ஸ் நோயானது நுளம்புகளால் ஏற்படுத்தப்படுகின்ற நோயெனக் கொள்ள முடியாது. எம்மாலே எம்வர்க்கத்துக்கு வலிந்ததுகொடுக்கின்ற மன்னிக்க முடியாத ஓர் தப்பான செயலாகும். ஓரிரு நிமிட உடல்பசியினை தீர்க்கின்ற ஒரு சிலர் தன்னை மட்டும் அழித்துக்கொள்ளாமல் தத்தமது துணைவியரையும் வேதனைக்குள்ளாக்குவதோடு நெறிதவறிய இலட்சிய வாழ்விலிருந்து வலிகியவர்களாகவே பார்க்கலாம். அவர்கள் எயிட்ஸ் நோய் பரப்பிகள் மட்டுமல்ல நற்பெயரினையும் இழந்தவர்களாய் மக்களால் கணிக்கப்படுகின்றனர். 'உன்னைத் திருத்திக்கொள் சமுதாயம் தானாகவே திருந்தும்' எனும் நெறிகள் நல்லுரைகள் ஆன்றோர்களால் எழுதப்பட்டு பேசப்படுகின்ற அற்புதவரிகளாகவே இன்றும் உளம் பொதித்த ஓர் கருத்தாகும்.



எமது யாழ். புலநிலையினை பார்க்கும் போது சமூகவுயர் நிலைக்கள இசைவாக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுவருவது கண்கூடு. யாழ். பொது நூலகம் பூங்கா கல்வி சார் நடவடிக்கைகள் மருத்துவம் மற்றும வீதி என்பவனவும் கல்வி சார் நிலையினில் இன்று மழலைகள் பூங்கா என்றே ஆரம்பிக்கும் கல்வியறிவானது ஆரம்பக்கல்வி இடைநிலைக்கல்வி உயர்கல்வி மேலும் பல்கலைக்கழகம் எனும் படிமுறையினில் கல்விப்பரப்பு விரிவடைந்து காணப்படுகின்றது. குருபக்தி பண்பு பணிவு என்பன கல்வியினால் மட்டுமே பெறமுடியும். வாழ்வியலில் பெறுகின்ற - எதிர்கொள்கின்ற தடைகள் ஒவ்வொன்றிற்கும் விரிவான காத்திரமான விடைகள் கல்வியினால்தான் காணமுடியும். ஒழுக்கமும் மலரும் உளமும் மகிழும்.

மாற்றமடைந்து வருகின்ற யாழ்.புல பௌதீக வளநிலையும் ஆன்மிகமும் உடற்பயிற்சிகளும் உள அமைதியும் குதிரையின் கடிவாளம் போன்று அவசியமற்ற பராக்குகளை விடுத்து மனிதம் நிறைந்த நல்ல பண்பான மனிதனாக வாழ்வதே நன்று. உறவிற்கு புறம்பான உடலின்ப ஆசைகளுக்கு அடிமைப்பட்டு வாழ்வோமானால் வாழ்வியல் சவால்களுக்கு ஈடுகொடுக்க முடியாது படுகுழியில் வீழ்வோம் என்பது நிச்சயம். எமது வாழ்வியல் நலனில் கண்ணும் கருத்துமாக பணியாற்றுகின்ற யாழ். சுகாதார திணைக்கழமும் கணமறிந்து ஊடகங்களின் ஊடக நல்வழிகாட்டியாக மலேரியா, டெங்கு நோய் தடுப்பு நடிவடிக்கைகளையும் கொடிய வைரஸ் கிருமியினால் மனித சமூகம் துன்பப்பட்டுக் கொள்கின்ற நிலையிலிருந்து எம்மை காப்பாற்றிக் கொள்கின்ற எயிட்ஸ் நோய் பற்றியும் அவ்வப்போது அறியத்தருகின்ற நிறைவான பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உயிர் கொல்லியான எயிட்ஸ் நோய்க்கு ஆளாகுபவர்கள் எம்புலம் சார் பண்புகள் ஒழுக்க குறியீடுகளான சமூக வாழ்வியல் ஆசாரங்களிலிருந்து விலகியவர்களாகவே கருதப்படுகின்றனர். *(முற்றும்)*

**கே.ஆர்.திருத்துவராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு நேற்று முன்தினம் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் காலணிகள் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மாணவி ஒருவருக்கு காலணி வழங்குவதையும் அருகில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் உதவி அரசாங்க அதிபர் ஆகியோரையும் காலணிகள் மற்றும் துவிச்சக்கரவண்டிகளை பெற்றுக்கொண்ட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

## சிங்கள மகா வித்தியாலயத்தில் தொழிலாளர் தங்குமிடம் அமைப்பு

(அலுவலக நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்படவுள்ள புதிய கட்டட நிர்மாணப் பணிகளில் ஈடுபடவுள்ள கட்டடப் பணியாளர்கள் தங்குவதற்காக சகல வசதிகளையும் உள்ளடக்கியவாறு யாழ். சிங்கள மகாவித்தியாலய வளாகத்தில் தங்குமிட விடுதி ஒன்று அமைக்கப்பட்டுவருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

ஜப்பான் அரசின் நிதியுதவியுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாடிக் கட்டட வேலைகளை தென்னிலங்கையிலுள்ள தனியார் பொறியியல் நிறுவனம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டுவருகிறது.

இந்நிறுவனத்தில் சுமார் 300 வரையான கட்டடத் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

இவர்கள் தங்குவதற்காக யாழ். நகருக்கு அருகில் வசதியான தங்கும் இடங்கள் இல்லாமையைக் கருத்திற்கொண்டு சிங்கள மகா வித்தியாலயத்தில் தங்குமிடம் அமைக்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூர் ஆலய சுற்றாடலில் மது அருந்தும் பிச்சைக்காரர்

(அலுவலக நிருபர்)

நல்லூர் ஆலயத்தில் பிச்சையெடுத்து வரும் பிச்சைக்காரர்கள் இரவுவேளைகளில் ஆலய வீதியில் மது அருந்தும்செயற்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் இரவு 9 மணியளவில் மது அருந்திக்கொண்டிருந்த சுமார் 4 பிச்சைக்காரர்கள் அங்கு நின்ற பொது மக்களால் நையப்புடைக்கப்பட்டனர். அத்துடன் அவர்களிடமிருந்த மதுப்போத்தல்களையும் பறித்து உடைத்தெறிந்துள்ளனர்.

நல்லூர் கந்தன் ஆலயச் சுற்றாடலில் பெரும் எண்ணிக்கையான பிச்சைக்காரர்கள் பிச்சையெடுத்து வருகின்றனர்.

தற்போது அதிகளவு சுற்றுலாப் பயணிகள் நல்லூர் ஆலயத்திற்கு வருகின்றனர். அவர்களிடம் பிச்சையெடுத்து அதிகளவு பணம் சம்பாதிக்கின்றனர்.

யாழ். மாநகர சபையால் நல்லூர் ஆலய சுற்றாடலை துப்புரவாக்குவதற்காக தினந்தோறும் 100 ரூபா பணம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் அதிக பணங்களை சம்பாதிக்கும் பிச்சைக்காரர்கள் மது அருந்தித் தமது பணத்தை விரையமாக்குவதுடன், புனித ஆலய சூழலுக்கும் கேடு விளைவிக்கின்றனர். அத்துடன் மச்ச, மாமிச உணவுவகைகளையும் ஆலய சுற்றாடலில் உண்டபின் கழிவுகளை வீசிவிட்டுச் செல்கின்றனர். இதனால், வழிபட வரும் பக்தர்களின் மனநிலையில் பாதிப்பை ஏற்படுத்துவதுடன், ஆலயத்தின் புனிதத் தன்மைக்கு அவலத்தை ஏற்படுத்துகின்றனர்.

இதேவேளை, கட்டாக்காலி நாய்களின் தொல்லையும் ஆலய சுற்றாடலில் அதிகரித்துள்ளது. ஆலயச் சுற்றாடலில் இவை மலங்கழிப்பதால் வழிபடவரும் பக்தர்கள் அசௌகரியமடைந்துள்ளனர்.

இவற்றைக் கருத்திற் கொண்டு மேற்படி சம்பவங்களைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டுமென பக்தர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக வேட்பாளர்களுக்கு பொலிஸார் விளக்கம்

யாழ்ப்பாணம்,

யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்பட இருக்கும் பாதுகாப்பு மற்றும் நடைமுறைகள் தொடர்பாக வேட்பாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளைப் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு கட்சிகள் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கலந்துரையாடல் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடந்த 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு பொறுப்பதிகாரி மல்ஹூம் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் தேர்தல் காலப் பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் பாதுகாப்பு மற்றும் ஒழுங்குவிதிமுறைகள் பற்றி வேட்பாளர்களுக்கு விரிவாக எடுத்து விளக்கப்பட்டது. இதேவேளை, வேட்பாளர்களின் பெயர், விலாசம் போன்ற விபரங்களைத் தொகுதி அமைப்பாளர்கள் மூலம் திரட்டுவதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

மார்ச் மாதம் 8 ஆம் 9 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு நடைபெறவுள்ளது. எதிர்வரும் 17ஆம் திகதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

## சட்டமாணி கற்கைநெறிக்கான தேர்வுப்பரீட்சை

(அலுவலக நிருபர்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் சட்டமாணி கற்கை நெறிக்கான (2011/2012) தேர்வுப் பரீட்சை நாளை மறுதினம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்திலும் முகாமைத்துவ பீட மற்றும் கலைப்பீட பரீட்சை மண்டபங்களிலும் நடைபெறவுள்ளதாக யாழ். பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய நிலையத்தில் 746 விண்ணப்பங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ள போதும் 726 விண்ணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவர்கள் அனைவருக்கும் தேர்வுப்பரீட்சைக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக் கற்கைநெறிக்கு இம்முறை 100 பேர் வரை அனுமதிப்பதற்கு யாழ். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இணங்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரதேச அபிவிருத்திக்கேற்றவாறு தேர்தல் விஞ்ஞாபனம்

யாழ். மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு பிரதேச ரீதியாக மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் பற்றி பிரதேச மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் பிரதேசத்திற்கு ஏற்றவாறு தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிக்க போட்டியிடும் கட்சிகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள வலி. தென்மேற்கு, வலி. தெற்கு ஆகிய இரு பிரதேசங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களும் தொகுதி அமைப்பாளர்களும் இணைந்து தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சீடன்

## அதிர்ச்சி கொடுத்த குறுந்தகவல்

**அதிர்ச்சியை** கொடுத்த அந்த குறுந்தகவலில் இருந்த செய்தி கொஞ்சமே கொஞ்சம்தான். 'நடிகை சரண்யா மோகனுக்கு இனி எந்த தயாரிப்பாளரும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டாம். அவரை படத்தில் ஒப்பந்தம் செய்யவும் வேண்டாம். இப்படிக்கு தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கம்'. தனது சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் அனுப்பியிருந்த இந்த குறுந்தகவலின் பின்னணி என்னவாக இருக்கும் என்பதை தெரிந்து கொள்வதில் அனைவருக்குமே ஆர்வம் இருந்தது.

இளம் வயதிலேயே பலரையும் கவர்ந்தவர். கவர்ச்சி காட்ட மாட்டேன் என்ற கொள்கையோடு அறிமுகம் ஆகி இன்னமும் அதில் உறுதியாக இருக்கிறார். நல்ல கதையாக இருந்தால் மட்டுமே அதில் நடிப்பேன் என்று பிடிவாதம் பிடிப்பதால் அவர் இழந்த லட்சங்களும் அதிகம். இ[illegible]ர் நடிப்பில் உருவாகிக் கொண்டிருக்கும் அழகர் சாமியின் குதிரை இன்னும் சில வாரங்களில் திரைக்கு வரவிருக்கிறது. இந்த நேரத்தில் இதென்ன அணுகுண்டு?

கேரளவில் உள்ள பத்திரிகை நண்பர்களை தொடர்பு கொண்டு செய்தியின் பின்புலத்தை அறிந்தோம். ஏதோ ஒரு மலையாள படத்தில் நடித்தாராம் சரண்யா. அதில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கலில் இவரே ஒரு தொகையை திருப்பி தர வேண்டியிருந்ததாம். அதற்காக ஒரு காசோலையும் கொடுத்திருந்தார். செக் வங்கிக்கு வரும்போது இவர் தரப்பிலிருந்து ஸ்டாப் பேமெண்ட் கொடுத்துவிட்டார்களாம்.

இதனால் ஆத்திரமுற்ற தயாரிப்பாளர் அம்மாநில தயாரிப்பாளர் சங்கத்தில் புகார் செய்ய நடிப்புக்கே தடை என்கிற அளவுக்கு போனது நிலைமை!

## அன்ரிகளை எப்படி மடக்கலாம்?

**ஆன்ரிகளை** எப்படி மடக்கலாம் என்று கேள்வி எழுப்பி, அந்தக் காட்சியில் சூப்பர் ஸ்டார் ரஜினி மற்றும் உலக நாயகன் கமல் பெயர்களை இழுத்து சிறுமைப்படுத்தியுள்ளாராம் பிரபல தயாரிப்பாளரான எஸ்.பி.பி சரண். இவரது தயாரிப்பில் உருவாகியுள்ள படம் ஆரண்ய காண்டம். மூன்றாம் தர மலையாளப் பட ரேஞ்சுக்கு இதில் காட்சிகளும் வசனங்களும் இடம் பெற்றுள்ளனவாம்.

படத்தில் ரஜினி, கமலை சிறுமைப்படுத்தும் காட்சிகள் உள்ளன.'ஆன்ரிகளை மடக்குவது எப்படி?' என்று இளைஞர்கள் பேசுவது போன்று ஒரு காட்சி. இதற்கு ஒருவன் இப்படி ஐடியா கொடுக்கிறான்: 'கமல் பிடிக்குமா? ரஜினி பிடிக்குமா? என்று ஆன்ரிகளிடம் கேள். கமல் பிடிக்கும் என்றால் கிஸ் கொடுத்து ஈஸியா மடக்கிவிடலாம். ரஜினி பிடிக்கும் என்றால் அந்த பெண்மணி வேறுமாதிரி மடக்க வேண்டும்' என்று விளக்கம் சொல்வது போன்று வசனங்கள் இருந்தன. எனினும் அவற்றை நீக்கி விட்டார்கள்.

தணிக்கை குழு நடவடிக்கைக்கு எஸ்.பி.பி. சரண் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். ஒருவேளை விளம்பர உத்தியின் ஒரு பகுதியாக இந்த வேலையைச் செய்திருப்பாரோ எஸ்.பி.பி. சரண்.


வாடா மல்லி

## சினி பிட்ஸ்

- 'ஆடுகளம்' வில்லன் கிஷோர் 'பரிமளா டாக்கீஸ்', 'முதல் இடம்', 'பொன் மாலைப் பொழுது' ஆகிய படங்களில் நடிக்கிறார்.
- செல்வராகவன் எழுதிய கதையின் ஒரு வரியை கேட்ட கமல் கால்ஷீட் கொடுக்க சம்மதித்திருக்கிறார். இதில் தீவிரவாதி வேடம் ஏற்கிறார் கமல்.
- சமீபத்தில் ஐதராபாத்தில் நடந்த பேஷன் ஷோவில் பங்கேற்றார் ஸ்ரேயா
- 'பில்லா 2' படத்தில் அஜீத் ஜோடியாக இந்தி நடிகை ஒருவரை நடிக்க வைக்க முயற்சி நடக்கிறதாம்.
- 'டிசைனிங் படிக்காவிட்டாலும் ஸ்ருதிக்கு லேட்டஸ்ட் டிரெண்ட் காஸ்ட்யூம் தான் பிடிக்கும்.
- 'உருமி' படத்தில் வேலைப்பாடுகளுடன் கூடிய பழங்கால பாணியிலான ஆடைகளை அணிந்து நடித்துள்ளார் ஜெனிலியா
- 'வித்தகன்' படத்தில் கோர்ட் காட்சிகள் பரபரப்பாக படமாக்கப்பட்டள்ளதாம். ஹீரோ பார்த்திபனின் வக்கீலாக சுரேஷ்கோபி நடித்திருக்கிறார்.
- கே.வி.ஆனந்த் இயக்கும் 'மாற்றான்' படத்தில் நடிக்கும் சூர்யா அதற்கான ஹோம் வர்க்கில் பிஸியாக இருக்கிறாம்
- ஷங்கர் இயக்கும் 'நண்பன்' படத்துக்கு வைரமுத்துவின் மகன் மதன் கார்க்கி வசனம் எழுதுகிறார்.


நர்த்தகி


நண்ப

சந்தே
உண்மை
இயக்குகி
வேடத்தி
நடிக்கவி
சிவன் பட
மூலம் உ
'உருமி' ப
டப்பிங்
நாட்கள்
அ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நண்பன்

## நோட் ரீச்சபுள் அட் த மூவ்மேண்ட்

**நந்தா** படத்தின் தயாரிப்பாளரான இவர் சமீபத்தில் நடிகர் சூர்யாவை நேரில் சந்தித்து பணம் கிணம் கேட்டிருப்பாரோ? இல்லைவே இல்லை. பல வருடங்களுக்கு பிறகு இவர் இணைத் தயாரிப்பாளராக பொறுப்பேற்றிருக்கும் நர்த்தகி படத்தின் பாடல் வெளியீட்டு விழாவுக்கு வரச்சொல்லி அழைத்தார். அவ்வளவுதான்!

ஆரம்பத்தில் கறிவேப்பிலை மணக்கிற ரேஞ்சில் இருந்த சுர்யாவை, ஒரு கம்பீர நடிகராக்கியதே நந்தா என்ற திரைப்படம்தான். அந்த நம்பிக்கையில்தான் நர்த்தகி ஆடியோ வெளியீட்டு விழாவுக்கு அழைத்தாராம் கேசவன். அவரிடம் 'கண்டிப்பா இந்த நிகழ்ச்சியில் நான் இருப்பேன்' என்று வாக்குறுதியெல்லாம் கொடுத்திருந்த சூர்யா, நிகழ்ச்சி நடைபெறும் நாளன்று தொடர்பு எல்லைக்கு அப்பால் சென்றுவிட்டார். (இப்பல்லாம் செல் போன்ல நொட் ரீச்சபுள் அட் த மூவ்மெண்ட் என்பதையே ரிங்டோனாக வச்சுருக்காங்க சிலர். அதுல சூர்யாவும் ஒருவரா இருக்கலாம்)

கேசவன் சூர்யாவின் உதவியாளரை தொடர்பு கொள்ள, அவரோ 'நான் சாரை பார்த்தே பல மாசம் ஆச்சே' என்றாராம். இதே கதிதான் இப்படத்தின் மெயின் தயாரிப்பாளரான புன்னகைப்பூ கீதாவுக்கும். இவர் தயாரித்த 'அறிந்தும் அறியாமலும்' படத்தின் மூலம்தான் ஆர்யாவுக்கும் ஒரு அந்தஸ்து கிடைத்தது. கீதாவின் அழைப்புக்கு ஆர்யாவும் செவி சாய்க்கவில்லை. நிகழ்ச்சிக்கு வராமல் அவரும் எஸ்கேப்!

ந்தோஷ் சிவன் இயக்கும் 'உருமி' படத்தில் நான் நடிப்பதாக வந்த செய்திகளில் ண்மையில்லை, என்றார் ஆர்யா. 'உருமி' என்கிற படத்தை சந்தோஷ் சிவன் க்குகிறார். பிரபு தேவா, ப்ருத்விராஜ் நடிக்கும் இந்தப் படத்தில் ஆர்யா, ஒரு கௌவ டத்தில் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாயின. ஆனால் 'உருமி'யில் நான் க்கவில்லை என விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், சந்தோஷ் ன் படங்களில் நான் நடிக்க ஆர்வமாக உள்ளேன். அவர் படங்களில் நடிப்பதன் ம் உலக அளவில் அங்கீராம் கிடைக்கும் என்பது உண்மைதான். ஆனால் இந்த ருமி' படத்தில் நான் நடிக்கவில்லை. பாலாவின் 'அவன் இவன்' படத்தில் உள்ள பிங் வேலைகள் முடிந்தபின் நான் வெளிநாடு செல்லவிருக்கிறேன். சில கள் அங்கு இருந்துவிட்டு மார்ச் 2ஆம் திகதி திரும்புகிறேன். அதன்பின் லிங்குசாமி இயக்கத்தில் 'வேட்டை' என்ற படத்தில் மாதவன், சமீராவுடன் நடிக்கவுள்ளேன்..., என்றார். தங்க ஊசியா இருந்தாலும் கண்ணுல குத்த வேணாமேனு நைசா நழுவிட்டாரோ....

தடகள வீராங்கனை பற்றிய கதையான 'ஆசைப்படுகிறேன்' படப்பிடிப்பு மலைப்பகுதியில் ஒரு மாதம் நடந்தது

## மாற்றான்

**விரைவில்** வரவிருக்கும் 'கோ' படத்துக்குப் பிறகு ஆனந்த் இயக்கும் இந்தப் படத்தில் சூர்யா வித்யாசமான பாத்திரத்தில் நடிக்கிறார் என்று சொல்லப்பட, அந்த வித்தியாசமான வேடம் இதுதான் என்று ஆளாளுக்கு ஒரு யூகத்தை அடித்துவிட்டார்கள்.

சூர்யா ஏற்கப்போகும் வேடம் இதுவரை உலக சினிமாவிலேயே இடம்பெறாத ஒன்று என்றும், அவர் ஒட்டிப் பிறந்த 'சயாமீஸ் ட்வின்ஸ்' (தலை ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தை) வேடத்தில் நடிக்கப் போகிறார் என்றெல்லாம் செய்தி வந்தது. இப்படியொரு செய்தி பரவ முக்கிய காரணம், படத்தில் பணியாற்றும் முக்கியமான ஒரு 'தொடர்பு பார்ட்டி'தான் என்பது பாவம் ஆனந்துக்கு தெரிய வாய்ப்பில்லை!

இது குறித்து ஆனந்த் கூறுகையில், 'சூர்யாவை வைத்து மாற்றான் என்று ஒரு படத்தை இயக்குகிறேன் என்பது மட்டும்தான் உண்மை. அது தொடர்பாக வந்த வேறு எந்த செய்தியிலும் உண்மையில்லை. யார் இதுபோல பரப்புகிறார்கள் என்றும் தெரியவில்லை. இப்போது நான் கோ பட வேலைகளில் பிஸியாக உள்ளேன். மாற்றான் படப்பிடிப்பு கூட இன்னும் ஆரம்பிக்கவில்லை.

ஒரு விஷயத்தைச் சொல்கிறேன் இந்தப் படத்தில் சூர்யா 5 வித்தியாசமான வேடங்களில் நடிக்கிறார். அவ்வளவுதான். மற்றபடி சயாமீஸ் ட்வின்ஸ் என்பதில் எந்த உண்மையும் இல்லை. இன்னும் மூன்று மாதங்களுக்குப் பிறகுதான் இந்தப் படம் குறித்து முடிவான செய்திகளைத் தருவோம்', என்றார்.


கீழத் தெரு கிச்சா



## பிரசவ காட்சியில் அனுயா

**ஷங்கர்** இயக்கும் நண்பன் படத்தில் இரண்டாவது நாயகியாக ஒப்பந்தமாகியுள்ளார் 'எஸ்.எம்.எஸ்.' நாயகி அனுயா. விஜய், ஜீவா, ஶ்ரீகாந்த் நடிக்கும் நண்பன் படத்தில் விஜய்க்கு ஜோடியாக இலியானா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். ஊட்டியில் படப்பிடிப்பும் நடந்து வருகிறது.

இந்த நிலையில் இந்தப் படத்தின் இன்னொரு நாயகியாக சிவா மனசுல சக்தி, நகரம் படங்களின் நாயகி அனுயா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கதைப்படி இலியானாவின் அக்காவாக நடிக்கிறார் அனுயா. இந்தி 3 இடியட்ஸில் மோனா சிங் நடித்த வேடம் இது. படத்தின் முக்கியமான பிரசவ காட்சியில் அனுயா நடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்புணர்வு உள்ள மக்களாலேயே ஊழலை தடுத்து நிறுத்த முடியும்

> மிகக் கீழ் மட்டத்தில் இடம்பெறும் ஊழல் கூட பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற உண்மையை நாம் காணத்தவறக் கூடாது. கீழ் மட்ட அதிகாரிகளினாலும், கிராமிய மட்டத்திலும் மேற்கொள்ளப்படும் ஊழல் சார்ந்த அல்லது அரசியல் செல்வாக்குடன் கூடிய தீர்மானங்கள் அங்குள்ள தாழ்மையான மக்களின் வாழ்க்கையை முற்றுமுழுதாக சீரழித்துவிடக்கூடியனவாகும்.

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

அவர்களினாலேயே பதவிகளில் அமர்த்தப்பட்டு பலமும், அதிகாரமும் கொண்டவர்களாக உள்ளவர்களைத் தான் அவர்கள் நாட வேண்டியுள்ளது.

பரிகாரம் காண்பதற்கான வேறு வழியேதும் இல்லாத நிலையில் செயலாக்கத்துறையும், சட்டவாக்கத்துறையும், சட்டத்துறையுமே அநீதிக் கெதிராக அவர்களுக்குள்ள ஆயுதங்கள். இவ் ஆயுதங்களிலோ அல்லது அவற்றின் அங்கங்களிலோ நம்பிக்கை வைக்க முடியாது என்ற நிலை ஏற்படும் போது எதிர்மறையான, தவிர்க்க முடியாத சூழலில் அவர்களுக்கு சட்டத்தை தங்கள் கையில் எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனவே தங்கள் பொறுப்புக்கள் தொடர்பான இன்னும் அதிகரித்த உணர்வு நிலை பொதுத்துறை பதவிகளை வகிக்கும் அனைவர் மத்தியிலும் தேவை. செல்வந்தர்களுக்கும், வாய்ப்பு வசதிகள் உள்ளவர்களுக்கும் அவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பரிகாரம் காண்பதற்கு வேறு வழிவகைகள் இருக்கலாம். ஆனால், வறிய வசதிகளற்றவர்களுக்கு எந்த மார்க்கமும் இல்லை.

இரண்டாவது அம்சம் என்னவெனில் நமது நாடானது விவசாயம் சார்ந்த கிராமிய சமுதாயமாகும், நமது பிரஜைகளில் பெரும்பான்மையானவர்கள் அதிகார மையத்திலிருந்து வெகுதொலைவில், அதை இலகுவில் எட்டமுடியாத நிலையில் உள்ளனர்.

ஆனால், அதிகாரத்துவ கட்டளைகளும், உத்தரவுகளும் மட்டும் அவர்களின் கிராமிய வதிவிடங்களை சென்றடைந்து விடுகின்றன. இங்கு சமனிலை இல்லை. ஏனெனில், அவர்கள் பரிகாரம் தேடுவதற்கான அதிகார மைய நிலையத்தை மிகுந்த சிரமத்துடனும், பணச்செலவுடனும், மிகுந்த இடையூறுகளுக்கு மத்தியிலும் சென்றடையக் கூடியதாக உள்ளது. இத்தனைக்கும் மத்தியில் அவர்கள் அதிகார மையத்தை சென்றடையும் போது அங்கும் பக்கச்சார்பும், ஊழலும் நிலவுமானால் அவர்கள் இறுதியாகத் தஞ்சம் கோரிய இடத்திலும் மனமுறிவை எதிர்நோக்க நேருகின்றது. எனவே, அதிகார நாற்காலிகளில் இருப்பவர்கள் அவர்களது நிர்வாகத்தை சீரிய நேர்மையுடன் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் அவர்கள் மீது அழுத்தமாகவுள்ளது.

சிறந்த வாய்ப்பு வசதிகளுடைய உயர் பதவியிலிருந்து கொண்டு கல்விசார் கண்ணோட்டத்துடன் நோக்கும் போது ஊழலின் மனித தத்துவ அம்சம் நமது பார்வையிலிருந்து மறைந்து செல்லும் நிலையே ஏற்படுகின்றது. சம்பந்தப்பட்ட மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்ற இந்த விடயத்தில் வளைந்து கொடுக்காது சீரிய நேர்மையுடன் உறுதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அதிகாரத்திற்குரிய அனைவரிடமும், குறிப்பாக வளர்முக நாடுகளில் உள்ளது.

மிகக் கீழ் மட்டத்தில் இடம்பெறும் ஊழல் கூட பெரும் பாதிப்பினை ஏற்படுத்துகின்ற உண்மையை நாம் காணத்தவறக் கூடாது. கீழ் மட்ட அதிகாரிகளினாலும், கிராமிய மட்டத்திலும் மேற்கொள்ளப்படும் ஊழல் சார்ந்த அல்லது அரசியல் செல்வாக்குடன் கூடிய தீர்மானங்கள் அங்குள்ள தாழ்மையான மக்களின் வாழ்க்கையை முற்றுமுழுதாகச் சீரழித்துவிடக்கூடியனவாகும். கிராமிய மட்டத்திலிருந்து அதிகாரத்துவ பீடம் வரை நிர்வாக மட்டங்கள் அனைத்தும் ஊழல் அற்றனவாக இருப்பதை உறுதி செய்து கொள்ளும் முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட வேண்டும். அரசத் துறை செயலாக்கத் துறை, சட்ட மற்றும் சட்ட வாக்கத்துறைகள் அனைத்தும் அவற்றின் அனைத்து பிரிவுகளும் இந்தக் களங்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டும்.


இந்த அதிகாரிகள் வெறுமனே தேவை மட்டும் காரணமாக ஊழலில் ஈடுபடுவதில்லை என்பதை உறுதி செய்து கொள்வது முக்கியம். ஈடுகொடுக்க முடியாத பொருளாதாரத் தேவையினால், அடிப்படை நுகர்வுத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தவறுசெய்த சம்பவங்கள் பலவுள்ளன. அதிகார வர்க்க ஏணியில் கடை நிலையில் உள்ளவர்களுக்கு வாழ்க்கைச்செலவுக்கு ஏற்றதான ஊதியம் கிடைக்கின்றதா என ஊர்ஜிதம் செய்து கொள்வதும் ஊழல் பிரச்சினை தீர்வில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒன்று.

கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய மற்றுமொரு அம்சம், சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் மீது அடிக்கடி ஏற்படுத்தப்படும் தலையீடுகள். தென் ஆசிய பவளப் பாறைகளைப் பாதுகாப்பது தொடர்பான தென் ஆசிய கூட்டுறவு சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டக் கூட்டத்தில் நேற்று நான் உரையாற்றினேன். சட்ட விரோத செயற்பாடுகள் மூலம் எமது பவளப் பாறைகளுக்கு இடைவிடாது அழிவு ஏற்படுத்தப்பட்டு வருவது தொடர்பாக இக் கலந்துரையாடலில் பேச்சு இடம்பெற்றது. சம்பந்தப்பட்ட நபர்களுக்கெதிராக வழக்குத் தொடரப்படும் போதும் அந்த சட்ட விரோத செயற்பாட்டை நிறுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதும் அவர்களை வேலைக்கமர்த்துபவர்கள் தலையிட்டு மேலதிக நடவடிக்கைகளை தடை செய்கின்றார்கள். இதன் மூலம் மீளப்பெற முடியாத பல நூற்றாண்டுகளுக்கு சீர் செய்யப்பட முடியாத சேதம் எமது சுற்றாடலுக்கு ஏற்படுத்தப்படுவதுடன் எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் மிகப் பெரிய இழப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் அனைத்து அரசு செயற்பாட்டுத் துறைகளிலும் இடம்பெற்று வருகின்றன. இவை அனைத்தும் தொடர்நிலை கருதுகோள்கள் என்ற முறையில் அவை சமுதாய மற்றும் செயல்முறை சார்ந்த ரீதியில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

முறைப்பாடு தெரிவிப்பதிலும், சாட்சியமளிப்பதிலும் பயமற்ற சுதந்திர நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் அப்படியான செயற்பாடுகளை இடைவிடாது நிறுத்துவதற்கும் முறைப்பாடு செய்தலை தைரியப்படுத்துவதற்கும் பல வழிகள் உள்ளன. ஊழல் ஒழிப்புத் துறையில், சட்டத்துறையை விட இது விடயத்தில் அதிக தாக்கம் உள்ளது.

உலகளாவிய கவனத்தை ஈர்த்த ஐக்கிய அமெரிக்காவின் திருமதி. கேத்தரின் எஜயோவிஸின் வழக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. நியூயோர்க் மாநகர மையப் பகுதியில் பலர் முன்னிலையில் அடித்துக் கொலைசெய்யப்பட்டார். அவர்களில் ஒருவராவது அவரைப் பாதுகாப்பதற்கு முன்வரவில்லை எனக்கண்டு உலகமே அதிர்ச்சியடைந்தது. சாட்சியாக சிக்கவைக்கப்படுதல், பயமுறுத்துதல்களை எதிர்கொள்ள நேர்தல், அவமதிப்பு, தொந்தரவுகள் பழிவாங்கப்படுல் மற்றும் நீதிமன்றத்தில் கடுமையாக நடத்தப்படுதல் என்பன பற்றிய பயம் காரணமாகவே அவரை காப்பாற்றுவதற்கு எவரும் முன்வரவில்லை. என்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. ஜெனோவிஸ் வழக்கு தொடர்பாக உலகெங்கும் கருத்தரங்குகள் நடைபெற்றன. இது எமக்கு ஆழமான முக்கியத்துவமுள்ள ஒரு விடயம். ஏனெனில், உலகளாவிய ஆய்வுகளின் படி முறைப்பாட்டாளர்கள் அச்சம் காரணமாகவே ஊழலுக்கெதிராக பகிரங்கமாக செயற்படமறுக்கின்றார்கள். இலஞ்சம், ஊழல் பிரச்சினைகளைக் கையாள்பவர்களுக்கு முக்கியமான செய்தியொன்று இச் சந்தர்ப்பத்தில் உள்ளது.



*(தொடரும்)*

**செ. ரமேஷ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வழக்கின் எதிரிகள் யார்? எதிர்வாதிகள் யார்?

*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

**நியாயமான சந்தர்ப்பம் வழங்கப்படுதல்**

நிரவாகச் சட்டம் (Administrative Law) அறிமுகப்படுத்திய ஒரு கோட்பாடு தான் ஒரு வழக்கில் எதிராளியாகக் குற்றம் சுமத்தப்பட்டவருக்கு தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுதலித்து தான் ஒரு நிரபராதி என்பதை எண்பிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுதல் (Right To Be Heard) வேண்டும் என்பதாகும். இங்கே நிரூபணச் சுமை (BURDEN OF PROVE) குற்றம் சுமத்தப்பட்டவரையே சேருகின்றது. ஆனால், பொதுவாக இந்த நிரூபணச் சுமை யார் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறாரோ அவர் மீதே சுமத்தப்படுவது வழக்கமாகும். குற்றவியல் வழக்குகளில் அரச தரப்பினரிடமே குற்றச்சாட்டுக்களை எண்பிக்கும் பொறுப்பு (Responsibility of Burden of Proof) சுமத்தப்படும். குற்றம் சுமத்தப்பட்டவரைப் பார்த்து அவர் மீதான குற்றச்சாட்டுக்களை மறுதலிக்கும் படி (Dosprove) கேட்கப்பட முடியாது.இது சாதாரண வழக்கு நடபடி முறைமையாகும்.(Normal Proceedure).

**நிரூபிக்கப்படும் வரை நிரபராதி**

யாராவது ஒருவர் ஒரு குற்றவியல் வழக்கில் சந்தேகநபராகவோ (The Suspect) குற்றம் சாட்டப்பட்டவராகவோ (The Accused) இருக்கலாம். ஆனால் அத்தகைய குற்றச் சாட்டுகள் யாவும் நிரூபிக்கப்படும் வரை அந்த எதிராளியானவர் நிரபராதி என்ற ரீதியில் ஊகம் கொள்ளப்படும். (Presumption is Innocent that Means Not Guilty Till it is Proved). இதுவே குற்றவியல் சட்டத்தின் ஆணிவேராகும்.

**ஜீவனாம்ச வழக்குகள்**

கணவனால் கைவிடப்பட்ட ஒரு பெண் தனக்கும் தனது குழந்தைகளுக்கும் பராமரிப்பு அல்லது படிவழக்கு ஒன்றை ஏதாவது ஒரு நீதி வலயத்திலுள்ள நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். ஒரு பராமரிப்பு வழக்கானது முற்றாக ஒரு சிவில் வழக்கோ அல்லது முற்றாக ஒரு குற்றவியல் வழக்கோ அல்ல. இரண்டும் கலந்தது. இத்தகைய வழக்குகளில் பெண்கள் முறைப்பாட்டாளர்களாகவும் கணவன் பிரதிவாதி என்றும் அழைக்கப்படுவார்கள். இத்தகைய வழக்குகளில் பிரதிவாதி நீதிமன்றுக்கு சமுகம் கொடுக்காத பட்சத்தில் பொலிஸ் மூலம் அழைப்புக்கட்டளை (Notice) அனுப்பவும். அதற்கும் நீதிமன்றுக்கு வர பிரதிவாதி தவறினால் பிடியாணை (Warrant) அனுப்பவும் நீதிவான் நீதிமன்றத்தால் முடியும். அதற்கும் தவறும் பட்சத்தில் பகிரங்க பிடியாணை (Open Warrant) பிறப்பிக்கப்படும். தேவை ஏற்படின் (Bench Warrant) உடன் பிடியாணை போட்டு உடன் கைது செய்யவும் மாஜிஸ்திரேட் நீதிவானுக்கு பூரண தற்றுணிபு அதிகாரம் உண்டு.

**வளவுக்குள் வரும் மூன்று வகையினர்**

ஒருவரது வளவுக்குள் அல்லது காணிக்குள் வருபவர்களைச் சட்டம் மூன்று பிரிவினராக வகுத்துள்ளது.

1. அழைக்கப்பட்டோர்கள் (Invitees)
2. அனுமதி பெற்றோர்கள் (Permitted)
3. அத்துமீறியோர்கள் (Tresspassers)

இந்த மூன்று வகையினரில் அழைக்கப்பட்டோர்கள் என்பது விருந்தினர்கள். இவர்களுக்கு இந்த வளவுக்குள் இருக்கும் வெளிப்படையான ஆபத்துக்களையும் உட்கிடையாக அல்லது மறைமுகமான ஆபத்துக்களைக் குறிப்பிடல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடாதுவிடின் அவர்கள் வளவுக்குள் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடியில் சிக்கினால் அல்லது ஏதாவது பொறியில் சிக்கினால் வளர்ப்பு பிரயாணிகளால் தாக்கப்பட்டால் அல்லது மின் ஒழுக்கு காரணமாகத் தாக்கத்திற்கு உள்ளானால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கு அவர்களை அழைத்தவர்களே நீதிமன்றில் எதிராளிகளாக வந்து இழப்பீடு கட்டவேண்டும். அதாவது அவர்களுக்கு இவரால் ஏற்பட்ட இழப்புக்களுக்கு பணரீதியாக இழப்பீடு கட்டவேண்டும்.

தேச வழமைச் சட்டத்தில் அயல்காணிக்காரன் எல்லை வேலி அடைப்பதற்காக மட்டும் அனுமதி பெறாமல் அடுத்த வளவுக்குள் நுழைய முடியும் என சின்னப்பா எதிர் கனகர் என்ற வழக்கில் தீர்க்கப்பட்டுள்ளது.

இரண்டாவது வகையினர் அனுமதி பெற்றோர்கள் (Permitted) எனப்படுவர். அவர்கள் யார் என்றால் பிச்சைக்காரர்கள் , தபால்காரன், பால்விநியோகம் செய்வோர் என பல வகைப்படுவர். இவர்கள் எம்மோடு ஏதோ ஒரு காரணத்திற்காகவே தொடர்பாடல் (Communication) கொள்கிறார்கள். ஆகவே இவர்களது மெய்ப்பாதுகாப்பு (Security) தொடர்பில் வளவுக்காரனுக்கு பெரும் பொறுப்பு உண்டு. கடி நாய் கவனம் என்ற அறிவிப்பு பலகை போடப்படல் வேண்டும்.

*(தொடரும்)*

## சட்டமும் சமூகமும் 14




சட்டம் தொடர்பான உங்கள் சந்தேகங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்

**அனுப்பவேண்டிய முகவரி**
**யாழ் ஓசை**
**வீரகேசரி கிளைக் காரியாலயம்,**
117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

# சீதனக் கைவிலங்கு

இவ்வுலகத்தைக் காத்துக் கொண்டிருக்கும் சக்தியின் வடிவிலிருந்து தோன்ன்றியவர்களே மென்மையான உணர்வு கொண்ட பெண்கள். சமூகத்தில் ஒரு பெண்ணானவள் பல்வேறுபட்ட அடக்குமுறைகளால் சிறைப்பிடிக்கப்படுகின்றாள். ஒரு தாயின் வயிற்றில் கருவுற்று, குழந்தையாய் மடியில் வளர்ந்து, பிள்ளையாய் பாடசாலை சென்று, குமரியாய் சமூகத்திற்கு மதிப்பளித்து, மனைவியாய் இல்லறத்தை வழிநடத்தி, சந்ததி தழைக்க தாயாகி குழந்தையை பெற்றெடுக்கின்றாள். இவ்வாறாக பெண்ணானவள் சமூகத்தில் பல கதாபாத்திரங்களை ஏற்று வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

இத்தகைய பெண்களுக்கு சமூகம் ஏதோவொரு வகையில் கைது செய்கின்றது. பெண்ணை பெற்றெடுத்து வளர்த்து, ஆளாக்கி சமூகத்தில் ஓர் நற்பிரஜையாக்கி, அழகு பார்க்கின்றார்கள் பெற்றோர்கள். திருமண வயதினை அடைந்ததும் தன்மகளை இன்னொரு ஆண்மகனுக்கு இல்லத்து அரசியாய், சிறந்த துணைவியாய் வாழ்க்கையை வழிநடத்தி செல்லுமளவிற்கு பக்குவப்பட்டபோது திருமணம் எனும் பந்தத்தினுள் இணைக்கின்றனர். இச் சந்தர்ப்பத்திலே சீதனம் எனும் பிசாசு அவளை சிறைப்படுத்தி விடுகின்றது.

ஒரு தாயானவள் கருவுற்றிருக்கும் போது தான் தாய்மையடைந்து விட்டதை எண்ணி பூரிப்படைவாள். பிறக்கப் போகும் சிசு ஆணா பெண்ணா என்ற பாகுபாடின்றி பெற்று வளர்த்து கல்வியில் சிறக்கவைத்து கல்யாண வயதினை அடைந்ததும் பெண்ணைப் பெற்றெடுத்தவர்கள் சங்கடப்படுகின்றார்கள். ஏனெனில் சீதனப் பிசாசு தன் மகளை சுட்டுவிடுமோ என்று எண்ணி வருந்துகிறார்கள்.

வெளிநாட்டுப் பணம் படைத்தவர்கள் நிறைய அள்ளி கொடுப்பார்கள். ஏனெனில் வெளிநாட்டில் கஷ்டப்பட்டு குளிர், இரவு பகல் பாராது பிள்ளைகள் பெற்றவர்களுக்கு அனுப்ப அதை அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து திருமணம் செயகிறார்கள். இந்த நாட்டிலே வாழ்ந்து வரும் பெற்றோர்கள் கஸ்டப்பட்டு பிள்ளைகளை படிக்க வைத்து அவர்களை வாழ்க்கையின் படி நிலையில் வழிநடாத்தி வருகின்றார்கள். இத்தகைய பெற்றோர்கள் சீதனத்திற்கு எங்கே போவார்கள்? இவர்களின் பிள்ளைகளின் வாழ்க்கையினை இருட்டாக்கி விடலாமா?

அன்பான பெற்றோர்களே!

சற்று சிந்தியுங்கள் அன்பான மகனுக்கு தெரிவு செய்யும் பெண்ணானவள் வீட்டிற்கு ஒளி தரும் மனைத் தெய்வம். இவள் சிரித்தால் தான் உங்கள் இல்லம் பிரகாசிக்கும். இத்தகைய பெண்களின் பெற்றோர்களை வருத்தாதீர்கள். சுரண்டாதீர்கள். அவர்களையும் உங்களைப் போன்று நினைத்து வாழவிடுங்கள். அச்சடிக்கப்பட்ட பணநோட்டுக்களல் மாத்திரம் இல்லறம் சிறக்காது. மங்கையவள் இதயத்தில் இருந்துவரும் இன்சொல்லும் புன்னகையும் தான் ஒளிவீசும். பெண்கள் வாழவேண்டியவர்கள் மற்றவர்களை வாழவைப்பவர்கள்.

எனவே பெண்களின் வாழ்க்கையில் தெரிந்தோ தெரியாமலோ சீதனம் எனும் கைவிலங்கைப் பூட்டி அவர்களை சிறை வைக்காதீர்கள். பெற்றோர்களே அன்பினாலும் பண்பினாலும் அறிவினாலும் பிள்ளைகளை வாழவையுங்கள் வாழவிடுங்கள். சற்று சிந்தியுங்கள் நாம் பிறக்கும் போது எதையும் கொண்டு வரவில்லை. இறக்கும் போது கூட எதையும் கொண்டு செல்லப் போவதில்லை. வாழும் போது மற்றவர்களையும் வாழவைத்து நாமும் வாழ்ந்து நம் நற்பெயர் சிறக்க வாழ்வோம்.

**சு.தமிழினி**
*பருத்தித்துறை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி 14

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | ■ | 05 | 06 | 07 |
| 08 | 09 | 09 | ■ | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | ■ | 17 | ■ | 18 | ■ | ■ |
| 19 | ■ | 20 | 21 | 22 | ■ | 23 | 24 |
| 25 | 26 | 27 | ■ | 28 | 29 | 30 | 31 |
| ■ | 32 | ■ | 33 | 34 | 35 | 36 | ■ |
| 37 | 38 | 39 | 40 | ■ | 41 | 42 | 43 |
| 44 | 45 | 46 | 47 | 48 | ■ | ■ | 49 |

### இடமிருந்து வலம்

1. உலகின் மிகப்பெரிய சமுத்திரம்
5. நீரோட்டம்
8. கள்ளி
11. இரவு
15. இதை மதியால் வெல்லலாம்.
20. இதையும் சகிக்க வேண்டும்
23. நில் / உடு
25. பெண் / தொழில்
28. விடயம் / பாடலிலும் மறைந்து இருக்கும்
33. நகருயிர்கள்
37. காடு
41. காந்தியின் வழி இறுதி எழுத்தின்றி குழம்பியுள்ளது.
44. தமிழ் எழுத்துக்களில் உள்ள ஒரு வகை எழுத்துக்கள்

### மேலிருந்து கீழ்

1. சீதையை விசேடமாக குறிக்கும் பெயர்
2. சங்கீத மாதா
3. கைப்பற்று
5. உடை
6. ஆசான் (தலைகீழ்)
7. தனுசு
11. கூறு
20. உடலை போர்த்தி காணப்படுவது.
22. மனநோய் / நாய்களுக்கும் வரும்
23. சைவர்களின் இறுதிக் கிரியை.
24. சுற்று / விளக்கின் பாகம் (தலைகீழ்)
26. சாளரம்
29. வைப்பு செய்யுமிடம் (குழம்பியுள்ளது)
33. அங்கவீனம்(குழம்பியுள்ளது)
37. நன்றியுள்ள மிருகத்தின் கடமை (இறுதி எழுத்து விடுபட்டுள்ளது)
39. துன்பம்
43. ஆசிரியர் மாணவனுக்கு வழங்கும் பிழைக்கான தண்டனை

குறுக்கெழுத்து போட்டி 12க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சி | ர | ம | தா | ன | ம் | ■ | ■ |
| ங | ■ | ல | லி | த | க | லை | ■ |
| க | தி | ர் | ■ | ம் | ர | த | ப |
| ள | ரு | ■ | த | ■ | சி | டு | ட் |
| ம் | ம | க | ங | ள | ■ | வி | டு |
| ■ | தி | ல | க | ம் | ■ | ■ | ■ |
| கா | ■ | ச | ம் | பா | ச | னை | ■ |
| சி | ன | ம் | ■ | தா | ய | ஆ | ம் |

## பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகள்

1. **திருமதி.தி.சிரம்பரநாதன்**
டச் வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
2. **திருமதி ஷர்மிலா துஷ்யந்தன்**
'பூம்பொழில்' இல 1001
திருநகர் தெற்கு, கிளிநொச்சி.
3. **செல்வி ஜீலியானா செபஸ்ரியாம்பிள்ளை**
'வர்ணவாசம்'
கோவில் வீதி சுண்டிக்குளி.

**குறுக்கெழுத்துப் போட்டி 14 க்கான விடைகளை எழுதி ஒரு வாரத்திற்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக தபால் அட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கவும்.**

**அனுப்பவேண்டிய முகவரி**
குறுக்கெழுத்துப் போட்டி
'யாழ் ஓசை' வீரகேசரி கிளைக்காரியாலயம்,
117, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

பாராட்டுப்பெறும் முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் பிரசுரிக்கப்படும்.




"எதுக்கு பிச்சை போட்டா ரசீது தர்றே?"
"ஆடிட்டிங் பிரச்சினை வேணாம்னு தான்."




"மன்னர் முன்னிலையில் பாடினீர்களே ஏதாவது கிடைத்ததா?"
"மன்னர் பதிலுக்கு பஞ்சப் பாட்டு பாடிவிட்டார்"




கீரைக்காரி - 1 "என்னடி அந்த வீட்டில் ஏன் சண்டை போட்டே?"
கீரைக்காரி - 2 "பின்னே அந்த வீட்டுக்கார அம்மா அரைக் கீரையை அரை விலையில் கேட்கிறாங்களே...!"




"உங்கப்பா நாஸா ரொக்கட்விடும் நிலையத்தில் வேலை பார்க்கிறாரா?"
"ஏன் கேட்கிறீங்கள்?"
"வகுப்பில் மார்க் 9, 8, 7, 6 என்று குறைஞ்சு கொண்டே போகுதே"




"உங்க பையன் ஸ்கூலுக்கு சின்ன பை கொண்டு போறான். நீங்க பெரிய பை கொண்டு போறீங்களே?"
"அவன் கொண்டு போவது புத்தகப் பை. நான் கொண்டு போவது டொனேஷன் பை."




"தூக்கத்திலே திருடன் திருடன்னு கத்துனீங்களே திருடன் வந்தானா?"
"இல்லை என் மூனு மாப்பிள்ளைகளும் புது வருஷத்துக்கு வர்றதா கனவு கண்டேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம் மாறும் யாழ்ப்பாணக் கலாசாரம்

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான முருகன் ஆலயம் அது. இரவுவேளை என்றால் பொழுதுகளைக் கழிப்பதற்காக இளைஞர்கள், வயோதிபர்கள் என அவ்வாலய முன்றலில் கூடுவது வழக்கம். நீண்டகாலப் போரியல் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு இயல்புச்சூழ்நிலை தோற்றுவிக்கப் பட்டுள்ளதையடுத்து மக்களின் பொழுதுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் தற்போது அவ் ஆலயத்தின் முன் அரட்டையடித்து தமது பொழுதைக் கழிக்கவருபவர்கள் குறைவு. இருப்பினும் ஆலயத்திற்கு அருகிலுள்ள சிலர் தமது வயதையொத்தவர்களுடன் அரட்டையடித்து தமது மனப்பாரங்களை குறைப்பதற்கு வருவதை வாடிக்கையாக்கிக் கொள்கின்றனர். அப்படி அரட்டையடிக்கும் வாடிக்கையாளர்களில் நானும் ஒருவன்.

**மோட்டார் சைக்கிளை தமக்கு முன்னால் மறைப்புப் போல் நிறுத்திவிட்டு ஆலய மதில் ஓரமாக இருவரும் அருவருக்கத் தக்க முறையில் நடந்து கொண்டிருந்தனர். தம்மை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்ற நினைப்பில் நெருக்கமாக அமர்ந்திருந்தபடி தமது காதல் லீலைகளை அரங்கேற்றிக் கொண்டிருந்தனர்.**

அன்றும் எனது வயதையொத்த சில நண்பர்களுடன் கதையளந்துகொண்டிருந்தேன். இரவு 8.00 மணியிருக்கும். எமது கதையாடல்களுக்கு முழுக்குப் போட்டுவிட்டு தத்தம் வீடுகளுக்கு கிளம்பத் தயாரானோம். எம்மைப் போலவே அங்கு நின்ற அனேகர் தமது பிரச்சினைகளையெல்லாம் கொட்டித்தீர்த்து மனச்சுமைகளை இறக்கிவைத்து விட்டோம் என்ற களிப்பில் அவரவர் வீடுகளுக்குச் சென்று விட்டார்கள். ஆள் நடமாட்டம் அவ் ஆலயச்சூழலில் சற்றே குறைந்திருந்தது. இரவு வேளையென்றால் மின்சார சபையும் தனது திருவிளையாடலைக் காட்டுவது வழமை. மின்சாரம் தடைப்பட்டிருந்த நேரம். இருள் அப்பியவேளை, திடீரென ஒளியைப் பாய்ச்சியபடி வந்த மோட்டார் சைக்கிள் ஆலயத்தின் அருகிலுள்ள மதிலோரம் நின்றது. இருள் கவிந்திருந்த நேரத்தில் மோட்டார் சைக்கிளில் வந்தவர்களை அடையாளம் காணமுடியவில்லை. எமது கண்ணுக்கெட்டிய வரை இரு உருவங்கள் எமது புலக்காட்சிக்கு தென்பட்டன. தற்போதைய நிலையில் இரவு நேர இராணுவச் சோதனைகள் அதிகம் என்பதால் இராணுவத்தினர் தான் வந்திருக்க வேண்டும் என கருதிய மனதில் உள்ளூரப் பயம் தொற்றிக்கொண்டது.

இருந்தும், உடனே கிளம்புவது உசிதமல்ல எனக் கருதி சிறிது நேரம் கழித்துச் செல்லலாம் என முடிவெடுத்திருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்தவர்களுடைய சலனம் தெரியவில்லை. நேரம் செல்லச்செல்ல ஒரு பக்கம் பயம். இன்னொரு பக்கம் வந்தவர்கள் யார் என அறியத்துடிக்கும் மனம். இரண்டும் கெட்டான் நிலையில் எங்கள் நிலை. என்னுடன் கூட வந்த நண்பர்கள் இருவர் துணிவை வரவழைத்துக் கொண்டு அப்பகுதிக்குச்சென்று பார்க்க அவர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு இளைஞன் ஒருவனும், யுவதி ஒருத்தியும் அருவருப்பூட்டும் அளவிற்கு விரசமான முறையில் நடந்துகொண்டிருந்தனர்.

மோட்டார் சைக்கிளை தமக்கு முன்னால் மறைப்புப் போல் நிறுத்திவிட்டு ஆலய மதில் ஓரமாக இருவரும் அருவருக்கத் தக்க முறையில் நடந்து கொண்டிருந்தனர். தம்மை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்ற நினைப்பில் நெருக்கமாக அமர்ந்திருந்தபடி தமது காம லீலைகளை அரங்கேற்றிக் கொண்டிருந்தனர்.

இப்படியான சம்பவங்கள் அந்த ஆலயத்தில் அவ்வப்போது இரவு வேளைகளில் இடம்பெற்றுவருவதாக அப்பகுதியில் வசிக்கும் மக்கள் சிலர் குறிப்பிடுகின்றனர்.

ஆலயம் என்பது ஆன்மா லயிக்கும் இடம். காமத்தில் லயிக்கும் இடமல்ல என்பதை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புனிதமான சூழலை பாழாக்கும் கைங்கரியங்களில் காதலர்கள் என்ற போர்வையில் அசிங்கத்தனமாக நடக்கமுற்படுபவர்கள் குறித்து பொது மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும்.

காதலர்கள் என்ற தோரணையில் வரும் இளம் காதல் ஜோடிகள், தமது காதல் லீலைகளை அரங்கேற்றுவதற்கு கோயில் முதலான புனித இடங்களைப் பயன்படுத்துவது அதிகரித்துவருகிறது. இதனால் வழிபட வரும் பக்தர்களின் மனங்கள் சிதறுப்பட வழியேற்படுத்தப்படுகிறது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை சில கோயில்கள் அமைதியான இயற்கையுடன் ஒன்றிய புறவயச் சூழலில் அமைந்திருக்கின்றன. இதனை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் காதலர்கள் அப்புனிதமான இடத்தைப் பாழாக்குகின்றனர்.

அண்மையில் குடாநாட்டு ஆலயமொன்றிலிருந்து இளம் காதல் ஜோடி சல்லாபித்துக் கொண்டிருந்த வேளை அவர்களிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டு வாக்குவாதப்பட்டு இறுதியில் காதலி கேவிக் கேவி அழுததாகவும், இதனால் வழிபட வந்த பக்தர்கள் கலவரமடைந்து குறித்த இளம் காதல் ஜோடியை எச்சரித்து அனுப்பியதாகவும் கூறப்படுகின்றது.

இப்படியான பல்வேறு அசிங்கமான நடத்தைக்கோலங்கள் குடாநாட்டு ஆலயங்களின் புனிதத்தன்மையை கெடுத்துக் கொண்டிருப்பதானது சமூகப் பிரக்ஞையுடையவர்கள் மத்தியில் வேதனையை ஏற்படுத்துகின்றது. காதல் என்ற சொல் அன்பைக் குறித்து நிற்கின்றது. காதல் என்ற புனிதம் இல்லை எனில் மனித மனங்கள் என்றைக்கோ விலங்குகளின் தன்மையை ஏற்றிருக்கும். ஆதனால் காதல் என்பது குறுகிய வட்டத்துக்குள் தவறாகச் சிக்கிக் கொள்ளும் போதுதான் அதன் புனிதத் தன்மை கெட்டுப் போவதற்கு வழிசமைக்கின்றது.



சமூகத்தில் மிக உயர்வாகக் கருதப்படுவதும், மனிதர்களிடையே உட்பிணைப்பை ஏற்படுத்துவதும் மனித நேயத்தை மேன்மையுறச் செய்வதும் காதல் என்ற நேசிப்புப் பண்பாகும். இக் காதல் உணர்வானது சாதி, மதம், மொழி, இன பேதம் எல்லாவற்றையும் கடந்து மனித நேயப்பண்பை வளர்க்கும் மாபெரும் சக்தி. இதனால் தான் பாரதி கூட 'காதல் செய்வீர் உலகத்தீரே...' என முழங்கினான் போலும். காதல் வாலிப வயதில் வரும் உள்ளார்ந்த உணர்வு என்ற எல்லைக்கப்பால், சகல ஜீவராசிகளுக்குமான இடைத்தொடர்புத் தனங்களுக்கு நீண்டுசெல்லும் போது தான் காதலின் பலம் பெருகி மானிடநேசிப்பு விரிவடைய வழிவகுக்கின்றது.

எனவே தான், இப்புனிதமான காதலைச் சிறுமைப்படுத்தி பல வாலிப வயதினர் பருவ உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு தான் தோன்றித்தனமாக நடக்கமுற்படுதல் பல்வேறு சமூக, கலாசாரப் பிறழ்வுக்கும் வழி வகுக்கின்றது. இன்றைய சூழலில் குடாநாட்டை உலுப்பிக்கொண்டிருக்கும் கலாசாரச் சீரழிவுகள் பற்றி பல தரப்பினரையும் பிரஸ்தாபிக்கப்பட்டு வரும் இவ்வேளை, அவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவில்லை என்பதே யதார்த்தம்.

தற்போது குடாநாட்டின் அபிவிருத்தி குறித்து பல தரப்பினரது சிந்திக்கப்பட்டு வரும்வேளை, எம்மினத்தின் கலாசாரச்சீரழிவு குறித்தும் சிந்திக்கத் தலைப்பட வேண்டும். கல்வி அபிவிருத்தி, பொருளாதார அபிவிருத்தி பற்றிய சித்தாந்தம் செயலுருப் பெறவைக்க வேண்டும் எனத் துடிக்கும் கொள்கை வகுப்பாளர்கள் தமிழினத்தின் ஆணி வேரான பண்பாட்டுக் கருவூலங்கள் சிதைவடைந்து செல்கின்றமை பற்றி கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை என்பதே சோகம் தரும் விடயமாகும். ஏனெனில், ஒரு இனத்தின் தோற்றம், வளர்ச்சி நிலை, பெறுகை அதன் அருமை பெருமை எல்லாமே அவ்வினத்தின் பண்பாடுகளில் தான் தங்கியிருக்கின்றதென்றால் மிகையில்லை. ஒரு இனத்தின் அழிவென்பது அவ்வினத்தின் மொழியிலும் பண்பாட்டுக் கூறுகளிலும் ஏற்படும் சிதைவுகளைப் பொறுத்தே அமைகின்றது.

இன்னமும் எமது இனத்தின் பெருமை குறித்தெல்லாம் பீற்றிக் கொண்டிருப்பதில் பயனில்லை. எம்மினத்தினிடையே ஆழ வேர்விட்டுள்ள சிறுமைத் தனங்கள் குறித்தும் சிந்திக்க வேண்டும். எம்மினத்தின் பண்பாட்டு விழுமியங்களை மேற்கத்தைய நாட்டவர்கள் கூட வியந்து போற்றிவரும் நிலையில் நாமே எமது கலாசாரங்களைப் புறக்கணித்து மேலை நாட்டு கலாசாரங்களை அப்படியே உள்வாங்கி வாழத் தலைப்படுவது அபத்தமானது. இதனால், எம்மினத்தின் கலாசார அடையாளங்கள் அழிந்துபோவதைத் தடுக்கமுடியாது போய்விடும் என்பதே யதார்த்தம்.

உதிஷ்டிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் பிரபலமானவர்கள் வரிசையில்...

## வில்லிசைப்புலவர் க.நா.கணபதிப்பிள்ளை

## இவரைப் பற்றி 25

**யாழ்ப்பாணத்தில் ஒரு கால கட்டத்தில் புகழ் பெற்று விளங்கிய இசைக் கலையான வில்லிசையை தமிழர் வாழும் இடமெங்கும் எடுத்துச் சென்று புகழ் பெற்றவர் சின்னமணி என்று அழைக்கப்படும் க.நா.கணபதிப்பிள்ளை. கலைஞர்கள் வாழும் மாதனையில் பிறந்தவரான இவர் இசைநாடகத்திலும் வில்லிசையிலும் இணையற்ற கலைஞராகச் சிறந்து விளங்கினார்.**

✱ நாகலிங்கம்-ராசம்மா தம்பதியினருக்கு இரண்டாவது மகனாக 1936.03.30 ஆம் திகதி பருத்தித்துறை மாதனையில் கணபதிப்பிள்ளை பிறந்தார்.

✱ இவர் ஆரம்பக்கல்வியை மாதனை மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் உயர்தர கல்வியை ஏழாலை உயர்தரப் பாடசாலையிலும் கற்றுக் கொண்டார்.

✱ 9 வயதிலேயே நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய இவர், 'குரவன் குரத்தி' என்ற நாடகத்தில் நடித்து பல கலைஞர்களினதும் ரசிகர்களினதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

✱ யாழ். கலாஷேத்திராவில் வி.கே.செல்லையாவிடம் கலை நுணுக்கங்களைக் கற்றுக் கொண்ட சின்னமணி, அவரின் வழிகாட்டலுடன் 1949 ஆம் ஆண்டு கொழும்பு றோயல் கல்லூரியில் அரங்கேறிய 'கப்பற் பாட்டு' நாடகத்தில் நடித்தமைக்காக அகில இலங்கை ரீதியில் பாராட்டுப் பெற்றுக்கொண்டார்.

✱ 1951 ஆம் ஆண்டு முதல் கலைப்பணி ஆற்றத் தொடங்கிய இவர் நடனம், நாடகம், வில்லிசை போன்ற மூன்று கலைகளிலும் சிறந்து விளங்கினார்.

✱ இசை நாடகத்துறையில் கொடி கட்டிப் பறந்த மூத்த பெரும் கலைஞர்களோடு இணைந்து இவரும் நடித்துள்ளார்.

✱'வீரமைந்தன்', 'சரியா தப்பா', தில்பு சுல்தான்' ஆகிய சமூக நாடகங்களிலும் 'காத்தவராயன்', 'அரிச்சந்திரா', 'ஸ்ரீவள்ளி', 'சத்தியவான் சாவித்திரி' போன்ற சரித்திர நாடங்களிலும் முக்கியமான பல பாத்திரங்களை ஏற்று நடித்து புகழ் பெற்றுள்ளார்.

✱ 'சத்தியவான் சாவித்திரி' இசை நாடகத்தில் இவர் இயமனாக நடிக்கும் கதாபாத்திரம் யாழ்ப்பாண மக்களிடையே 'இயமன் என்றால் சின்னமணிதான்' என்ற எதிர்பார்ப்பைத் தூண்டி விடும்.

✱ ஒல்லியான உடலமைப்பைக் கொண்ட இவர் சிறுவயதில் எல்லோராலும் சின்னமணி என்றே அழைக்கப்பட்டார். பிற்காலத்தில் உடல் பருத்து பெரும் தோற்றம் கொண்டவராக நாடகங்களில் இராவணனாகவும் இயமனாகவும் நடித்தபோதும் அந்தப் பெயர் இவருடன் நின்று நிலைத்தமை வியப்புக்குரிய விடயமாகும்.



✱ கோவலன் நாடகத்தில் சின்னமணி 'மானமெல்லாம் போன பின்னே வாழ்வதுதான் ஒரு வாழ்வா.....' என்று சோகம் ததும்ப பாடி நடிக்கும் காட்சியை இன்றும் இசை ரசிகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

✱ 1954 ஆம் ஆண்டு இரத்மலானை, கொத்தலாவை போன்ற இடங்களிலுள்ள தமிழ்ப் பாடசாலைகளில் தமிழ் ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார்.

✱ வில்லிசை மூலம் நல்ல சமூக சீர்திருத்தக் கருத்துக்களை நகைச்சுவை உணர்வோடு மக்கள் மனங்களில் பதியும் வண்ணம் சொல்வதில் சின்னமணிக்கு நிகர் சின்னமணியே தான்.

✱ மக்களிடம் உள்ள சமூகக் குறைபாடுகளையும், அரசியல்வாதிகளிடம் உள்ள சமூக அக்கறையின்மையும் வில்லிசையில் கதை மூலம் நாசூக்காக எடுத்துக் கூறி அவர்கள் மனதில் உறையவைப்பார்.

✱ சின்னமணி வில்லிசையில் கொடிகட்டிப் பறப்பதற்கு உந்து சக்தியாக விளங்கியவர் கீதாஞ்சலி நல்லையா அவர்களே.

✱ யாழ்ப்பாணத்தில் கோவில் திருவிழாக்களிலும் சரி, பொதுக் கலை நிகழ்வுகளிலும் சரி 'சின்னமணியின் வில்லிசை' என்று சொன்னால் போதும் அதற்கென்றே ஒரு தனிக்கூட்டம் கூடும்.

✱ இவர் தென்னிந்தியா திராவிட முன்னேற்றக் கழகத்தினரின் பேச்சு, எழுத்து, பகுத்தறிவுக் கொள்கை என்பவற்றில் பெருமளவு ஈடுபாடு கொண்டிருந்தார்.

✱ 1960 ஆம் ஆண்டு ஆசிரியையான அன்னமுத்து என்பவருடன் திருமணப் பந்தத்தில் இணைந்து கொண்ட சின்னமணிக்கு நான்கு பிள்ளைகள்.

✱ நகைச்சுவையாகப் பேசும் இவருக்கு தென்னிந்தியாவில் புகழ் பெற்ற நகைச்சுவை நடிகர் எம்.எஸ்.கிஷ்ணனின் நட்பும் அக்காலத்தில் கிடைத்திருந்தது.

✱ எம்.எஸ்.கிருஷ்ணனுடனான முதல் சந்திப்பிலேயே 'கேசரிவர்மன்' என்று அழைக்கப்பட்ட சின்னமணி அவரிடமிருந்து வில்லிசை நுணுக்கங்களைக் கற்றுத்தெரிந்து கொண்டார்.

✱ சிங்கள திரைப்படக்கலைஞர்களுடன் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்த இவருக்கு 'துப்பதாகே துக்க' என்ற சிங்கள திரைப்படத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

✱ 1957 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பண்ணைப் பால் சபையில் கணக்காளராகவும் கடமையாற்றியுள்ளார்.

✱ இயமன் வேடத்தில் இவரின் தோற்றம் சினிமா நடிகர் ரங்கராவைப் போல் இருப்பதால் 'ஈழத்து ரங்கராவ்' என எல்லோராலும் அழைக்கப்பட்டார்.

✱ வில்லிசையில் பெயர் பெற்று விளங்கிய இவருக்கு 'வில்லிசைக் கலைஞான சோதி', வில்லிசை வித்தகன்', 'வில்லிசைவாணன்', 'வில்லிசை மாமணி' என்ற பட்டங்களும் கௌரவங்களும் வந்து சேர்ந்தன.

✱ இலங்கை அரசு 2003 ஆம் ஆண்டு ஆளுநர் விருதையும் 2008 ஆம் ஆண்டு கலாபூசணம் விருதையும் வழங்கிக் கௌரவித்தது.

✱ உடுக்கு இசைப்பதிலும் மகாவித்துவனான இவர் இளம்வயதில் உடுக்கு இசைக்க விரும்பி உடுக்கைத் தொட்டுப் பார்க்கும் போது 'இது பற்றி உனக்கு என்ன தெரியும் 'என வஞ்சிக்கப்பட்டார். இதனால் இக்கலையில் சிறந்து விளங்க வேண்டும் என்ற வாஞ்சையோடு உடுக்கு இசைப்பதைக்கற்று, அதில் இன்றும் தன்னிகர் இல்லாத கலைஞனாக விளங்கி வருகின்றார்.

✱ ஈழத்தில் தலைசிறந்த மூத்த இசை நாடக வில்லிசைக் கலைஞராகத் திகழும் 'சின்னமணி' என்ற கணபதிப்பிள்ளை 75 வயது கடந்தும் அச்சுவேலியில் மனைவியுடன் சந்தோஷமாக வாழ்ந்து வாழ்ந்து வருகின்றார்.



**தொகுப்பு - அஸ்வின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைப்போமா?



*(சென்ற வாரத் தொடர்ச்சி)*

இவ்வாறு ஏற்படுகின்ற பெரும்பாலான நிலைமைகளோடு தொடர்புபட்டிருக்கும் ஆண்கள், சிறுவர் என்ற பராயம் கடந்தவர்களாகவே, 'வயது வந்தவர்களாகவே' காணப்படுகின்றனர். ஒருவகையில் பார்த்தால் பாதிக்கப்படும் பெண்பிள்ளைகள் தங்களைவிட 'விபரம் தெரிந்த'இ வயது முதிர்ந்த ஆண்களால் ஏமாற்றப்படுவதாகவே, துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த ஆண்களில் ஏற்பட்டிருக்கும் பாலியல் இச்சைக்கு மேலாக அவர்கள் எந்தவிதத்திலும் பொறுப்பானவர்களாக நடந்துகொள்வதில்லை என்பதுவே எமது அவதானம்.

இந்த ஆண்களும், அவர்களைச் சார்ந்தவர்களும் (நண்பர்கள், குடும்பத்தவர்கள்) பெண்பிள்ளையொருத்தியை வீட்டைவிட்டு வெளியே கொண்டு வருவதனை ஒரு பெருமையாக, 'வீரமாக' நினைக்கிறார்கள். 'அவன் கெட்டிக்காரன்' 'மடக்கிட்டான்' 'தூக்கி வந்திட்டான்' போன்ற வார்த்தைப் பிரயோகங்களுக்குப் பின்னால் தொனிக்கின்ற பெருமை எல்லாரும் அறிந்ததே. பண்டைக் காலத்தில் இருந்தே பெண்டிர் கவருதல் வீரத்தின் சின்னமாகக் கருதப்படுகின்றது என்னும் மானுடவியல் அவதானிப்பிற்கும் மேலாக இது எவ்வளவு சிறுமையானது? பொறுப்பற்றது? எனச் சிந்தித்துப் பார்த்தல் தேவையானது.

பின்னர் என்ன நிகழ்கின்றது?

ஓடிப்போதல்,
உறவுகொள்ளுதல் என்பவை உச்சக்கட்டம் என்றால், அதற்குப் பின்னாலான எதிர் உச்சக்கட்ட நிகழ்வுகளும் இருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் ஓடிப்போதல் என்பதுவும் உறவுகொள்ளுதல் என்பதுவும் தமது பிணைப்பை நிரந்தரமாக்கும் ஒரு முயற்சியாகவே கருதப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. நாம் சந்தித்த பெண்பிள்ளைகளில் எவருமே 'சும்மா முசுப்பாத்திக்காக', 'அனுபவிச்சுப் பாப்பம்', 'என்ன இருக்கொண்டு பாப்பம்' என்பது போன்ற பதில்களைக் கூறவில்லை. ஓடிப்போன சந்தர்ப்பத்தில் அல்லது ஓடாத சந்தர்ப்பத்திலும் உறவுகொள்வதன் மூலம் தமக்கும் தம்முடன் தொடர்புடைய ஆண்களுக்குமான நெருக்கத்தையும், பிணைப்பையும் அதிகரிக்கும் நோக்கத்திலும், இவ்வாறான எதுவிதமான நோக்கங்களும் இன்றி அந்த நேரத்து அறிவு மயக்க நிலையிலும் இவர்கள் உறவு கொள்கிறார்கள்.

ஆயினும் யதார்த்தத்தில் இவர்களின் ஆரம்ப எதிர்பார்ப்புகள் பொய்த்துப் போய்விடுகின்றன. தற்போதைய சூழலில் பல பெற்றோர்கள் சட்டரீதியாகவே இவ்வாறான பிரச்சினைகளை அணுகுகின்றனர். எமது நாட்டிலுள்ள சட்டம் 18 வயதிற்குக் குறைவான பெண்களைத் திருமணம் செய்ய அனுமதிக்காது. அத்துடன் சட்டமானது 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்கள் உடலுறவு கொள்ளச் சம்மதம் அளிக்க முடியாது (அதற்கான மனப்பக்குவம் அவர்களுக்கு இல்லை) என்றும் கூறுகின்றது.

எனவே சட்ட நடவடிக்கைகளின்படி ஓடிப்போனவர்கள் (அவர்கள் இருவரும் அல்லது ஒருவர் 18 வயதிற்கு குறைவாக இருக்கும் பொழுது) கைது செய்யப்படுவார்கள். பின்பு, தேவையான மருத்துவச் சோதனைக்ள் (உடலுறவு கொண்டதற்கான சாத்தியக்கூறுகள், காயங்கள் போன்றவற்றை அவதானித்தல்) செய்யப்பட்டு அறிக்கை பெறப்படும். அதன் பின்பு பெண்பிள்ளையின் வயதுளூ குடும்பத்தவரின் ஆதரவுளூ சம்பந்தப்பட்ட ஆண் தொடர்பான நிலைமைகள் போன்றவற்றைக் கவனத்திலெடுத்து பெண்பிள்ளையின் எதிர்காலம் தொடர்பான தீர்ப்புகள் வழங்கப்படும்.

*(தொடரும்)*

வைத்திய கலாநிதி **சா.சிவயோகன்**
(உள மருத்துவ நிபுணர்)

# வீட்டு வைத்தியம்



- உங்கள் பேனின் தொல்லையா? எலுமிச்சைச் சாறோடு பூண்டுச் சாறு சேர்த்து தலைமுடியில்தேய்க்கவும். ஒரு மணி நேரம் ஊறிய பிறகு நன்றாக தலையை அலசிக் கழுவவும்.
- உங்கள் வெண்மையான சருமம் சூரிய ஒளி பட்டு கறுக்கிறதா? கவலையை விடுங்கள். பழுத்த வாழைப்பழத்தைப் பிசைந்து கறுத்த இடங்களில் தடவவும். பின்னர் நன்றாகத் தேய்த்து குளிக்குவம்.
- உங்களின் அடர்த்தியான கூந்தல் உதிர்கிறதா? இரவில் துளசி இலைகளை ஊற வைத்துக் காலையில் நெல்லிக் காயோடு சேர்த்து அரைக்குவவும். விழுதைத் தண்ணீரில் கரைத்து அதில் தலை முடியை அலசிய பிறகு நல்ல நீரில் கூந்தலை தூய்மை செய்யவும்.
- உங்களின் முகத்தில் கரும்புள்ளிகளைப் போக்க ரவை, எலுமிச்சைச்சாறு, கிளிசரின், முட்டை வெண்கரு இவற்றைத் தடவி ஊறிய பிறகு முகத்தைக் கழுவலாம்.
- மிகச் கசப்பான மருந்தைக் குடிக்க வேண்டுமா? இதோ உங்களுக்காக ஒரு எளிய யோசனை. ஐஸ் கட்டியை வாயில் சிறிது நேரம் வைத்திருந்த பின்பு மருந்தைக் குடிக்கவும். கசப்புத் தெரியாது மருந்தை விழுங்கி விடுங்கள்.
- உங்களுக்கு வாய்ப் புண் ஏற்படுகிறதா? ஒவ்வொரு நாளும் துளசி இலைகளை மென்று வாருங்கள்.
- கண் நோயால் அவதியா? மஞ்சளில் தோய்த்து உலர்த்திய துணியைக் கொண்டு கண்களைத் துடைக்கலாம்.
- உங்களுக்கு கருமையான, அடர்த்தியான, நீளமான கூந்தல் வேண்டுமா? ஓடிப் போகட்டும் கவலை. தேங்காய் எண்ணெயில் செம்பருத்தி இதழ்களை ஊற வைத்து லேசாக சுட வைத்து ஆறிய பின்பு வடிகட்டி கண்ணாடிப் போத்தலினுள் வைத்திருக்கவும். இந்த எண்ணெயை உச்சந் தலையில் தடவி வர கூந்தல் வளரும்.
- உங்களின் கூந்தல் நீளமாக இருக்க இதோ வழி, தேங்காய் எண்ணெயில் செம்பருத்தி இதழ்களை ஊறவைத்து லேசாக சுட வைக்க வேண்டும். ஆறிய பிறகு வடிகட்டி பாட்டிலில் ஊற்ற வேண்டும். இந்த எண்ணெயை உச்சந் தலையில் தடவி வர கூந்தல் நன்றாக வளரும்.
- சளியும் குளிருமாக அவஸ்தைப்படும் போது சூடான தண்ணீரில் கடுகு கலந்து தூங்குவதற்கு முன் குடிக்கலாம். சூடான பாலைக் குடித்துப் தூங்கினால் சளி நீங்கி விடும்.
- ஒரு டம்ளர் தண்ணீரில் சில துளிகள் வினிகர் சேர்த்து வாய் கொப்பளித்தால் பற்களின் ஈறுகளிலிருந்து வடியும் ரத்தம் நிற்கும். அத்துடன் ஈறுகளில் புண் இருந்தால் குணமாகும்.
- விக்கலை நிறுத்த வலது கட்டை விரலை இடது உள்ளங்கையில் வைத்து அழுத்தவும். மூச்சை உள்ளுக்கிழுத்து நிறுத்தினால் விக்கல் நிற்கும். தொடர்ந்தால் ஒரு டீஸ்பூன் வினிகரைக் குடிக்கவும்.
- உருளைக்கிழங்கு சாறைத் தடவுவதால் தீப் புண் பட்ட இடங்கள் விரைவில் குணமடையும்.
- குழந்தைக்கு வயிற்றுவலியா? பெருங்காயம் கலந்த சுடு தண்ணீரைத் தொப்புளைச் சுற்றித் தடவவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியன்காடு எனும் குறிஞ்சியில் செங்குந்தா இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணத்தின் சிகரம் போன்று துலங்குவது நல்லூர் என்ற சிற்றூர் ஆகும். இதற்கு வடக்கே பெயர்பெற்று விளங்கும் திருநெல்வேலிக் கிராமம் ஆகும். பல நூற்றாண்டுக்கு முன்னர் தமிழ் நாட்டின் திருநெல்வேலி என்னும் இடத்தில் இருந்து வந்தவர்கள் இங்கு குடியேறிய காரணத்தால் இக்கிராமமும் திருநெல்வேலி என்ற பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகிறது. அத்தோடு பசுவதையை எதிர்த்து பாரதம் சென்ற அமரர் ஞானப்பிரகாச முனிவர் கால்பதித்த இடமாகவும் இக் கிராமம் சிறப்பு பெறுகின்றது.

இக் கிராமத்தில் அமரர் சேர் பொன்.இராமநாதன் அவர்களால் ஆண்பிள்ளைகளுக்கு என்று பரமேஸ்வராக கல்லூரி ஒன்றை பெரும் செலவில் நிர்மாணித்து நடத்தி வந்தவர். இதுவே தற்போது யாழ். பல்கலைக்கழகமாக தலை நிமிர்ந்து பல சிறப்புகளுடன் காணப்படுகின்றது. அதை அடுத்து திருநெல்வேலி கல்வியங்காடு எனும் குறிச்சியில் செங்குந்தா இந்துக் கல்லூரி என்னும் கல்லூரி ஆரம்பத்தில் கந்த சக மண்டபம் என்னும் பெயருடன் நிறுவப்பட்டு வளர்ந்துவரும் காலத்தில் இந்து போர்ட் இராசரத்தினம் அவர்களால் திருநெல்வேலி சைவ விருத்திச் சங்கத்தால் பல ஆண்டுகளுக்கு முன்பு பொறுப்பேற்கப்பட்டு நடாத்தப்பட்டது. சகல வளங்களுடன் நிர்மாணிக்கப்பட்டு இன்று 75 ஆண்டுக்கு மேல் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது. மேற்படி கல்லூரியில் பல அதிபர்கள் கடமையாற்றிச் சென்றாலும் குறிப்பிட்டு எழுதக்கூடிய சைவத்திற்கும் தமிழுக்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்து கடந்த கால நூற்றாண்டுகளுக்கு மேலாக இக் கல்லூரியின் அதிபராக அலங்கரித்து இக் கல்லூரியை தனது இரு கண்கள் போல் வளர்த்து எடுத்தவர் யாழ்.பண்ணாகத்தைச் சேர்ந்து அமரர் நா.கணபதிப்பிள்ளை குறிப்பிடத்தக்கவர்.



நல்லையா இரத்தினம் பாலகுமார் (அதிபர்)

இவரது காலம் கல்லூரியின் வரலாற்றில் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். இவரது காலத்தில் அடியேன் உட்பட பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கல்வி மான்களாகவும் பொறியியலளர்களாகவும் டாக்டர்களாகவும் தொழிலதிபர்களாகவும் வாழ்ந்து வந்தனர்.

ஆரம்பத்தில் இக்கல்லூரி கட்டிட வளங்களின்றி சிறு கட்டிடங்களுடன் இயங்கியது. காலத்திற்கு காலம் கடமையாற்றிய அதிபர்களின் பெரு முயற்சியாலும் பெற்றோர் பழைய மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப் போடும் இக் கல்லூரி இன்று விண்ணைத் தொடும் பல மாடிக் கட்டிடங்களாலும் சகல வளங்கள் நிரம்பப் பெற்ற பாடசாலைகளில் ஒன்றாக யாழ்.குடாநாட்டில் புகழ்பூத்து விளங்குகின்றது .

இங்கு கல்வி கற்ற மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டுத்துறைகளிலும் சாதனை படைத்து பாடசாலைக்கு பெருமை தேடி தருகின்றார்கள்.

மேற்படி பாடசாலை ஆரம்பத்தில் தரம் 1 தொடக்கம் க.பொ.த (உ.த) வகுப்பு வரை நடத்தப்பட்டு வந்தது.

**அமரர் சேர் பொன். இராமநாதன், ஆண்பிள்ளைகளுக்கு என்று பரமேஸ்வராக கல்லூரியை பெரும் செலவில் நிர்மாணித்து நடத்தி வந்தவர். இதுவே தற்போது யாழ்.பல்கலைக்கழகமாக தலை நிமிர்ந்து பல சிறப்புகளுடன் காணப்படுகின்றது.**

இடப்பற்றாக்குறை காரணமாக பின்பு 6 ஆம் ஆண்டுக்கு மேல் க.பொ.த (உ.த) வகுப்பு வரை கலைப்பிரிவிலும் வர்த்தக பிரிவிலும் நடத்தப்பட்டு வருகின்றது.





ஆரம்பத்தில் 1750 க்கு மேற்பட்ட மாணவர்களும் 50 க்கு மேற்பட்ட ஆசிரியர்களும் கல்வி கற்று வந்தனர்.

இக்கல்லூரி வரலாற்றில் திறம்பட நடத்தி கல்லூரிக்கு சிறப்பையும் புகழையும் தேடித் தந்த அதிபர்கள் சிலரை குறிப்பிட்டு கூற வேண்டும். அமரர் நா.கணபதிப்பிள்ளை, எஸ்.பி. நடராசா, அமரர் மு.பரமேஸ்வரன், ம.சண்முகலிங்கம், ஓய்வு பெற்ற அதிபர் திருமதி விஸ்வலிங்கம் ஆகியோர்களை குறிப்பிட்டுக் கூறலாம். ஆரம்ப காலத்தில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தலைமை ஆசிரியராக இருந்த அமரர் சரவணமுத்து நடராசா அவர்களின் சேவை அளப்பரியது. அத்துடன் இங்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்து சேவையாற்றி வரும் அனேக மாணவர்கள் சகல துறைகளிலும் சாதனை படைக்க காரணமாக இருந்த சில ஆசிரியர்களை குறிப்பிட்டுக் கூறவேண்டும்.

சிவசரவணபவன்(சிற்பி), என்.சுந்தரலிங்கம், திருமதி ம.இராசேந்திரம், ம.சண்முகலிங்கம், ம.கந்தசாமி, மு.பரமேஸ்வரன், திரு.சண்முகராசா, திருமதி பாலராணி சண்முகராசா, திரு.ம.பரமேஸ்வரன், திருமதி பவானி சண்முகலிங்கம், திருமதி ரூபராணி இராஜரட்ணம், அமரர்கள் த.நவரட்ணம், திருமதி சா.காங்கேயன், திருமதி பவளராணி தில்லைநாதன், திருமதி ப.ஞானசேகரன்,திருமதி.க.கிட்ணர் உட்பட பலர் கல்வி கற்பித்த ஆசிரியர்களில் குறிப்பிடத்தக்க துறைகளில் சாதனை படைக்க வழிவகுத்தவர்கள். அவர்களில் ம.சண்முகலிங்கம் (நாடகர்), சிவசரவணபவன்(சிற்பி) கலை இலக்கியம் மேற்படி இருவரும் இக் கல்லூரியின் பெரும் புகழும் ஓங்கி வளர அயராது உழைத்தவர்கள். அவர்கள் உருவாக்கிய மாணவர்களில் நாடகத்துறையில் அமரர் பத்மநாதன், க.பரராஜசிங்கம் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

கலை இலக்கிய துறையில் ஆசிரியர்கள் சிவசரவணபவன் (சிற்பி) திருமதி பவளராணி சண்முகராசா ஆகிய ஆசிரியர்கள் குறிப்பிடத்தகவர்கள். எழுத்துத் துறையில் மாணவர்கள் திருமதி சுந்தரலிங்கம், கோமளா தேவி, திருமதி அனைலட்சுமி, இராஜதுரை யாழ்நங்கை, எஸ்.திருச்செல்வம், க.பரராஜசிங்கம்(துருவன்), கலைச்சுடர் என்.இராமச்சந்திரா, அமரர் சசி கிருஸ்ணமூர்த்தி(கட்டடப்பிராய்) போன்றவர்கள் புகழ் பூத்த பத்திரிகையாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கி கல்லூரிக்கு பெயரையும் புகழையும் தேடி தந்த வண்ணம் உள்ளனர். மில்க்வைற் தொழிலதிபர் திரு.இ.தங்ககோபால் என்றும் பலர் பல சார் துறைகளில் இலை மறை காய் போல் விளங்கி கல்லூரிக்கு பெயரையும் புகழையும் தேடி தந்த வண்ணம் உள்ளனர்.

2009ஆம் ஆண்டு G.C.E. (A/L) கலைப்பிரிவில் 3 A பெற்று சாதனைபடைத்து பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்கள் வரிசையில்...



மாவட்ட மட்டத்தில் 18ஆம் இடம் செல்வி பு.ரசிதா



மாவட்ட மட்டத்தில் 29ஆம் இடம் செல்வி ச.சுதர்சனா

**கலைச்சுடர்**
**என்.இராமச்சந்திரா ஜே.பி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துயிர்ப்பு ஊட்டப்படவேண்டிய புராணபடனக் கலை

பண்டிதமணி அவர்களுடைய கூற்றுப்படி நமது யாழ்ப்பாணத்து கலாசாரமானது கந்தபுராணக் கலாசாரம் என சிறப்பிக்கப்படுகின்ற பெருமையுடையது. இவ்வாறு கந்த புராணக் கலாசாரம் என்று சிறப்பிக்கப்படும் எமது சமய வாழ்வில் மயக்கம் நிறைந்திருப்பதாக பலரும் சுட்டிக் காட்டுகின்றார்கள். எங்கள் சமயத்தின் பெயர் என்ன? எங்கள் முழுமுதற் கடவுள் யார்? அவரை வணங்கும் முறை ஏது? நாம் வாழவேண்டிய வகை என்ன? என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியாதவர்களாய் நம்மில் பலர் திகைப்படைகின்றனர்.

எமது சமயத்தின் எமது பண்பாட்டின் கண் உள்ள அருமை பெருமைகளை மறந்துவிடுகின்றனர். அவைகள் தொடர்ந்து பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சமயமானது வாழ்வியற் தத்துவத்தை தன்னகத்தே கொண்ட நெறியாகும். சமயம் என்பது வாழும் முறை அல்லது வாழ்க்கைநெறி எனப் பொருள்படும். மனித வாழ்வியலில் வாழ்க்கைப் படி ஒழுங்குநிலைகளை வரையறுப்பதிலும் வழிகாட்டுதலிலும் சமயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

இத்தகைய யாழ்ப்பாண சமய பண்பாட்டில் சைவத்தின் உயிர்நாதமாக விளங்குவது இறைவன் புகழைப் பாடுவதாகும். இத்தகு உயிர்நாடியான பண்பாட்டு குறிமுறைகளில் புராணபடனம் பற்றியும் அதன் அருமை பற்றியும் அதைச் செய்கின்ற முறை பற்றியும் அறியாது இருக்கின்றார்கள். இருப்பினும் சமயத்தின் மீது கொண்ட பற்றின் ஈடுபாடு உடையயோரால் புராணபடனக் கலையானது இன்றும் புத்துயிர்யோரே நிலைத்து நிற்கின்றது. இப்புராண படனக் கலையானது கலையை எமது இளம் தலைமுறையினருக்கும் ஊட்ட வேண்டியது நமது கடமையாகும். பாடசாலைகளில் சமய பாடம் கற்பிக்கும் சில ஆசிரியர்களிடம் புராண படனம் செய்கின்ற முறை பற்றி மாணவர்கள் கேட்கும் போது தமக்குத் தெரியாது அது பற்றி பரீட்சயம் இல்லையெனக் கூறிக் கழிக்கின்றனர். சில ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அதன் முறைப் பயன்களை தெளிவாக எடுத்தோதுகின்றனர் என எமது சமயத்தில் சிறப்புப் பெறும் புராண படனம் பற்றி நோக்குதல் சிறப்பாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

**சமயமானது வாழ்வியற் தத்துவத்தை தன்னகத்தே கொண்ட நெறியாகும். சமயம் என்பது வாழும் முறை அல்லது வாழ்க்கை நெறி எனப் பொருள்படும்.**

### புராணபடனம்

புராணபடனம் என்பது புராணக்கதைகளை சுவைபடச்சொல்வது என்பது ஆன்றோர் கருத்து. புராணம் என்பது பழமை என்பதாகும். இது பழைய வரலாற்றைக் கூறும் நூல் எனவும் பொருள் கொள்ளப்படும். பழமையும் புதுமையும் இணைந்தது. மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதில் முக்கிய இடம்பெறுவது புராணமாகும். சைவம் கூறும் நன்னூல்களில் சிறப்புக்குரியதாகவும் விளங்குகின்றது.

புராண படனம் முறை என்பதை எளிமையாக நோக்கின் 'ஒருவர் புராணப் பாடல்களைப் பாட இன்னொருவர் அதன் பொருளைக் கூறும் முறையாகும்' இதில் பாடுபவரும் சரி, பொருள் சொல்பவரும் சரி பாடல் போல இசைத்துத் தான் பாடுவர். இப்புராண படனம் மூலம் கல்வியையும், சமய பக்தியையும் வித்துவத்தையும் ஆறுமுக நாவலர் மக்களிடம் ஏற்படுத்தினார். அன்னியராட்சியில் சைவத்தை நிலைநிறுத்தக் கையாண்ட ஊடகங்களில் ஒன்றாக புராண படன முறையும் விளங்கியது.



எமது மரபிலே சிவனது முக்கண்கள் என போற்றப்படும் புராணங்கள் சிறப்புப் பெறுகின்றன. இவையாவன பெரியபுராணம், கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

பெரியபுராணமானது சேக்கிழார் பெருமானால் நமக்கு அருளப்பட்டது. 12 ஆம் திருமுறையாக விளங்கும் திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்டும் பெரிய புராணம் சிவனடியார்களுடைய திவ்விய வரலாற்றை கூறுவதாகும்.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை உள்ளீடாகக் கொண்டு காஞ்சி குமார கோட்டத்து கச்சியப்பரால் 10345 பாடல்களாக நமக்கு தரப்பட்டது கந்தபுராணம் ஆகும். நன்றி மறந்ததால் வரும் பெருங்கேடு எல்லாவற்றையும் அழிக்கும் என்ற ஒரு சிறந்த அறத்தைக் கந்த புராணம் வற்புறுத்துகின்றது. கந்த புராணத்தினுடைய சிறப்பை முருகன் அறிவான் என்பது சூதமுனிவர் கருத்து. இறைவனுடைய அருளைப் பெற இப் புராணங்கள் வழிகாட்டுகின்றன.

புராண படன சிந்தனை என்றதும் எமது மனத்திரையில் கந்தபுராண சிந்தனை தான் ஓட ஆரம்பிக்கும். அது மிகப் பிரசித்தமானது. புராண படன மரபு தொன்மையானது. புராண படன விதியை, மரபை மீறக்கூடாது.

### புராணபடனம் செய்யும் முறை

புராணம் வாசிப்பவரும் பயன் சொல்பவரும் ஆசாரசீலராய் சமய தீட்சை பெற்றவராய், சிவசின்னம் தரித்தவராய், சமய அறிவும், பக்தியும் உடையவராய், இலக்கணப் பயிற்சி உடையவராய் இருத்தல் வேண்டும்.

படிக்குமிடத்தில் பூரண கும்பம் வைத்து அதன் முன்னால் புத்தக பீடத்தில் பட்டுவிரித்து அதன் மேல் புத்தகத்தை வைத்து மலர் இட்டுத் தூப தீபம் காட்டி பூசை செய்து வணங்க வேண்டும்.

படிப்பவர் கும்பத்தின் முன் வலது புறத்தில் வடக்கு நோக்கியும் பயன் சொல்பவர் இடதுபுறத்தில் கிழக்கு நோக்கியும் இருத்தல் வேண்டும். தொடங்கும் போதும் முடிக்கும் போதும் திருச்சிற்றம்பலம் சொல்ல வேண்டும். அவ்வவ் புராணங்களுக்கு ஏற்றதான காப்புச் சொல்லி ஆரம்பிக்க வேண்டும். காப்புச் சொல்லும் போது எல்லோரும் வணங்க வேண்டும். காப்பை பயன் சொல்பவர் சொல்லுவதுதான் மரபு. புராணம் படிப்பவரும் பயன் விரித்து சொல்பவரும் உயர்ந்த ஒரு ஆசனத்தில் இருத்தல் வேண்டும்.

காப்புப்பாடி விட்டு பொருத்தமான இராகத்தில் பாடலை ஒரு தரம் பாடி முடித்த பின் பொருளுக்கு ஏற்ப தொடர்களாய் பிரித்துப் பாடவேண்டும். புராணம் படிப்பவர் முதன்முறைப் பாட்டைப் பண்ணுடன் பாடுவார். இரண்டாம் முறை பொருளமைவாகக் கொண்டு கூட்டி வாசிப்பார். வாசிப்பவரின் ஸ்ருதியில் அதே இராகத்தில் பயன் சொல்ல வேண்டும். அத்தொடரின் பொருளை அதற்குரிய பாணியில் சொல்ல வேண்டும். தேவையான இடத்தில் பொருள் விரித்து உரைக்கலாம்.

(தொடரும்)

எஸ்.ரி. குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய இன்பம்

முற்காலத்தில் ஒரு நாட்டிற்கு புகழும் பெருமையும் புலவர்களால் கிடைத்தன. சிறந்த புலவர்கள் நாட்டை அலங்கரித்து நாட்டின் செழுமைக்கும் வளர்ச்சிக்கும் நிலைக்களனாக விங்கினார்கள் என இலக்கியங்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அக்கால புலவர்களது பாடல்களுக்கு மன்னர்கள் மட்டுமன்றி ஆண்டவன் கூட மயங்கி நின்றான்.

'பாவலன் ஒருவன் செந்த<br>மிழ்க் கிரங்கி<br>பரவையார் ஊடலை மாற்ற<br>ஏவலனாகி இரவெல்லாம்<br>உழன்றான்'

என்ற பாடலிருந்து சிவபெருமான் சுந்தரமூர்த்தி நாயனாரது பண்சுமந்த பாடல்களுக்கு அடிமையாகி சுந்தரரின் மனைவியான பரவையார் சுந்தரர் மீது கொண்ட கோபத்தைத் தணிப்பதற்காக ஏவலாளியாக இரவு முழுவதும் அலைந்து திரிந்ததாக கூறப்படுகின்றது. அந்தளவிற்கு தேனொழுகும் பாடல்களுக்கு மயங்குபவனாக இறைவன் விளங்குகிறான். அது மட்டுமல்லாது இசை வடிவினனாகக் கூட இறைவன் விளங்குவதாக திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார்.

'ஏழிசையாய் இயற்பயனாய்.....' என்ற பாடல் மூலம் இறைவன் இசை வடிவினன் என்ற கருத்து புலப்படுத்தப்படுகிறது.

அது நிற்க,

சொக்கநாதப்புலவர் என்ற பெரும் புலவர் நாயக்கர் காலத்தில் மதுரையில் வசித்து வந்தார். அவர் பாடிய பாடல்கள் ஒவ்வொன்றும் தேன் சுவை சொட்டச் சொட்ட அமைந்திருக்கின்றன. சொற்சுவை, பொருட்சுவையுடன் கூடியவை. அவர் சிறந்த சிவ பக்தரும் கூட சொக்கநாதர் புலவர் ஒரு சமயம் திருக்களந்தை என்ற சிவதலம் சென்று வழிபட்டார்.

ஆண்டவன் சந்நிதானத்தில் நின்று அழகாகப் பாடி தான் விரும்பிய வரத்தை வேண்டி நின்றார். சொக்கநாதர் பாடலுக்கு மனமிரங்கிய இறைவன் உனக்கு என் வரம் வேண்டும் கேள்? என்று அசரீரியாக விளம்பினார்.

இந்த அசரீரியைக் கேட்டவுடன் எம் பெருமான் திருவருளை எண்ணி கண்களிலிருந்து நீர் சொரிய நின்றார். என்ன கேட்பதன்றே அவருக்குத் தெரியவில்லை. நாக்குழறியது.

ஆண்டவனிடம் அவன் அப்படி என்ன கேட்டார்? எம்மைப்போல் பொன் பொருள் நிலபுலங்களையுமா கேட்டார்? இல்லை. நிரம்பிய பொன்னும் பொருளும் நிலபுலங்களும் வாழ்க்கையில் திருப்தியாகவும் மகிழ்ச்சியாகவுமா இருக்கின்றன?

செல்வம் உயர உயர கவலைகள் உயருகின்றன. அதி கூடிய செல்வத்ததால் மன்னர்கள் கூட நிம்மதியிழந்து தவித்தனர். பெரும் செல்வந்தர்கள் கூட மனச்சாந்தியின்றி வருந்துகிறார்கள். ஆதலால் அறிவார்ந்த அப்புலவர் பெருமான் அல்லற்கு உறைவிடமான பொன்பொருளை வேண்டினாரில்லை.

அவர் வேறு என்ன வேண்டினார்? இறைவன் நமது உள்ளத்திலே இருப்பதுதான் மேலான இன்பம் பயக்கும் எனக் கருதினார். எல்லாம் வல்ல எம்பெருமான் நமது உள்ளத்திலே எழுந்தருளினால் அதை விட மேலான இன்பம் இருக்க முடியுமா? அதுவே பேரின்பம் அன்றோ எனக் கருதி, சுவாமி! கருணைக் கடலே! தேவரீர்! எனது உள்ளத்தில் எழுந்தருளியிருக்க வேண்டும் என வேண்டினார்.

அதற்கு இறைவன் அன்பனே நான் இந்தத் திருக்களந்தைக் கோயிலிலே இருக்கிறேன். இங்கு என்பால் பல அடியார்கள் தினமும் இடையறாது வந்து வழிபட்டுச் செல்கின்றனர். எனவே அவர்களுக்கு அருள் பாலிக்க வேண்டியது எனது கடமை இதனைவிடுத்து உன் உள்ளத்தில் நான் எப்படி வந்திருக்க முடியும்? அப்படி நான் வந்து தங்கினால் இங்கு என்னை நாடி வரும் பக்தர்களுக்கு அருள் பாலிப்பது யார்? ஆகவே நீ கேட்டதன் படி நான் உன் உள்ளே எப்போதும் தங்கியிருக்க முடியாது என நகைச்சுவையாக அப்புலவருக்கு நவின்றார்.

இந்த வசனத்தைக் கேட்ட புலவர் இறைவனைப் பார்த்து இறைவா! நீ எங்கும் எதிலும் தங்கும் நிறையுடையவன் பல வடிவு பூண்டவன் என்றாலும் நீ 'நான் திருக்களந்தைக் கோயிலில் இருக்கிறேன் உன் உள்ளத்தில் எவ்வாறு வந்து தங்குவேன்?' என்கிறாய்.

அதனால் நானும் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறேன். அது என்ன வழி தெரியுமா? கூறுகிறேன் என்று தனது நகைச்சுவையாக இறைவனிடத்தில் விண்ணப்பம் செய்கிறார் புலவர்.

இவ்விடத்தில் இறைவனுக்கும் புலவருக்கும் இடையில் உள்ள அன்பின் நெருக்கத்தினால் அவர்களுக்கிடையில் நகைச்சுவையான உரையாடல்கள் மூலம் தமது நெருக்கத்தை மேலும் வலுப்படுத்திக் கொள்ள முயல்கின்றனர் போலும். அப்புலவர் தான் கண்டு பிடித்துள்ள வழிமுறை பற்றி பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறார்.


'ஆகத்திலே யொருபாதி<br>யென்னம்மைக் களித்தவன்-<br>தன்<br>பாகத்திலே யொன்று<br>கொண்டாய் அவன் மற்றைப்<br>பாதியும் உன்<br>தேகத்திலே பாதியும் சேர்த்<br>தால் இருவர் உண்டே -சிவனே<br>ஏகத்திராமல் இருப்பாய்<br>களந்தையும் என் நெஞ்சுமே'

என்றார். இப்பாடல் மூலம் ஐயனே! நீர் முன்னம் உமது திருமேனியில் இடப்பாகத்தை எனது தாய் உமாதேவிக்கு தந்தாய். வலப்பாகத்தை நீ பெற்றுக் கொண்டாய். அந்த வகையில் உமது திருமேனியில் மிகுதி இடப்பாகமும் அம்மையாரின் வலப்பாகம் சேர்த்து இப்போது எங்கே காட்சியளிக்கின்றீர்?

உமது திருமேனியில் மற்றப் பாதியும் அம்மையின் மேனியில் ஒரு பாதியும் உண்டல்லவோ? அந்த இரண்டும் சேர்ந்தால் ஒருருவம் ஆகுந்தானே. அப்போது உனக்கு இரு வடிவங்கள் தானே. அதில் ஒரு வடிவத்தை பக்தர்களுக்கு அருள்பாலிக்க திருக்களந்தைக் கோயிலிலும் மற்றைய வடிவம் அடியேனின் மனக்கோயிலிலும் இருக்கட்டுமே என்று மிக அழகான பாடல் மூலம் இறைவனுக்கு விண்ணப்பம் செய்கிறார்.

**எஸ். நதிபரன் B.A. (Hons)**

# ஊர்ப் புதினம்



மூத்தோர், முதியவர், மூத்த பிரஜைகள், சிரேஷ்ட பிரஜைகள் எனப் பலவித சொற்பதங்கள் 60 வயதைத் தாண்டிய பிரஜைகள் தொடர்பாகக் கூறப்படும் பதங்களாக உள்ளன. மூத்தோரை மூத்தோரே கௌரவித்த நிகழ்வொன்றின் நிழலை இங்கே பதிவு செய்கிறேன்.

யாழ்.மாவட்டத்தின் மூத்த பிரஜைகள் பேரவை கொக்குவிலில் அமைந்துள்ளது. இப்பேரவையினர் மிக அண்மையில் யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலகப் பிரிவு ரீதியாகச் சிறந்த முதியோரைத் தெரிவு செய்து கௌரவித்தது.

தாம் வாழும் பிரதேசத்திற்காகச் சிறந்த சமூக சேவைகள் செய்தோர் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவர்களது சேவைகள் உலகறியச் செய்யப்பட்டது. முதியோர் ஒவ்வொருவரும் நடமாடும் நூலகங்கள் என ஐரோப்பியரின் பழமொழி கூறுகின்றது.

தமது பட்டறிவு, பகுத்தறிவு கொண்டு நிகழ்காலச் சமூகத்தின் வளர்ச்சிக்கு உதவுகின்றனர். தமது கடந்த காலங்களில் செய்த சேவைகள் வாழ்கின்ற இளஞ்சந்ததியினருக்கு உதவுகின்றது.

இவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள், குறித்த விழிப்புணர்வுகள் எமது சமூகத்தில் மிகக் குறைவாக இருப்பது மன வருத்தத்திற்குரியது.

பல்கலைக்கழகத்துக்கு மருத்துவம், பொறியியல் கற்பதற்கு தெரிவாகும் மாணவர்களை விட தரம் 05 புலமைப் பரிசில் வெட்டுப் புள்ளியை எட்டிப் பிடிப்பவர்களுக்குத் தான் விளம்பரம் அதிகம் கிடைக்கின்றது. அதன் விளைவு சிறு வயதில் மாணவர்கள் அதிகம் புகழப்பட்டு தாம் கெட்டிக்காரர் என்ற நினைப்பால் கல்வியில் பின்னடைவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

ஆனால், தமது நிகழ்காலத்தைப் பொதுச் சமூக உயர்விற்காக உழைத்த முதியோர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வுகள் மிகவும் அரிதாகவே நிகழ்கின்றன. பிரதேசம் ரீதியாக, கிராமம் ரீதியாக அவர்களைக் கௌரவிகக்கும் நிகழ்வுகள் ஊக்குவிக்கப்படுவது அவசியமானது.

சேவை செய்த மூத்தோரைக் கௌரவிக்கும் போது இன்றைய இளையோர், நடுத்தர வயதினர் ஊக்கம் பெறுவர். தாமும் நல்லவர்களாக வாழ வேண்டும் என்ற எண்ணம் பெறுவார்கள். சமூக அமைதியின்மை தோன்றுகின்றது. குற்றச் செயல்கள் பெருகுகின்றது என எல்லாம் குற்றச் சாட்டுக்கள் எழுகின்றன.

எமது பண்பாட்டினை வழி வந்த நல்ல செயல்களைச் சரிவரக் கடைப்பிடிக்க விழிப்புணர்வு பெறுமாயின் அவற்றைக் குறைக்க முடியுமலில்லவா?

**சிவகாமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரமும் மக்களும்

வியாபாரத்தைப் பெருக்க விளம்பரங்கள் அவசியம் என்பதால் விளம்பரங்கள் வியாபாரத்திற்கு இன்றியமையாதவையாக திகழ்கின்றன.

நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் போன்ற விசேட தினங்களையொட்டி பல நிறுவனங்கள் ஏட்டிக்குப் போட்டியாக விளம்பரங்களை வெளியிடுகின்றன. ஆனால் இதன் மூலம் மக்கள் எதிர்பார்த்த நன்மைகள் எந்தளவுக்கு கிடைக்கின்றன என்பது சந்தேகமே,




அதன்படி சில விளம்பரங்களை எடுத்து நோக்கவோமாயின்...,

தொலைபேசி இணைப்பை வழங்கும் நிறுவனம் ஒன்று தனது இணைப்புக்களின் வகை மற்றும் விலைகள் தொடர்பாக விளம்பரம் ஒன்றை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இதனையடுத்து, அந்த குறித்த தொலைபேசி இணைப்பை பெறச் சென்றிருந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

அதற்கு காரணம் குறித்த தொலைபேசி இணைப்பைப் பெற விளம்பரத்தில் குறிப்பிட்ட விலையுடன் ஆயிரம் ரூபா வரியும் சேர்க்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டமையேயாகும்.

இதேபோல், கையடக்கத்தொலைபேசி இணைப்பு மற்றும் இணைய 'டொங்கல்' வழங்கும் நிறுவனம் ஒன்று விளம்பரத்தை வெளியிட்டிருந்தது.

ஆனால், இதற்கேற்ப இணைய 'டொங்கல்'லை கொள்வனவு செய்யச் சென்றிருந்தவர்களுக்கு குறிப்பிடப்பட்ட விலையை விட மேலதிக வைப்புக் கட்டணமாக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்விரண்டு நிறுவனங்களினால் வெளியிடப்பட்ட விளம்பரங்களில் காணப்பட்ட 'நிபந்தனைக்குட்பட்டது', 'வரி உள்ளடக்கப்படவில்லை', 'வைப்புக்கட்டணம் உண்டு' என்ற பதங்களுக்குள் உள்ள ஆழம், குறித்த பொருட்களை கொள்வனவு செய்ய முயன்ற மக்களுக்குத்தான் தெரியும்.

அதாவது 5990 ரூபா விளம்பர விலைக்கு வரியாக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும், 5400 ரூபா விளம்பர விலைக்கு வைப்புக் கட்டணமாக ஆயிரம் ரூபா செலுத்த வேண்டியுள்ளமையினைக் குறிப்பிடமுடியும்.

இதே நேரம் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை மூலம் கணனி கல்வியை வழங்கும் நிறுவனம், விளம்பர ஒன்றினை வெளியிட்டு வருகின்றது.

அவ்விளம்பரத்தில் மாணவர்களைக் கவரும் விதமாக கணனி டிப்ளோமா பாடநெறியை பயில்வதற்குக் கட்டணம் ஆயிரம் ரூபா எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

ஆனால், விளம்பரத்தில் குறிப்பிட்ட கட்டணத்தை விட அதிகமான கட்டணம் பதிவு என்ற பெயரில் அறவிடப்படுகின்றது. விளம்பரத்தின் படி கட்டணம் ஆயிரம் ரூபா என்ற போதும் பதிவுக்கட்டணமாக ஆயிரத்து இருநூற்று ஐம்பதும் அறவிடப்படுகின்றது.

ஒரு கணனி டிப்ளோமாவை பயில்வதற்குப் பதிவுக்கட்டணம், கட்டணம் என மொத்தமாக இரண்டாயிரத்து இருநூற்று ஐம்பது அறவிடப்படும் நிலை காணப்படுகின்றது.

குறிப்பிட்ட பதிவுக் கட்டண விபரம், இவ் விளம்பரத்தில் குறிப்பிடப்படாது அறவிடப்படுவதனால் விளம்பரங்களை நம்ப முடியாத நிலை காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரங்கள் சரியான மற்றும் உண்மையான தகவல்களை நுகர்வோருக்கு வழங்க வேண்டும் என நுகர்வோர் பாதுகாப்பு ஒழுங்கு விதிகள் காணப்படுகின்றன. ஆனால் அவை அனைத்தும் குறிப்பிட்ட சில வாசகங்கள் மூலம் மீறப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இதனால் விளம்பரத்தின் உண்மைத் தன்மையை அறிய நுகர்வோர் அல்லது மக்கள் படும்பாடு பெரும்பாடாகிறது.

● ஞானத்தமிழ்

# மெருகூட்டிக் கலைவளர்த்த மெற்றாஸ்மயில்

'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்ற வாக்குக்கிணங்க கலைகளின் காவலனாக விளங்கி, கலைக்காகவே வாழ்ந்து, கலைக்காகவே பாடுபட்டு, கலைக்காவே தம்மை அர்ப்பணித்து, கலைமகளின் அருட்பார்வையினால் புகழேணியின் உச்சியிலே நின்றவர்தான் அமரர் மெற்றாஸ்மயில் அவர்கள்.

பாரம்பரிய கலைமகளின் பாதுகாவலன் எனக் கூறுமளவுக்கு அழிந்து போகவிருந்த அருங்கலைகளுக்குப் புத்துயிரூட்டி அரும்பணியாற்றிய ஒரு தமிழ்மகன் கலைஞர் மெற்றாஸ்மயில் அவர்கள்.

யாழ்.மாவட்டத்திலே இலைமறை காயாகவிருந்த பல்துறை சார்ந்த கலைஞர்களையெல்லாம் வெளிக்கொணர்ந்து தன்னுடைய விடாமுயற்சியால் கலையுலகிற்கு அவர்களை அறிமுகப்படுத்தி பல்வேறு கலைகளையெல்லாம் பவ்யமாக வளர்த்து நல்லதொரு சேவை செய்தவர் அமரர் மெற்றாஸ்மயில் அவர்கள்.

என்ன என்ன வகையிலே யார் யாரிடம் திறமை காணப்படுகின்றதோ அந்த அந்த வகையில் அவர்களை இனங்கண்டு அவர் மூலமாகக் கலைகளை வளர்த்தெடுத்து, அந்த நல்ல கலைஞர்களுக்கு விழாவெடுத்து பொன்னாடை போர்த்து, மலர் மாலை அணிவித்து, வெள்ளிக் கிரீடம் சூட்டிக் கௌரங் கொடுத்த ஒரே ஒரு தமிழ்க் கலைஞன் இவரென்றால் அது மிகையாகாது.



[illegible] இவர் ஒரு தலைசிறந்த நாடக நடிகராவார். தானே நாடகங்களை எழுதி அதற்குத் தகுதி வாய்ந்த கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து நல்ல முறையிலே நெறியாள்கை செய்து தாமே தயாரிப்பாளராகவும் விளங்கிய இவரது கலையார்வம் சொல்லுந்தரமன்று.

எத்தனையோ நாடகங்களை எழுதி மேடையேற்றி இவருக்கு 'வேழம் படுத்த வீராங்கனை' என்ற நாடகம் மட்டிலாப் புகழைத் தேடிக் கொடுத்தது. இந்த நாடகம் பல தடவைகள் மேடையேற்றப்பட்டதுடன் இவர் ஒரு தலை சிறந்த அண்ணாவியார் என்பதற்கு உரைக்கல்லாகவும் விளங்கியது குறிப்பிடத்தக்கது.

கல்வித் திணைக்களத்திலே பதவி நிலை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய இவர் தம்முடைய வாழ்நாளில் பெரும் பகுதியைக் கலைக்காகவே அர்ப்பணஞ் செய்திருந்தார். இவருடைய கலையார்வ மிகுதியால் வன்னி வள நாட்டார் பாடல்கள், இசை நாடகக் கூத்து, மூத்த கலைஞர் வரலாறு, ஆனையை அடக்கிய அரியாத்தை, மண் வாசனையில் மூன்று நாட்கள் என்ற நூல்களும் வெளிவந்தமை ஓர் அரிய பணியென்று தான் சொல்ல வேண்டும்.

(28ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் விளையாட்டு செய்திகள்

# வட்டு. மத்திய கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி

அரியாலை,

வட்டு. மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த இரண்டாம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பாடசாலை அதிபர் ந.சாபாரட்ணசிங்கி தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர் கலாநிதி சரணபவ ஐயரும் அவரது பாரியாரும், சிறப்பு விருந்தினராக இலங்கை வங்கி முகாமையாளர் ச. சர்வானந்தனும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இல்லங்களுக்கிடையிலான போட்டியில் அப்பர் இல்லம் 478 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.



யாழ். வைத்தீஸ்வரா கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிக்கு தயாராக அணிவகுத்து நிற்கும் மாணவிகள்

# 7 வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சை

அரியாலை,

யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகளும் எழுத்து மூலப்பரீட்சைகள் கடந்த 03 ஆம், 04 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இவர்களுக்கான செயன்முறைப்பரீட்சை கடந்த 05ஆம் திகதி யாழ். துரையப்பா விளையாட்டரங்கு மைதானத்தில் நடைபெற்றது. இப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து 41 பேரும், பருத்தித்துறையிலிருந்து 37 பேரும், கிளிநொச்சியிலிருந்து 07 பேரும், வவுனியாவிலிருந்து 13 பேரும், மன்னாரிலிருந்து 06 பேருமாக மொத்தம் 105 பேர் பங்குபற்றினார்கள்.

மேலும் இவ் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையில் தரம்- I ற்கு இரண்டு பேரும், தரம்- II ற்கு 10 பேரும், தரம்- III ற்கு 93 பேரும் தோற்றினார்கள்.

உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகளையும் பரீட்சைகளையும் நடாத்துவதற்கு சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களான என்.ட. ஜெலாற்றின், றுமேஷ், வடிவேல், திஸநாயக்கா ஆகிய 04 பேர் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தினால் அனுப்பப்பட்டிருந்தார்கள்.

இப் பரீட்சையானது கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மாத்திரம் ஒரே தினத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்ட போதிலும் சீரற்ற கால நிலை காரணமாக கொழும்பில் நடைபெறவில்லை.

# பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள்

*தெல்லிப்பழை*

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி பிரதி அதிபர் றூபி இராசரத்தினம் தலைமையில் வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் சி. அரசகுமார், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய உடற் கல்வி ஆசிரிய ஆலோசகர் கே. சிவராஜா, சமாதான நீதிவான் லயன் செ. மகாதேவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

◄……………► *தெல்லிப்பழை*

புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் செல்வி. ச. சிவசக்தி தேவி, சிறப்பு விருந்தினர்களாக புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஜே 208 கிராம சேவையாளர் சோ. பரமநாதன், புன்னாலைக்கட்டுவன் சிறி துர்க்கா சனசமூக நிலைய செயலாளர்இ. கெங்காதரன், ஓய்வு பெற்ற அதிபர் க. ஆனந்தராசா, சுன்னாகம் மானிப்பாய் பனை தென்னை அபிவிருத்திச் சபைத் தலைவர் க. மெய்யப்பன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக உடுவில் கோட்டக் கல்வி பணிப்பாளர் செ. குபேரநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

◄……………► *தெல்லிப்பழை*

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி இன்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரியில் தற்காலிக அமைவிடமான தெல்லிப்பழை விளையாட்டு மைதானத்தில் அதிபர் பொ. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளருமான திருமதி க.சிவாஜி அவர்கள் கலந்து கொள்ளவுள்ளார்.

◄……………► *நெடுங்கேணி*

நெல்லியடி மத்திய மகா வித்தியலயத்தின் இல்ல மெய் வல்லுநர் போட்டிகள் நாளை மறுதினம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வித்தியாலயத்தின் அதிபர் எஸ். சேதுராஜாவின் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறிபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஆறுமுகம் சுந்தரலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

## மரதன் ஓட்டப்போட்டி

தெல்லிப்பழை

தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை ஒட்டி நடத்தப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ம. மயூரன் முதலாம் இடத்தையும் தி. சஜேந்திரன் இரண்டாமிடத்தையும் ஜெ. ஜனந்தன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

பெண்கள் பிரிவில் பா. சாணு முதலாமிடத்தையும் ம. லோஜனா இரண்டாமிடத்தையும் தே. தர்ஷிகா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இம் மரதன் போட்டியில் ஆண்கள் பிரிவில் 30பேரும் பெண்கள் பிரிவில் 25 பேரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



அண்மையில் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற செயன்முறைப் பரீட்சையில் பங்குபற்றியவர்களைப் படத்தில் காணலாம்

## மெருகூட்டிக் கலை...

(27ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர் நடித்து மேடையேற்றி 'வள்ளி திருமணம்', 'அரிச்சந்திரா மயான காண்டம்', 'சத்தியவான் சாவித்திரி', 'பவளக் கொடி' முதலிய நாடகங்களால் இவரது நடிப்பாற்றல் நன்கு வெளிக்காட்டப்பட்டதுடன் சிறந்த தயாரிப்பாளர் என்பதும் நிரூபணமாயிற்று.

பாரம்பரிய கலைகள் பரிணாம வளர்ச்சியடைய வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் செயற்பட்ட இவர் நல்ல தரமான கலைஞர்கள் மூலமாக அரிய பல கலை நிகழ்வுகளை உருவாக்கி அவற்றை ஒலிப்பேழை ஒலிநாடாவாகப் பதிவு செய்தும் பல இறுவட்டுக்களை தயாரித்து வெளியிட்டும் ஓர் அரிதான சாதனையும் படைத்துள்ளார்.

இலங்கையிலே தமிழ்ப்பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். கலைகளின் பாரம்பரியமும் அடிப்படைக் கோட்பாடுகளும் இசைஞானலயம் மிக்க கலைஞர்களும் சுகமாக வாழ வேண்டும் என்றும் விரும்பிய இவர் கலைஞர் விபரங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றும் வெளிவர வேண்டும் என்றும் விரும்பியிருந்தார்.

அதன்படி யாழ். கலாசாரப் பேரவையும் ஒரு கலைநூலை வெளியிட்டிருந்த படியால் அந்த ஆசையும் நிறைவெய்தியது.

இவ்வாறு கலைகளின் வளர்ச்சிக்காகவே முற்றுமுழுதாக வாழ்ந்து மறைந்த ஒரு தனிப்பெருங் கலைஞர் மெற்றாஸ்மயில் வாழ் நாளில் மறக்கமுடியாத ஓரிடத்தைப் பெற்றுவிட்டார்.

இவர் விட்டுச்சென்ற பணிகளை நல்ல முறையில் தொடர நம்மாலான மட்டும் செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த கிழமையும் வாழ்க்கைப் பலனும்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

**புதன் கிழமையில் பிறந்தவர்கள்**

புதன் கிழமையில் பிறந்தவர்கள் சூட்சுமதாரிகளாக இருப்பார்கள். எந்த ஒரு ரகசிய காரியமானாலும் தன் யூகத்தைக் கொண்டு அறிந்து விடுவார்கள். பெரிய இயந்திரம் முதல் மிகச் சிறிய இயந்திரமான கடிகாரம் வரை வைத்தியம், ஜோதிடம் போன்ற கலைகளிலும் ஆராய்ச்சி செய்து பல அரிய விஷயங்களை அறிந்து வைத்திருப்பார்கள். புதன் கிழமையில் பிறந்த ஒரு சிலர் பிரபல டாக்டர்களாகவும், நீதிபதிகளாகவும், பொறியியல் வல்லுநர்களாகுவும், நடிப்புக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாகவும், எழுத்தாளர்களாகவும், பல அரிய நூல்களை எழுதும் நூலாசிரியர்களாகவும் கூட இருக்கின்றனர். ஒவ்வொரு சமயத்தில் தாராளமான வருமானமும் ஒவ்வொரு காலத்தில் குறைந்த வருமானமும் கிடைக்கும். பணம் கிடைக்கும் பொழுது மன சந்தோஷமும் பணமில்லாத நேரத்தில் சஞ்சலமும் கொள்ளமாட்டார்கள். எப்போதும் ஒரே நிலையில்தான் இருப்பார்கள். பிறரிடம் சாமார்த்தியமாகப் பேசி தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளும் தனித்திறமை பெற்றவர்கள் இவர்கள். இவர்களுக்கு 23, 32, 41, 50, 59, 68 வயது நடைபெறும் பொழுது நல்ல முன்னேற்றமும் எதிர்பாராத அதிஷ்டத்தின் மூலம் பணமும் கிடைத்து வரும்.

ஒவ்வொரு மாதத்திலும் 5, 10, 14, 23 ஆகிய திகதிகளில் எந்த ஒரு நல்ல காரியமும் செய்யலாம்.இத் திகதிகள் வியாழக்கிழமைகளில் வாருமானால் விசேஷ பலன் கிடைக்கும்.

**வியாழக்கிழமையில் பிறந்தவர்கள்**

வியாழக்கிழமையில் பிறந்தவர்கள் நீதிக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டவர்கள். முறை தவறி நியாயமின்றி நடப்பவர்களாக இருந்தாலும் அவர்களை அணுகி அவர்களிடம் சாந்தமாக அன்பாக பேசி அவர்களை நல்ல வழியில் நடக்க வழிமுறை கூறி அன்பினாலேயே திருத்தி நல்ல வழியில் நடக்கும் படி செய்வதில் தனித் திறமை பெற்றவர்கள். இவர்கள் கண்ணியம் மிக்கவர்களாக வாழ்வார்கள். எவரிடத்திலும் அன்பாக பேசும் சுபாவம் உள்ளவர்கள். இன பந்துக்கள் நண்பர்கள் இவர்களுக்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால் உடனடியாக அதை நிவர்த்தி செய்து அவர்களுக்குத் தேவையான உதவிகளையும் செய்வார்கள்.

ஒருவருக்கு வாக்குக் கொடுத்துவிட்டால் அது எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் அதை நிறைவேற்றாமல் விடமாட்டார்கள். இவர்கள் தன் தொழில் துறை எதுவானாலும் அதில் நல்ல முன்னேற்றமடைவார்கள். வியாழக்கிழமையில் பிறந்த ஒரு சிலர் கஷ்டதிசையிலும் கூட வாழ்கின்றனர். இவர்களுக்குள்ள அத்துணை சுபாவமும் அவர்களிடத்திலுமிருக்கும்.

இவர்களின் 18, 21, 24, 28, 30, 33, 36, 39, 42, 45, 48, 51, 54, 57, 60, 63, 66, 69, 72 வயதுகளில் நல்ல முன்னேற்றம் இருக்கும். கஷ்டமின்றி சுகமாக வாழ்வார்கள். மாதத்தில் வரும் 3, 6, 9, 12, 15, 18, 21,26, 27, 30 திகதிகளில் எந்தவொரு நல்ல காரியத்தையும் ஆரம்பிக்கலாம். இந்த திகதிகள் வெள்ளிக்கிழமைகளில் வந்தால் விசேஷ பலன் கிடைக்கும்.

**வெள்ளிக்கிழமையில் பிறந்தவர்கள்**

வெள்ளிக்கிழமையில் பிறந்தவர்கள் பேசும் எந்த பேச்சிலும் ஒரு கருத்து இருக்கும். சூட்சுமமாக பேசி பிறரை மயக்கிவிடுவார்கள். பெண்களை மயக்குவதில் சமர்த்தர்கள். இவர்கள் சொல்படி நடப்பவர்களைப் பெரிதும் புகழ்வார்கள். அவர்களைக் கொண்டே பல காரியங்களையும் சாதித்துக் கொள்வார்கள். தன் சொல்லுக்கு கட்டுப் படாதவர்களை தன்னிடம் நெருங்க விடமாட்டார்கள். இவர்களை ஒருவர் ஒரு காரியத்திற்காகக் கெஞ்சினால் இவர்கள் மிஞ்சுவார்கள். தயவு தாட்சண்யமின்றி பேசி அனுப்பிவிடுவார்கள். ஒரு சிலர் இவரிடத்தில் அதிகாரத்தோரணையில் பேசி ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமென்று கூறினால் பணிவோடு அக்காரியத்தை முடித்துத் தருவதாக ஒப்புக் கொள்வார்கள்.

( 30 ஆம் பக்கம் பார்க்க)

## 'யாழ் ஓசையின்' வார ஜோதிட பலன் [11.02.11 முதல் 17.02.11 வரை]

### கலாநிதி துன்னையூர் ராம் தேவலோகேஸ்வர குருக்கள் (சாரதாபீட ஜோதிடம்)



*** மேஷம்**

மேடராசி அன்பர்களுக்கு எதிர் பார்ப்புக்கள் நிறைவேறக் கூடிய பலன்கள் அமையும். தொழில் நிலைகளில் முன்னேற்றம் அமைந்திருக்கும். புதிய முயற்சிகளில் அனுகூலமான வெற்றிகள் அமையும். குடும்பத்தில் மகிழ்வும் சுபகாரிய நற்பலன்களும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும் பலன் உண்டு. கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



*** இடபம்**

இடராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு வெற்றிகள் ஏற்படும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலையிருக்கும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயல் வேண்டும். குடும்ப நிலையில் ஓரளவிற்கு நன்மைகள் ஏற்படும். மூத்த சகோதரர் வழியில் அனுகூலமான நிலை இருக்கும்.

கடன் நிலை களில் சற்று இழுபறி தாமத நிலையிருக் கும். பெண்களுக்கு மத்திம பலன் அமையும். மாணவர்களுக்கு அனுகூல முண்டு.



*** மிதுனம்**

மிதுனராசி அன்பர்களுக்கு மிகச் சிறப்பான பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நிலையுண்டு. பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையில் அமை யும். குடும்பத்தில் அனுகூலமான நற் பலன்கள் ஏற்படும். எடுக்கின்ற காரி யங்களில் நல்ல வெற்றிகள் அமையும்.

கடன் நிலைகளில் சுமுகமான பலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மை ஏற்படும். மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



*** கடகம்**

கடகராசி அன்பர்களுக்கு சற்று மத்திமமான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் அலைச்சல் இழுபறி நிலை இருக்கும். எதிர்பாராதவகை செலவீனங்கள் ஏற்படுகின்ற நிலையிருக்கும். குடும்பத்தில் சற்று மத்திமமான பலனே ஏற்படும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் மத்திமமான பலன்களே அமையும் நிலையுண்டு. பெண்களுக்கு மன சஞ்சலமிருக்கும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.



*** சிம்மம்**

சிம்மராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். குடும்ப நிலையில் நற்பலன்கள் ஏற்படும். தொழில் நிலைகளில் அனுகூலமான பலன்கள் அமையும். பணவரவு ஓரளவுக்கு தேவைகளுக்கு ஏற்ப அமைகின்ற நிலையுண்டு. மனைவி வழியால் நன்மைகள் அமையும். கடன் நிலைகளில் ஓரளவிற்கு சுமுக நிலை ஏற்படும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.



*** கன்னி**

கன்னிராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். தொழில் நிலைகளில் அலைச்சல் நிலையிருக்கும். உடல் நிலையில் சிறு சிறு சுகவீனங்கள் ஏற்பட்டு மறையும். குடும்பத்தில் சுமாரான மத்திமமான பலன்களே இருக்கும். கடன் நிலைகளில் இழுபறி தாமத நிலை தொடரும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.



*** துலாம்**

துலாம் ராசி அன்பர்களுக்கு சிறப்பான அனுகூலுமான பலன் அமையும். தொழில் நிலைகளில் நல்ல சிறப்புகள் அமையும். குடும்பத்தில் குதூகலமும் நன்மையும் அமையும் நிலையுண்டு. எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றியும் சிறப்பும் ஏற்படும். பணவரவு மிகவும் திருப்திகரமான நிலையிலே அமையும். கடன் நிலைகளில் சுமுகமான பலாபலன்கள் ஏற்படும். பெண்களுக்கு நன்மையுண்டு. மாணவர்களுக்கு மேன்மை உண்டு.



*** விருச்சிகம்**

விருட்சிகராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன்கள் அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் இழுபறி, தாமத நிலை இருக்கும். குடும்பத்தில் அனுகூல பலன் இருக்கும். தாயார் வழியில் சுகயீனம், மருத்துவ செலவு ஏற்படும். பணவு வரவு ஓரளவிற்கு அனுகூலமாக நிலையில் அமையும். கடன் நிலைகளில் சற்று அலைச்சல் நிலைகள் இருக்கும். பெண்களுக்கு சஞ்சல நிலை இருக்கும். மாணவர்களுக்கு மேன்மையுண்டு.



*** தனுசு**

தனுசு ராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான பலன்களே அமையும். தொழில் நிலைகளில் வேலைப்பழு அமைந்திருக்கும். குடும்பத்தில் ஓரளவிற்கு நற்பலா பலன்கள் ஏற்படும். சகோதரர் வழியில் சிறு சிறு பிரச்சினைகள் அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமைகின்ற பலனுண்டு. கடன் நிலைகளில் மத்திம பலன்களே அமைந்திருக்கும். பெண்களுக்கு மத்திம பலன் உண்டு. மாணவர்களுக்கு முயற்சி தேவை.



*** மகரம்**

மகரராசி அன்பர்களுக்கு மிகவும் சிறப்பான அனுகூலுமான பலன் அமையும் நிலையுண்டு. தொழில் நிலையில் சிறப்பான முன்னேற்றமுண்டு. குடும்பத்தில் அனுகூலமான நற்பலா பலன்கள் ஏற்படும். எடுக்கின்ற முயற்சிகளில் நல்ல வெற்றிகள் அமையும். தொழில் நிலையில் பணவரவு திருப்திகரமானதாக ஏற்படும். கடன் நிலைகளில் சுமுகமான பலா பலன்கள் அமையும். பெண்களுக்கு நன்மை உண்டு. மாணவர்களுக்கு வெற்றியுண்டு.



*** கும்பம்**

கும்பராசி அன்பர்களுக்கு சற்று சுமாரான மத்திமமான பலன்களே அமையும். எடுக்கின்ற முயற்சிகளில் நிதானம் தேவை. தொழில் நிலைகளில் அலைச்சல், இழுபறி நிலை இருக்கும். எடுக்கின்ற காரியங்களில் தேவையற்ற பிரச்சினைகள் அமையும். பணவரவு தேவைகளுக்கு ஏற்ப அமையும் நிலையுண்டு. கடன் நிலைகளில் இழுபறி, தாமத நிலை அமையும். பெண்களுக்கு மத்திம பலன் ஏற்படும். மாணவர்கள் நிதானம் தேவை.



*** மீனம்**

மீனராசி அன்பர்களுக்கு ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். தொழில் நிலைகளில் நிதானம் வேண்டும். குடும்பத்தில் ஓரளவிற்கு அனுகூலமான பலன் அமையும். பணவரவு ஓரளவிற்கு தேவைகளுக்கு ஏற்ப அமையும். எதிர்பாராத வகையில் திடீர் பண விரயங்கள் ஏற்படும். கடன் நிலைகளில் நிதானமான செயற்பாடு வேண்டும். பெண்களுக்கு சுமாரான பலன்கள் அமையும். மாணவர்களுக்கு முயற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையில் 'நாக மரபில்' இனம், நாடு, அரசு


(சென்ற வாரத் தொடர்ச்சி)

அத்துடன், இந்நாணயத்தின் பின்பக்கத்தில் உள்ள சதுரத்திற்குள் அமைந்த சிறிய வட்டமும் அதற்குள் மூன்று புள்ளிகளும் கொண்ட சின்னம் தமிழக நாணயங்களில் மட்டுமன்றி இந்திய நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை.

ஆனால், இலங்கையில் இரண்டாம் நூற்றாண்டில் சிங்கள மன்னர்கள் வெளியிட்ட சிங்கம் பொறித்த நாணயங்களில் இந்த அம்சத்தைக் காணலாம் (படம்- 8). இந்த ஒற்றுமை தமிழ் சிங்கள மன்னர்களிடையே நாணயங்களை வெளியிடுவதில் பொதுவான நாணய மரபு இருந்திருக்கலாம் எனக் கருத இடமளிக்கிறது. அண்மையில் இவ்வகை நாணயங்கள் சில தென்னிலங்கையில் அக்குறுகொட என்ற

## மீள்வாசிப்பிற்கு உட்படுத்தப்படும் தொல்லியல், இலக்கியச் சான்றுகள்


இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றை உள்ளூர் நாணயம் எனக் குறிப்பிட்டும் பேராசிரியர் போபபேஆராச்சி அதற்கு ஆதாரமாக நாணயங்களை வெளியிடப் பயன்படுத்திய சுடுமண் அச்சுகள் அங்க கிடைத்திருப்பதை ஆதாரமாகக் காட்டியுள்ளார் (Bopearachchi 1999). இதிலிருந்து இந்நாணயங்கள் இலங்கையிலேயே வெளியிடப்பட்டதென்பது உறுதியாகிறது. புதினாறாம் நூற்றண்டில் போத்துக்கேயர் இலங்கை வந்த போது இங்கு ஆட்சியில் இருந்து சிங்கள மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் சிங்கமும், யாழ்ப்பாண மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களில் காளையும் அவர்களது அரச இலட்சினையாகப் பயன்படுத்தபட்டுள்ளது. இச்சின்னங்களுக்கு நீண்ட பாரம்பரிய வரலாறு உண்டு என்பதையே மேற்கூறப்பட்ட இரண்டு நாணயங்களும் உறுதிசெய்கின்றன.



படம்-8

வடஇலங்கையில் கிடைத்த இரண்டாவது வகை நாணயத்தில் மீன் முக்கிய சின்னமாகக் காணப்படுகிறது. இது பாண்டிரின் அரச இலச்சினையாக அவர்களின் நாணயங்களில் பயன்படுத்தப்பட்டிருப்பதால் இவை பாண்டியத் தொடர்பால் வடஇலங்கைக்கு வந்ததென கூறப்பட்டுள்ளது (Mictchiner 1998 : 235, : Biddulph 1966:32, Seyone 1988 : 27-30) (படம்-10). அதில் சதுரவடிவில் அமைந்த நாணயங்களை ஏழாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதாகவும், வட்டவடிவில் அமைந்த நாணயங்கள் பத்தாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டிருக்கலாம் எனவும் மிற்சினர் கூறுகிறார் (Mictchiner 1998:235. ஆனால் பிதுல்/ப் சதுரவடிவில் அமைந்த நாணயங்களை ஒன்பதாம் நூற்றாண்டில் ஸ்ரீமா பல்லவன் இலங்கையை வெற்றி கொண்ட போது வெளியிட்டிருக்கலாம் எனக் குறைப்படுகிறார். (Biddulph 1966:32). ஆனால், சமகாலத்தில் தமிழகத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களோடு இந்நாணயங்களை ஒப்பிடும் போது இவற்றைப் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களாக எடுத்துக்கொள்ள முடியாதிருக்கிறது. ஏனெனில் தமிழகத்தில் சதுரவடிவில் வெளியிடப்பட்ட பாண்டிய நாணயங்களில் எல்லாம் மீன் உருவம் தன்யொரு சின்னமாக நாணயத்தின் பின்பக்கத்தில் ஒரு குறியீடாக் கோட்டுருவில் பொறிப்பட்டுள்ளது. இவ்வகை நாணயங்கள் இலங்கையிலும் கிடைத்துள்ளன (படம்-8). ஆனால் வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் இதற்குமாறாக மீனின் வடிவம் முழு உருவில் பொறிக்கப்பட்டிருக்கப்படுவதுடன் அதன் அருகே குத்து விளக்கும் சேர்ந்து காணப்படுகிறது. இந்த அம்சம் நாணயத்தின் பின்பக்கத்திலும் காணப்படுகிறது. இந்த அம்சரத்தை சமகாலத்தில் பாண்டியர் வெளியிட்ட நாணயங்களில் காணப்படவில்லை. மேலும் பாண்டியர் மதுரையில் ஆட்சி செய்த காலத்தில் ஒரு மீன் சின்னத்தையும், திருநெல்வேலியை வெற்றி கொண்டு ஆட்சி செய்த காலத்தில் இரு மீன் சின்னத்தையும் தமது நாணயங்களில் பொறித்துத் துள்ளார்னர். இதை அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுக்களும் கூறுகின்றன. ஆனால், வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களில் இரண்டுக்கு மேற்பட்ட மீன் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதற்கு உடுத்துறையில் கிடைத்த நாணயம் ஒரு சிறந்த உதாரணமாகும். இந்நாணயங்களை ஸ்ரீமாஸ்ரீபல்லவன் ஒன்பதாம் நூற்றாண்டில் வெளியிடப்பட்டதாக பிடுப்பே கூறுவதும் பொருந்துமாறில்லை. ஏனெனில் தமிழகத்தில் அவன் வெளியிட்ட நாணயங்கள் எல்லாம் வட்டவடிவில் இருந்ததுடன் பெரும்பாலான நாணயங்களில் அவனின் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளது.

14



படம்-10

மேற்குறிப்பிட்ட நாணயங்களின் சமகாலத்தில் வடஇலங்கையில் புழக்கத்தில் இருந்த சதுர, மற்றும் வட்ட நாணயங்கள் பல கிடைத்துள்ளன. அவற்றில் பாண்டியர் அரச இலட்சனையாகப் பயன்படுத்திய மீனோ, சோழர் பயன்படுத்திய புலிச் சின்னமோ காணப்படவில்லை. மாறா முன்பக்கத்தில் காளை அல்லது யானையும், பின்பக்கத்தில் யானை, குதிரை போன்ற சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இச்சின்னங்கள் ஒரே வடிவத்தில் சதுர மற்றும் வட்ட நாணயங்களில் காணப்படுவதால் வட்ட நாணயங்கள் சதுர நாணய மரபில் இருந்து நிலை மாறும் காலத்தைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது. இதனால் இவ்வட்ட நாணயங்களின் காலத்தை ஒன்பதாம். பத்தாம் நூற்றாண்டாக எடுத்துக்கொள்ளலாம்.

தமிழகத்தில் சங்க காலத்திலிருந்து வெளியிடப்பட்ட தமிழக நாணயங்கள் சமகாலத்தில் இலங்கையுடனான வணிக மற்றும் பண்பாட்டுத் தொடர்பால் இலங்கையிலும் புழக்கத்தில் இருந்தற்கு ஆதாரங்கள் உண்டு.

பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஆயினும் ஒப்பிட்டளவில் இலங்கையில் இவை அரிதாகவே கிடைத்துள்ளன. ஆனால் வடஇலங்கையில் கிடைத்த மேற்கூறப்பட்ட இந்நாணயங்கள் ஒன்று தானும் இதுவரை தமிழக ஆய்வுகளில் கிடைத்ததாகத் தெரியவில்லை. சென்னை, ஈரோடு அருங்காட்சியகத்தில் ஒரிரு நாணயங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தாலம் அவை வட இலங்கையில் கிடைத்ததாகவே அறிய முடிகிறது.

உண்மையில் இவை தமிழ் நாட்டு வம்சங்களால் அந்நாட்டில் வெளியிடப்பட்டிருந்தால் வடஇலங்கையைக் காட்டிலம் அங்குதான் அதிகமாகக் கிடைத்திருக்கும். இதனால் இந்நாணயங்களை இலங்கைத் தமிழருக்குரிய நாணயமாக எடுத்துக் கொள்வதே பொருத்தமாகும்.

---

**பிறந்த கிழமையும்...** (29 ஆம் பக்க தொடர்ச்சி)

இது இவர்களுடன் பிறந்த தனிப்பட்ட சுபாவம்ாகும். இவர்கள் பிறர் யோசனைகளைக் கேட்க மாட்டார்கள். எல்லாம் தனக்குத் தெரிந்தது போல பேசுவார்கள். ஆனால், எந்தக் காரியத்தையும் சாமர்த்தியமாகச் செய்து முடித்துவிடுவார்கள். இவர்களுக்கு 22, 26, 31, 35, 44, 53, 56, 62, 67, 71 வயதுகளில் நல்ல முன்னேற்றத்தை தரும்.

மாதத்தில் வரும் 4, 8, 13, 17, 28, 31 திகதிகளில் இவர்கள் ஆரம்பிக்கும் எந்த ஒரு நல்ல காரியமும் வெற்றியடையும். இந்தத் திகதிகள் திங்கட் கிழமையில் வருமானால் விசேஷ பலனைக் கொடுக்கும்.

**சனிக்கிழமையில் பிறந்தவர்கள்**

சனிக்கிழமையில் பிறந்தவர்கள் பொறுமை சாலிகளாக இருப்பார்கள். பிறர் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் செய்யமாட்டார்கள். இவர்கள் பிறரிடம் தாராளமாகப் பழகமாட்டார்கள். சங்கோஜப் பிராணிகளாகவே இருப்பார்கள். இவர்கள் செய்யக்கூடிய எந்தக் காரியத்திலும் குகை வைக்கமாட்டார்கள். [illegible] என்று இருக்கமாட்டார்கள். தனக்குக் கிடைத்த வேலை எதுவானாலும் சுறுசுறுப்புடன் செய்து முடிப்பார்கள். 'அப்புறம்' பேச்சே இவர்களிடம் காணமுடியாது. பழகிய சிலருடன் ஆழ்ந்த அன்பு வைத்திருப்பார்கள். தன் சமூகத்திற்காக எந்தத் தியாகமும் செய்யத் தயாராக இருப்பர். தன் சமூகத்தில் ஒரு முக்கியஸ்தராகவும் இருப்பர். இவர்கள் நீதிக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கக்கூடியவர்கள்.

பிறரிடம் வீண் விதண்டாவாதம் செய்யமாட்டார்கள்.மேலதிகாரிகள் பெரியோர்களிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொள்வார்கள்.

தங்கள் வாழ்க்கையில் 22, 26, 31, 34, 40, 44, 53, 58, 62, 62 , 67 வயதுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். பிற்காலத்தில் சுகமாக வாழ்வார்கள்.

மாதத்தில் வரும் 4, 8, 13, 17, 26, 31 திகதிகளில் எந்தக்காரியம் செய்தாலும் அதில் நல்ல வெற்றி ஏற்படும்.இந்த திகதிகள் வியாழக்கிழமையில் வந்தார் விசேஷ வெற்றியைத் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்



பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாண வர்களின் அணிவகுப்பை படத்தில் காணலாம்.



மல்லாகம் மகாவித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் அணிநடை நிகழ்வைப் படத்தில் காணலாம்.



தெல்லிப்பழை-மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்களின் அணிநடை நிகழ்வைப் படத்தில் காணலாம்.



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டியில் மாணவர்கள் அணிநடையில் ஈடுபட்டிருப்பதை படத்தில் காணலாம்.



இராமநாதன் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பாண்ட் வாத்திய அணியினரை படத்தில் காணலாம்.



உடுவில் மகளிர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டியின் இடைவேளை நடன நிகழ்வை படத்தில் காணலாம்.



மானிப்பாய் இந்துக் கல்லூரி மெய்வல்லுநர் போட்டியின்போது விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை படத்தில் காணலாம்.



யா/மாதகல் சென். தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலை கால்கோள் விழாவில் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# சவாலாகுமா பாக். அணி...



உலகக்கிண்ணத்துக்கான அனைத்து அணிகளும் தயாரான போதும் சற்று தாமதமாகவே ஒரு முழுமையான கட்டுக்கோப்பினுள் வந்த அணி பாக்கிஸ்தான் அணி இம்முறை உலகக்கிண்ணத்தில் போட்டியிடவுள்ள 14 நாடுகளில் வெற்றி தோல்வியை கணித்துக் கூறமுடியாத அணியாகவே உள்ளது.

கிரிக்கெட் ஆட்ட நிர்ணய மோசடி, கிரிக்கெட் ஊழல்கள் என எப்போதுமே குழப்பம் நிறைந்த அணியாக உலகில் வலம் வரும் அணி இம்முறை உலகக்கிண்ணத்திலும் ஆரம்பத்தில் தமக்குள் குழம்பியநிலையை ஏற்படுத்திக்கொண்டன. இதனால் தன் பலம் பலவீனத்தினை ஏனைய அணிகளுக்குஎடுத்துக் காட்டி நிற்கின்றது.

உலகக்கிண்ணத்துக்கான அனைத்து நாடுகளும் தங்கள் உத்தேச அணியிலிருந்து 15 பேர் கொண்ட அணியினை அறிவித்த போது பாக். அணியும் தமதுஅணியினை அறிவித்து அதன் தலைவர் யார்என்பதில் சரியான முடிவினை எடுப்பதில் சற்று தாமதம் காட்டிவந்தது. அண்மைக்காலமாக அதிரடியில் மிரட்டிவரும் மிஷ்பா உல் ஹக்கினை நியமிப்பதா அல்லது அணியின் நட்சத்திர வீரரான அப்ரிடியை நியமிப்பதா என்ற குழப்பநிலையில் பாக்கிரிக்கெட் சபை இருந்து வந்தது.

இந்நிலையில் அண்மையில் நியூஸிலாந்துடனான ஒரு நாள் தொடரினை கைப்பற்றியதையடுத்து அதற்கு தலைமைவகித்த அப்ரிடியே உலகக்கிண்ணத்துக்கான பாக். அணியின் தலைவராக செயற்படுவார் என பாக். கிரிக்கெட் சபை அறிவித்தது. இதனையடுத்து இம்முறை அப்ரிடியின் தலைமையின் கீழ் களமிறங்குகின்ற பாக். அணி உலகக்கிணத்தில் எதிரணிகளுக்கு சவாலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# உலகக் கிண்ணத்தில் மேற்கிந்திய அணி

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் கிண்ணத்தை கைப்பற்றும் என உறுதியாகக் கணிக்க முடியாமலும், மோசமாகத் தோல்வி தழுவும் என்று நிர்ணயம் செய்ய முடியாமலும் உள்ள ஒரே அணி மேற்கிந்திய அணிதான். ஆனால் ஓரிரு அதிர்ச்சி வெற்றிகளைப் பெற்றால் இந்த அணியின் உணர்வு எந்த அளவுக்கு அதனை உயர்வுக்கு இட்டுச் செல்லும் என்பதையும் எளிதில் கூறவியலாது.

உலக கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்தளிக்க காத்திருக்கின்ற 10 ஆவது உலகக்கிண்ணப் போட்டி ஆரம்பமாவதற்கு இன்னும் 8நாட்களே உள்ளன. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் 13 மைதானங்களில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியில் 14 நாடுகள் களமிறங்குகின்றன.

இதில் ஒவ்வொரு அணியும் ஒரு வகையில் பலம் நிறைந்த அணியாகவே காணப்படுகின்றது. அந்தவகையில் விளையாட்டு உணர்வுகள் நிறையவேபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி இம்முறை உலகக்கிண்ணத்தை கைப்பற்றும் என்பதை விட அனைத்து அணிகளுக்கும் சவாலாக அமையும் என்பதே சிறந்தது. உலகக்கிண்ணத்தில் அவ்வணியின் கடந்த தடங்களைப் பார்க்கும் போது இவ்வுலகக்கிண்ணத்தில் அதன் செயற்பாடு தெளிவாகின்றது.

1975 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை இந்த அணியின் உலகக்கிண்ணப் போட்டிகள் அவ்வளவு மோசமாக இருக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். 57 உலகக் கிண்ணப் போட்டிகளில் இதுவரை ஆடியுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி 35 போட்டிகளில் வெற்றியும் 21 போட்டிகளில் தோல்வியும் தழுவியுள்ளது.

இவ்வணியின் விளையாட்டு உயர்மிக்க பண்புக்கு எடுத்துக்காட்டாக அமைந்தது 1987 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டி. இதில் காலிறுதி ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் கார்ட்னி வால்ஷின் விளையாட்டு உணர்வுடன் கூடிய பெருந்தன்மையான செயல்பாட்டினால் மேற்கிந்திய அணி வெற்றி வாய்ப்பை பாகிஸ்தானுக்கு விட்டுக் கொடுத்தது என்றால் மிகையாகாது.

அதாவது கார்ட்னி வால்ஷ் ஓடி வந்து பந்து வீசாமல் நின்றபோது பாகிஸ்தானின் இறுதித் துடுப்பாட் வீரரான சலீம் ஜாபர் ரன்னர் முனையில் கிரீஸை விட்டு வெகுதூரம் வெளியே சென்றார். அப்போது வால்ஷ் விக்கெட்டினை அகற்றியிருந்தால் மேற்கிந்தியத்தீவுகள்அணி வெற்றியை சுவைத்திருக்கும். ஆனால் அங்கு நடந்த செயல் அனைவரையும் பிரமிக்க வைத்தது. வால்ஷ் அவரை உள்ளே வருமாறு செய்கை செய்தது இன்று வரையிலும் கிரிக்கெட் ஆட்ட உணர்வுக்கு பெரும் எடுத்துக் காட்டாகக் கருதப்படுகிறது. அடுத்த பந்து எதிர் முனையில் இருந்த அப்துல் காதிரால் சிகருக்கு தூக்கி அடிக்கப்பட பாகிஸ்தான் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது என்பது வேறு விடயம்.

1996 ஆம் ஆண்டு மேற்கிந்திய அணி ரிச்சி ரிச்சர்ட்சன் தலைமையில் பிரயன் லாரா என்ற நட்சத்திரத்துடன் சற்றே பலமான அணியாகக் களமிறங்கியது.பந்துவீச்சில் அம்புரோஸ், வால்ஷ், இயன் பிஷப் என்று அச்சுறுத்தும் வரிசை இருந்தது. இதில் பெப்ரவரி 29 ஆம் திகதி மேற்கிந்திய அணியின் கறுப்பு நாள் என்றால் அது மிகையாகாது. ஏற்கனவே இந்தியாவுடன் தோற்று களமிறங்கிய மேற்கிந்திய அணி கென்யா நிர்ணயித்த 167 ஓட்ட இலக்கை எதிர்த்து ஆடிய போது 93 ஓட்டங்களுக்குள் சுருண்டு அதிர்ச்சித் தோல்வி தழுவியது. ஆனால் இத் தொடரில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி அனைவரையும் பிரமிப்புக்குள்ளானது. ஜெய்ப்பூரில் நடைபெற்ற அந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா ரிக்கி பொன்டிங்கின் சதத்துடன் 50 ஓவர்களில் 229 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இதில் இலக்கைத் துரத்திய மேற்கிந்திய அணியில் பிரையன் லாரா 60 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தபோது 113/3 என்று தத்தளிக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டது. இறுதியில் ரிச்சர்ட்சன் 93 ஓட்டகளை எடுக்க ஜிம்மி ஆடம்சுடன் வெற்றியைச் சாதித்து மேற்கிந்திய அணி காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

இவ்வாறு பல சவால்களையும் எளிதாக எதிர்கொண்டு வந்த மேற்கிந்தியதீவுகள் அணி இம்முறை பிரகாசிக்கும் என்பது மறுப்பதற்கில்லை. அதன் நம்பிக்கை துடுப்பாட்ட வீரரான கெயில் கைகொடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. இருந்தும் இவரது அண்மைக்கால ஆட்டங்கள் மந்தகதியில் இருப்பதினைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அண்மையில் இலங்கை அணியுடனான ஒரு நாள் தொடரினை இழந்த போதிலும் அதில் அதன் போட்டித்தன்மை குறைவடையாததினைக் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

எவ்வாறாயினும் இம்முறை உலகக்கிண்ணத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணியை சந்திக்கவுள்ள அணிகள் போராடவேண்டியநிலை உருவாகும் என்பது மறுப்பதற்கில்லை.



Printed and published by Express Newspapers (Cey) Ltd. at No. 185, Grandpass Road, Colombo 14. On Friday February 11, 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org